Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 207 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 7, வெள்ளி 21.06.2013


**இந்தியா**



பக். 06

இலங்கை இராணுவத்தினர் திருப்பி அனுப்பப்படுவார்கள் மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறுகின்றார்

**உலகம்**



பக். 07

ஐ.நா. அலுவலகம் மீது மனிதக் குண்டுத் தாக்கு

**விளையாட்டு**



பக். 23

விம்பிள்டனில் இருந்து விலகினார் வீனஸ்


# புலிகளுடன் தமிழரின் பிரச்சினை தீரவில்லை

## '13' ஐ ஒழிக்கவிடோம் எனவும் கூட்டமைப்பிடம் இந்தியா உறுதி

கொழும்பு, ஜூன் 21
''வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகள் அழிந்துவிட்டார்கள்; எனவே தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டது என்று இலங்கை அரசு நினைக்கின்றது. ஆனால், போர் முடிவடைந்த பின்னர்தான் தமிழ் மக்கள் ஏராளம் பிரச்சினைகளை எதிர்நோக்குவதை நாம் அவதானிக்கின்றோம். இந்நிலையில், தீர்வுக்கு அடித்தளமாகவுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு ஒழிக்க விடமாட்டோம். அதற்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுப்போம்.''
- இவ்வாறு புதுடில்லி சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவிடம் இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.
இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனும் நேற்று 'உதயனி'டம் உறுதிப்படுத்தினார்.
இந்திய மத்திய அரசுடன் பேச்சுநடத்த புதுடில்லிக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் நேற்று அதிகாலை நாடு திரும்பினர். அங்கு நடத்திய பேச்சுத் தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனி'டம் தெரிவித்தவை வருமாறு:-
இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், வடக்கு மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்ட பல விடயங்களை இந்திய மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

> “ இந்திய மத்திய அரச தரப்பினர் எமக்களித்த பதில்கள் திருப்திகரமாக இருந்தன.

இந்தப் பேச்சுகளில் இந்திய மத்திய அரச தரப்பினர் எமக்களித்த பதில்கள் திருப்திகரமாக இருந்தன.
13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சட்டத்தை இல்லாதொழிக்க இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று இந்தியப் பிரதமர் எம்மிடம் நேரில் உறுதியளித்துள்ளார்.
தான் நினைத்த மாதிரி இலங்கை அரசு செயற்படுவது தப்பானது எனவும் எம்முடன் நடைபெற்ற பேச்சின்போது இந்திய மத்திய அரச தரப்பினர் தெரிவித்தனர்- என்று தெரிவித்தார் சுரேஷ். (த-சி)

## மீனவர்கள் அவதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரையும் மற்றும் மன்னாரிலிருந்து பொத்துவில் ஊடாக காலி வரையினதுமான கடற் பிரதேசங்களில் நேற்று மதியம் ஒரு மணி முதல் அடுத்த 24 மணி நேரத்துக்கு, மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும்.
இதனால் மீனவர்களை அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது. (த-5)

## வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய

தொடர்ச்சி: பக்கம் 21

## பிரபாகரன் போன்றவர் மன்னார் ஆயர்

கொழும்பு, ஜூன் 21
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போலவே மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை செயற்படுகின்றார். வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளை வழங்க அவர் மறுத்தால் பிரபாகரனுக்கும் அவருக்கும் வித்தியாசமில்லாது போய்விடும். ஆயரின் செயல் எமக்குக் கவலையளிக்கிறது.
இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும்

தொடர்ச்சி: பக்கம் 21

# '13' இல் திருத்தங்கள் உறுதி சவாலை சந்திக்கவும் தயார்

## '13 பிளஸ்' என்பது கூடலாம் குறையலாம் என்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 21
13ஆவது திருத்தச்சட்டம் குறித்து இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளுடன் நாம் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளை அப்படியே நடைமுறைப்படுத்த முடியாது. இது தொடர்பில் எதிர்காலத்தில் வரும் சவால்களுக்கும் நாம் முகங்கொடுப்போம்.



- இவ்வாறு அரசு நேற்றுத் தெரிவித்தது.
'13 பிளஸ்' என்பது, அதில் இரண்டு விடயங்கள் குறையலாம் அல்லது கூடலாம். ஆனால் அதிகாரப்பகிர்வு அர்த்தமுள்ளதாக்கப்பட வேண்டும், பொலிஸ், காணி அதிகாரங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, 13 விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் கவலை வெளியிட்டுள்ளமை தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் கூறினார். (த-சி)

# பொலிஸ் அதிகாரம் வழங்கவே மாட்டோம்

## அதனை இந்திய அரசிடமும் கூறியுள்ளோம் என்கிறார் கோத்தா

கொழும்பு,ஜூன் 21
மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போவதில்லை என்று இலங்கை அரசு, இந்தியாவுக்கு அறிவித்துள்ளதாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
நானும் ஜனாதிபதியும் இந்திய உயர் அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்புகளின் போது, மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது, தேசிய நலன்களுக்கு, குறிப்பாக அரசியல் உறுதிப்பாட்டுக்கு ஆபத்தானது என்பதை எடுத்துக்



கூறியுள்ளோம். இலங்கை - இந்திய உயர் மட்டக்குழுக்கள் நிலையிலான பேச்சுக்களில் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக்

தொடர்ச்சி: பக்கம் 21

# இலங்கை - இந்திய ஆட்டத்தில் புலிக்கொடி






லண்டன்,ஜூன் 21
சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நடந்த கார்டிஃப் நகர மைதானத்தின் முன்பாக இலங்கைக்கு எதிரான போராட்டம் ஒன்று புலம்பெயர் தமிழர்களால் நேற்று நடத்தப்பட்டுள்ளது.
அதேவேளை புலிக்கொடிகளை ஏந்திய தமிழ் இளைஞர்கள் பலர் ஒரே நேரத்தில் ஆட்டம் நடந்த மைதானத்தில் இரு தடவைகள் நுழைந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்

தொடர்ச்சி: பக்கம் 21

# ஆஸி. தமிழ் அகதிகளை அழைக்கிறது இலங்கை

கான்பரா,ஜூன் 21
போரினால் நாட்டிலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீள நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஆஸ்திரேலியாவின் முன்னணி ஊடக நிறுவனமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அமைச்சர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
இலங்கை தற்போது அமைதியான ஒரு நாடாக மாறியுள்ளதெனவும் அந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு அமைவாக வடபகுதியிலும் மும்மடங்கு வேகத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அதில் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை கடற் பயணங்களை மேற்கொள்வதற்கு

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் இன்னமும் 60,000 ஈழ அகதிகள்

## நாடு திரும்புவோர் எண்ணிக்கையும் குறைவு

சென்னை, ஜூன் 21

தமிழ் நாட்டில் இன்னமும் ஈழ அகதிகள் 60 ஆயிரம் பேர் வரை இருப்பதாகவும் போர் முடிந்ததன் பின்னர் கடந்த 3 வருடங்களில் நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதாகவும் ஐ.நா. அகதிகள் பேரவையின் இந்தியக் கிளை தெரிவித்துள்ளது.

ஐ.நா. அகதிகள் பேரவையின் இந்தியக் கிளையை- மேற்கோள் காட்டி ''நியூ இந்தியன் எக்ஸ் பிறஸ்'' வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 40 பேரும், 2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 670 பேரும், 2012 ஆம் ஆண்டு ஆயிரத்து 264 பேரும் இந்த



ஆண்டு இதுவரையிலான காலப் பகுதியில் 350 பேரும் நாடு திரும்பியுள்ளனர்.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள பெரும்பாலான அகதிகள் இந்தியாவில் கிடைக்கின்ற மருத்துவ வசதி மற்றும் கல்வியைக் காரணம் காட்டியே இலங்கை திரும்ப மறுக்கின்றனர். எந்தவொரு நபரும் தமது பாது காப்பைக் காரணம் காட்டி இலங்கை திரும்ப மறுக்கவில்லை.

அகதிகள் இலங்கை திரும்பிய பின்னரும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் ஐ.நா. அகதிகள் பேரவை கவனம் செலுத்தி வருகின்றது. -என்றுள்ளது.

இதேவேளை, தமிழ் நாட்டில் இன்னமும் 60 ஆயிரம் அகதிகள் தங்கியிருப்பதாகவும் இது இந்தியாவில் தங்கியுள்ள அகதிகளின் 36 சதவீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# கடமைகளை ஏற்றார் புதிய இந்திய தூதர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கைக்கான இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள யஷ்வர்தன் குமார் சின்ஹா கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பை வந்தடைந்து தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார் என இந்தியத் துணைத்தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1958 ஆம் ஆண்டு பிறந்த சின்ஹா டில்லி பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறையில் பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்த பின் இந்திய வெளி நாட்டுச் சேவையில் 1981 ஆம் ஆண்டு இணைந்தார்.

32 வருட இராஜதந்திர வாழ்வில், புதுடில்லியிலுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சிலும் மத்திய கிழக்கு, ஐரோப்பா, தென்னமெரிக்கா ஆகிய இடங்களிலுள்ள இந்தியத் தூதரகங்களிலும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமைச் செயலகத்துக்கான இந்தியாவின் நிரந்தர தூதரகத்திலும் பல்வேறு முக்கியமான பொறுப்புக்களை வகித்துள்ளார்.

இலங்கைக்கு தூதுவராக வருவதற்கு முன்னர் டில்லியிலுள்ள

> 2007 ஜனவரி முதல் 2009 ஓகஸ்ட் வரை வெனிசுலாவுக்கான தூதுவராகவும், 2003 ஓகஸ்ட் முதல் 2006 டிசெம்பர் வரை டூபாய்க்கான துணைத் தூதுவராகவும் பணியாற்றினார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் - ஈரான் பிரிவில் மேலதிகச் செயலாளராகக் கடமையாற்றினார்.

2007 ஜனவரி முதல் 2009 ஓகஸ்ட் வரை வெனிசுலாவுக்கான தூதுவராகவும், 2003 ஓகஸ்ட் முதல் 2006 டிசெம்பர் வரை டூபாய்க்கான துணைத் தூதுவராகவும் பணியாற்றினார். இதற்கு முன்னதாக அபுதாபியிலுள்ள துணைத் தூதரகத்தின் துணைத் தலைவராகவும் 2002 மார்ச் முதல் 2003 ஜூலை வரை கடமையாற்றியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# பழைய பூங்கா புனரமைப்பு இரண்டாம் கட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடந்த ஆண்டு சர்ச்சைகளை ஏற்படுத்திய பழைய பூங்காவின் புனரமைப்புப் பணிகளில், அடுத்த கட்டப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழைய பூங்காவைப் புனரமைப்புச் செய்வதற்குக் கடந்த ஆண்டு வடமாகாண சபை நடவடிக்கை எடுத்தது. இதன் போது பழைய பூங்காவின் மதில்கள் இடிக்கப்பட்டன.

இதற்கு அப்போதைய யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், பழைய பூங்கா தொல்லியல் சின்னமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதால் அதில் மாற்றங்கள் செய்ய முடியாதெனவும் தெரிவித்திருந்தார்.

தற்போது எந்தவித எதிர்ப்புமின்றி பழைய பூங்காவின் இரண்டாம் கட்டப் புனரமைப்புப் பணிகளை வடமாகாண சபை முன்னெடுத்துள்ளது.

பழைய பூங்காவினுள் 13 மில்லியன் ரூபா செலவில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரில் கட்டடங்கள் நிறைந்த நகரப் பகுதியில் இந்தப் பூங்கா ஒன்றே அமைந்துள்ளது. இந்தப் பூங்கா யாழ்ப்பாணத்தின் இதயம் என்று சொல்கின்ற சூழலியலாளர்கள், நகரின் ஒட்டுமொத்த காபனீரொட்சைட்டையும் பூங்காவிலுள்ள மரங்களே உறிஞ்சுகின்றன. இதனால் சூழல் சமநிலை பாதிக்கப்படாது. ஆனால் பழைய பூங்காவில் உள்ள மரங்களை அழித்துப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் இயற்கைச் சமநிலை குழப்பமடையும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். (த-5)

# சிசுவின் சடலம் குப்பைக்குள் மீட்பு

பத்தரமுல்ல, தெற்கு தலங்கம பகுதிக்கு அருகில் குப்பைகள் போடப்பட்டிருந்த பையொன்றிலிருந்து சிசுவொன்றின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடுவெல மாநகரசபையின் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை குப்பைகளைச் சேகரித்துக்கொண்டிருந்த போதே இந்தச் சடலத்தைக் கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணையைத் தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# தனியார் பஸ்களில் ஜி.பி.எஸ். கருவிகள்




கொழும்பு,ஜூன் 21

தனியார் பஸ் சாரதிகளுக்குக் குறைந்தபட்ச கல்வித் தகைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அன்றாடம் இடம்பெறுகின்ற பஸ் அனர்த்தங்களைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகைய மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஹான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜி.பி.எஸ் எனும் நவீன கருவி மூலம் வாகனங்களின் வேகம் ஆணைக்குழுவினால் தற்போது கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோன்று சுமார் மூவாயிரத்து 200 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், 678 பஸ்களில் மாத்திரம் இந்தக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த மாத இறுதிக்குள் மேலும் ஆயிரம் பஸ்களில் ஜி.பி.எஸ் கருவிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (த)

# கலக்கத்தில் இந்தியா

## கூறுகிறார் மன்மோகன்


யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கை அரசின் நடவடிக்கைகள் இந்தியாவை கலக்கமடையச் செய்திருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், பி.செல்வராஜா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை உள்ளடக்கிய குழு இந்திய வெளிவிவகார அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்தது.

இந்தச் சந்திப்பின் போது



கருத்துத் தெரிவித்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் முக்கியமான சில சரத்துக்களை நீர்த்துப் போகப் செய்வதற்கு இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் கலக்கமடைந்திருக்கின்றோம்.

திட்டமிடப்படும் மாற்றங்கள் இலங்கை அரசால் இந்தியாவுக்கும், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கும் வழங்கப்பட்ட 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை எட்டுவது தொடர்பான வாக்குறுதிகள் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

அவ்வாறான மாற்றங்கள் இலங்கை அரசால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும்படி அரசியல் தீர்வுக்கு அழைப்பு விடுத்த பரிந்துரைகளுக்கு ஒவ்வாததாக அமையும்.

தமிழ்ச் சமுதாயத்தினுடைய நலனிலும், நல்வாழ்விலும் ஆழ்ந்த கரிசனை கொண்டிருக்கின்றோம். இலங்கை தமிழ் சமூகம் கௌரவமான பிரஜைகள் என்ற அந்தஸ்துடையவர்களாக வாழ்க்கையை நடத்த வேண்டும்.

சமத்துவம், நீதி, சுய கௌரவம் என்பவற்றில் கட்டியமைக்கப்பட்ட தமிழ் சமூகத்தினுடைய எதிர்காலத்துக்காக இந்தியா சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் - என்று கூறினார். (த-5)

# தனித் தமிழ்த் தாயகம் ஒருபோதும் பலிக்காது

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 21

விடுதலைப் புலிகள் துப்பாக்கிகளின் மூலம் அடைய நினைத்ததை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியாக அடைவதற்கு அரசு ஒரு போதும் இடமளிக்காது என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தனித் தமிழ் தாயகம் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் செய்யக் கூடியது ஒன்று [illegible] காரத்தை பின்தள்ளிப் போடலாம். அது தமிழ் மக்களுக்குத் தீங்கானது.

எதைச் செய்ய வேண்டுமானாலும், அவர்கள் தெரிவுக்குழு முன் தோன்றவேண்டும்.

தற்போதைய பிரச்சினைக்கு இலங்கை அரசினாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் தனித்துத் தீர்வு காணமுடியாது. அவர்கள் ஒரு ஜனநாயக வழிமுறைக்கு வந்தால், அந்த வழியிலேயே தொடர்ந்து நிற்க வேண்டும். விடுதலைப் புலிகளின் வழியைப் பின்பற்ற முயற்சித்தால், அரசு அதைப் பொறுத்துக் கொண்டிருக்காது.

தெரிவுக்குழுவில் பங்கேற்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தேசிய பிரச்சினை தீர்க்கப்படுவதில் விருப்பமில்லை.

தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்குமாறு அண்மையில், இரா.சம்பந்தனிடம் ஜனாதிபதி கேட்டிருந்தார். ஆனால், சம்பந்தன் அந்த அழைப்பை நிராகரித்து விட்டார்- என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஆளரவம் இல்லை
# அதிகாலைவேளை பிரசவம் நடந்தது ஓட்டோவிலேயே
## கடமையில் இருந்தவர்கள் அறைகளில் உறக்கம்

பளை, ஜூன் 21

சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து ஓட்டோவில் அதிகாலை வேளை கொண்டு வரப்பட்ட இளம் கர்ப்பிணித் தாயைப் பொறுப்பேற்க சாவகச்சேரி வைத்தியசாலையில் எவரும் இல்லாததால் ஓட்டோவினுள் பிறந்தது குழந்தை.

ஓட்டோவில் குழந்தை பிறந்த பின்னர் ஓட்டோவை அதன் சாரதி பிரசவ விடுதி வரை கொண்டு சென்று அங்குள்ளவர்களைத் தட்டி எழுப்பி தாயையும் பிள்ளையையும் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணிக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இடம் பெற்றது.

புலோப்பளை மேற்கைச் சேர்ந்த இளம் கர்ப்பிணி தாய்க்கு பிரசவ வலி ஏற்பட்டது. அதை அடுத்து அவசர அவசரமாக அவர் பளை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார். அங்கு எவரும் கடமையில் இல்லை. வழமையாகவே வைத்தியசாலை இரவில் இயங்குவதில்லை.

அம்புலன்ஸ் உள்ள போதும் அதனை பயன்படுத்தத் தக்க வகையில் சாரதியோ வேறு ஊழியர்களோ அங்கு கடமையில் இருக்கவில்லை.

பிரசவத் தாயைக் கூட்டி வந்தவர்கள் என்ன செய்வது எனத் தடுமாறினர். கர்ப்பிணித் தாய் வேதனையில் பெரும் சிரமப்பட்டார். ஓட்டோ புறப்பட்டது சாவகச்சேரியை நோக்கி.

அதிகாலை வேளை என்பதால் ஓட்டோவைச் சாரதி வேகமாகச் செலுத்தினார். மிகக் குறுகிய நேரத்தில் ஓட்டோ சாவகச்சேரி வைத்தியசாலையைச் சென்றடைந்தது.

கர்ப்பிணிப் பெண்ணைக் கூட்டிச் சென்றவர்கள் வெளிநோயாளர் பகுதியில் எவரும் தென்படுகிறார்களா எனத் துழாவினர்.

> ஓட்டோவில் குழந்தை பிறந்த பின்னர் ஓட்டோவை அதன் சாரதி பிரசவ விடுதி வரை கொண்டு சென்று அங்குள்ளவர்களைத் தட்டி எழுப்பி தாயையும் பிள்ளையையும் ஒப்படைத்தார்.

கடமையில் எவரும் அங்கிருக்கவில்லை.

ஓட்டோவில் வந்தவர்கள் ஒன்றும் புரியாமல் திகைத்து நிற்கையில் ஓட்டோவினுள் குழந்தையை பிரசவித்து விட்டார் அந்தத் தாய். நிலைமையை புரிந்து கொண்ட சாரதி தாயையும் குழந்தையையும் ஓட்டோவில் வைத்தியசாலை பிரசவ விடுதிக்கே கொண்டு சென்றார். அங்கிருந்தவர்களை தட்டி எழுப்பி தாயையும் பிள்ளையையும் ஒப்படைத்தார்.

பிரசவ விடுதியில் கடமையாற்றியவர் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்து பதிவுகளை மேற்கொண்டார். அதேவேளை வெளிநோயாளர் பிரிவில் இரவு கடமையாற்ற வேண்டிய தாதிய உத்தியோகத்தர், சிற்றூழியர்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் அனைவருமே வைத்தியசாலை அறைகளுக்குள் நித்திரையில் இருந்தனர் என்றும் தூரத்திலிருந்து சென்ற தமக்கு இதுபற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை என்றும் அழைத்துச் சென்றவர்கள் தெரிவித்தனர். (ஒ)

# நெடுந்தீவு கடல் போக்குவரத்து சேவைக்கு தனி நிர்வாகம் தேவை
### அந்தப் பகுதி முன்னேற்றக் கழகம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21



நெடுந்தீவுக்கான கடல்போக்குவரத்துச் சேவைக்கு தனியான நிர்வாகப் பிரிவு ஒன்றை நெடுந்தீவில் அமைக்க வேண்டும் என 1974களில் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் விடுத்த கோரிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை நெடுந்தீவு கடல்போக்குவரத்தில் பாராமுகமாகவே தொடர்ந்தும் உள்ளதாகக் குற்றச் சாட்டும் நெடுந்தீவு மக்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் இருந்து நெடுந்தீவு படகுச் சேவைக்கு தனியான நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தி அதன் கட்டுப்பாட்டில் விட வேண்டும். அல்லது இந்தச் சேவையைச் சீராக நடத்தக் கூடிய வேறு ஒரு சபை யிடம் கையளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றனர்.

குமுதினிப் படகு சமீபத்தில் திருத்தம் செய்து சேவைக்கு விடப்பட்டு மீண்டும் பழுதடைந்துள்ளது. கடந்த ஐந்து தினங்களுக்கு மேலாக குமுதினி படகு கவனிப்பாரின்றி நெடுந்தீவு துறைமுகத்தில் தரித்து நிற்கிறது. படகில் ஏற்பட்டது சிறிய சேதமாக இருந்தும் அதைத் திருத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை இதுவரை அக்கறை செலுத்தாத நிலையில் நெடுந்தீவுக்கான படகுச் சேவைகளும் சீர் குலைந்துள்ளன.

படகின் சிறிய பழுதுகளைத் திருத்தவென பொறியியலாளர் இருந்த போதும் கூட அவர் நெடுந்தீவுக்கு இதுவரை வந்து சேரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-7)

# முகாமைத்துவ உதவியாளர் தெரிவில் நேர்முகத் தேர்வு இடம்பெறவில்லை
### சிற்றூழியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

திணைக்களங்களில் சிற்றூழியர்களாகப் புணியாற்றுபவர்களை முகாமைத்துவ உதவியாளர்களாகப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்திலுள்ள திணைக்களங்களில் சிற்றூழியர்களாகப் பணியாற்றுபவர்களை முகாமைத்துவ உதவியாளர்களாகப் பதவி உயர்த்துவதற்காக நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் 42 பேர் சித்தியடைந்தனர். அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவில்லை.

இந்த நிலையில் வடமாகாணத் தேர்தலுக்குரிய திகதியாக எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு அறிவிக்கப்படும் பட்சத்தில் அந்தக் காலப் பகுதியில் நேர்முகத் தேர்வுகளோ பரீட்சைகளோ நடத்தமுடியாது. அத்துடன் 3 மாதங்களுக்குள் உரிய நியமனங்கள் வழங்கப்படாது விட்டால் பரீட்சைப் பெறுபேறுகள் காலாவதியாகிவிடும் என பரீட்சையில் சித்தியடைந்த சிற்றூழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு உடனடியாக நேர்முகத் தேர்வுகளை நடத்தி பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரீட்சையில் சித்தியடைந்த சிற்றூழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-400)

# 2009இற்குப் பின்னர் புதிதாக 9 வங்கிகள் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 21

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து வடக்கில் 9 வங்கிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 121 கிளைகளும் திறக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு வரையில் 10 வங்கிகளும் 74 வங்கிக் கிளைகளும் 38 விரிவாக்கல் கிளைகளுமே வடமாகாணத்தில் இயங்கி வந்தன.

போர் முடிவடைந்த பின்னர் கடந்த 3 வருடகாலத்தில் 9 வங்கிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் 121 வங்கிக் கிளைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> வடமாகாணத்தில் தற்போது 19 வங்கிகளும் 148 வங்கிக் கிளைகளும் 85 விரிவாக்கல் கிளைகளும் சேவையை வழங்குகின்றன.

வடமாகாணத்தில் தற்போது 19 வங்கிகளும் 148 வங்கிக் கிளைகளும் 85 விரிவாக்கல் கிளைகளும் சேவையை வழங்குகின்றன.

போர் முடிவடைந்த ஓரிரு வருடங்களில் புதிதாக வங்கி கள் திறக்கப்பட்டபோதும் தற்போது மேலும் புதிதாக வங்கிகள் திறப்பதில் ஆர்வம் காட் ப்படுவதில்லையென்று இலங்கை மத்திய வங்கித் தக வல்கள் தெரிவிக்கின்றன. (வ-5)

# ஏட்டிக்குப் போட்டியாக தெற்கு வியாபாரிகள்
## யாழ். வர்த்தகர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

குடாநாட்டில் இந்திய வர்த்தகர்களின் புடைவை வியாபாரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும் தென்னிலங்கை வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் தாராளமாக இடம்பெற்று வருவதாக யாழ்ப்பாண வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பண்டிகைக் காலங்கள் உட்பட திருவிழாக் காலங்களிலும் பெருமளவான இந்திய வர்த்தகர்கள் குடாநாட்டுக்குள் உள் நுழைந்து தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். குறிப்பாக வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு நேரடியாகச் சென்று கடன் அடிப்படையில் புடைவை களை விற்பனை செய்து வந்தனர்.

இதனால் குடாநாட்டு வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்தன. இது தொடர்பாக யாழ்.மாநகர சபை மற்றும் வணிகர் கழகம் இந்தியத்துணைத் தூதரகத் தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து இந்திய வியாபாரிகளின் வருகை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் தற்போது குடாநாட்டு வர்த்தர்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிப்படையக் கூடிய வகையில் ஏட்டிக்குப் போட்டியாக தென்னிலங்கை வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்ந்துள்ளன. இதன் காரணமாக குடாநாட்டு வர்த்தர்கள் தமது வியாபாரத்தில் உரிய இலாபம் பெற முடியாமலும் சந்தை வாய்ப்பு இல்லாமலும் வர்த்தக நிலையங்களை இழுத்து மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



ஆலயத் திருவிழாக்கள் உட்பட பண்டிகைக் காலங்களிலும் தென்னிலங்கை வியாபாரிகள் வாகனங்கள் மூலமாக நடமாடும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

# அரியாலைப் பகுதியில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 21

அரியாலை மூன்றாம் கட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சி.டி.பிளேயர் என்பன திருடப்பட்டுள்ளன.

குறித்த வீட்டின் உரிமையாளர் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த வேளை வீட்டின் சுவாமி அறைக்குள் உள்நுழைந்து அங்கிருந்து பொருள்களைத்



தூக்கி எறிந்து விட்டு சூட்கேசில் வைக்கப்பட்டிருந்த 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அருகில் இருந்த சி.டி. பிளேயர் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

தீடிரென நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வீட்டு உரிமையாளர் வந்து பார்த்த போது திருடர்கள் வந்திருந்ததை வீட்டு உரிமையாளர் அறிந்துள்ளார்.

அரியாலை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த ரி.ரமேஷ் என்பவரது வீட்டிலேயே இந்த களவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு தெரிவித்துள்ளார். (வ-14)

# சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.மின்சார நிலைய வீதியில் தனியார் கல்வி நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் திருட்டுப் போயுள்ளதாக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்தியடியைச் சேர்ந்த யுவதியின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
வி.விமலச்சந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை

### சிற்றம்பலம் விசுவநாதர்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி.**

## மரண அறிவித்தல்

"கிறிஸ்துவுக்குள் இதுவரை மரிக்கின்றவர்கள் பாக்கியவான்கள்"

### ஜேசுராஜரஞ்சன் பிறின்ஸ்லி நிஷாந்



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட யே. பிரின்ஸ்லி நிஷாந் (20.06.2013) வியாழக்கிழமை கர்த்தருக்குள் மரித்துவிட்டார்.

அன்னார் யேசுராஜரஞ்சன்(இளைப்பாறிய ஆய்வு கூட தொழில்நுட்ப உதவியாளர், பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலை), புவனேஸ்வரி(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேதநாயகம்-தங்கம்மா, சின்னத்தம்பி-செல்வதி ஆகியோரின் அன்புப் பேரனும், எஸ்தர் ராஜினி, வெஸ்லி பிரசாந்(நிறைவேற்றுனர், செலிங்கோ நெல்லியடி), எட்வின் சபேசன்(சிங்கர், பருத்தித்துறை) ஆகியோரின் சகோதரனும், அகலியா, ஜென்சி ஆகியோரின் மைத்துனரும், சபீனா, ஸ்ரீபனி, ஹர்ஷாந், லஷாரோ ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(21.06.2013) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லதில் பி.ப.3.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலா நிலையம்,
வதிரி.
077 2208260

தகவல்:
யே. வெஸ்லி பிரசாந்
(சகோதரன்)

## மின் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்துவதாற்காகவும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிமுதல்மாலை 5.30 மணிவரை மின் சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, பண்ணைப் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு குருநகர், பாசையூர், நாவற்குழிச் சந்தியிலிருந்து கேரதீவு வீதிப் பிரதேசம், நாவற்குழி, தனங்கிளப்பு மறவன்புலோ, தச்சன் தோப்பு, அச்சுவேலி, இடைக்காடு, பத்தைமேனி, வளலாய் மற்றும் தொண்டைமனாறு வீதிப்பிரதேசம் ஆகிய பகுதி களுக்கே மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (த-400)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி விஸ்வநாதீஸ்வரன் (மல்லிகா)



வேலணை மேற்கு, சிற்பனையை பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, வண்ணாம்புலத்தில் வசித்தவரும் தற்போது சுவிஸில் வசித்தவருமாகிய பரமேஸ்வரி விஸ்வநாதீஸ்வரன் கடந்த (18.06.2013) செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவகுரு- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விஸ்வநாதீஸ்வரனின் அன்பு மனைவியும் சிவகுமார் (லண்டன்), ஜெயகுமார் (ஜேர்மனி), ரவிக்குமார் (R.K.Motors, யாழ்ப்பாணம்), மலர்விழி (சுவிஸ்), கயல்விழி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் வாசுகி (லண்டன்), திருவேணி (ஜேர்மனி), கலையமுதா (யாழ்ப்பாணம்), செல்வக்குமார் (சுவிஸ்), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சுவேதிகா, சுகன்யா, சுஜிதன், தனுஷா, யதுஷா, சாரங்கா, சாரங்கன், சுலக்ஷன், டிலக்ஷன், சுவேதா, அஜய், அஸ்வினி, அபினாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இந்திராவதி மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் அரசரட்ணம், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கதிரவேலு, காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், சண்முகம், இராஜேஸ்வரி மற்றும் சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (25.06.2013) செவ்வாய்க்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*66/16, இந்து மகளிர் ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(38562)

*தகவல்:*
*வி.ரவிக்குமார் (மகன்)*
R.K.Motors *(ஸ்ரான்லி வீதி)*

### திருமதி மாலதி விஜேந்திரன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலதி விஜேந்திரன் நேற்று (20.06.2013) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொற்கொடி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - இராசலெட்சுமி தம்பதியரின் மருமகளும், விஜேந்திரன் (Benny) அவர்களின் அன்பு மனைவியும், சிறீறாம், கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தாயும், கங்காதரன், மகேந்திரன், குகேந்திரன், குமாரசாமி, ரஞ்சினி, பகீரதன், சாந்தினி, தயாளினி, அமிழ்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலாதேவி, தேவராணி, இராஜேஸ்வரி, பெலிசியா, சந்திராதேவி, சிவசுப்பிரமணியம், சாந்தரூபன், மோகனதாஸ், இந்திரஜித் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***சம்பத் வங்கி ஒழுங்கை, பலாலி றோட்,***
***திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.***
***தொ.பே. 021 373 5624,***
***0044 208 8932 195 - லண்டன்.***

தகவல்:
**சு. கங்காதரன்**
(சகோதரன்)
(38505) (45.6.3)

## முதலாம் ஆண்டு சிரார்த்தமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

*அமரர்*

### தவபாலன் கிரீதரன் (கபிலன்)




01.07.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புச் செல்வம்

***அமரர் தவபாலன் கிரிதரன் (கபிலன்)***

அவர்களின் ஓராண்டு சிரார்த்த தினமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அவரது இல்லத்தில் இன்று (21.06.2013) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வதிரி வீதி,**
**இமையாணன் மேற்கு,**
**உடுப்பிட்டி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### விஜயகுமார் டினேஸ் சுஜித்



சுவிஸைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகுமார் டினேஸ் சுஜித் கடந்த (19.06.2013) புதன்கிழமை சுவிஸில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் விஜயகுமார் லலிதாதேவியின் ஏக புதல்வனும், அபிசாவின் அன்பு அண்ணாவும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் லட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கணேசப்பெருமாள்- உமாமகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், கோகிலாகுமார் (வவுனியா), உதயகுமார் (சுவிஸ்), சிறிக்குமார் (சுவிஸ்), மகேந்திரன் வசந்தாதேவி (உடுவில்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், குஞ்சரநாதன் உமாதேவி (உடுவில்), பாலச்சந்திரன் பிரதீபா (கொழும்பு), மகேந்திரராஜா இந்துமதி (லண்டன்) ஆகியோரின் மருமகனும், திருச்செல்வம் விஜிதா (லண்டன்), விஜீபன் (உடுவில்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


**சோமராந்தோட்டம்,**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**
**021-3001001, 0041332216184**

தகவல்:
**பெரியப்பா, பெரியம்மா**
**(உடுவில்)**

(38561) (10,7,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல் வளர்த்து விற்பனை செய்வோருக்கு மானியம்



வலி.வடக்கு, ஜூன் 21
கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கால்நடைகளுக்கான புல் வளர்த்து விற்பனை செய்வதற்கான தொழில் முயற்சியை மேற்கொள்பவர்களுக்கு மானியம் வழங்கி ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான சுற்றறிக்கை கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி திணைக்களத்தால் அனைத்து மாகாணப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
புல் வளர்ப்பை ஒரு தொழிலாக குறைந்தது 3 ஆண்டுகளுக்கு உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான நிலத்தைக் கொண்டிருப்பதுடன் புல் வளர்ப்பில் ஆர்வம் உடையவராகவும் குறித்தளவு அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.
இத்தகையவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு உட்பட 50 வீத மானியமாக புல் நடுகைப் பொருள்கள், புற்தண்டு அல்லது செடி, நீர் இறைக்கும் இயந்திரம், நீர் தெளிக்கும் உபகரணம், புல் வெட்டும் இயந்திரம், புல் துண்டமாக்கும் இயந்திரம் என்பன வழங்கப்படும்-என்றுள்ளது. (வ-86)

# ஊடகங்களின் தேவை அவசியமான காலம் இது

## யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி



யாழ்ப்பாணம், ஜூன் 21
''ஊடகத்தின் தேவை அவசியமான காலகட்டம் இது. இதனூடாக சாதிக்க முடிவது ஏராளம் என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.
நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகப் பொருளியற் துறை மண்டபத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறை மாணவன் ஜே.எஸ்.ராஜ்ஜின் 'உயிர்த்தெழும் வலிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பல்கலைக்கழக பாடப் பரப்பினைக் கடந்து மாணவர்கள் கவிதை நூல் வெளியிடுவது அவர்களின் சமூகப் பொறுப்பினை எடுத்துக் காட்டுகின்றது. அதன் ஒரு கூறுதான் இன்றைய 'உயிர்த்தெழும் வலிகள்'. பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலத்தில் பல்கலை சமூகத்தினர் கூடி சமூகம் பற்றிக் கலந்துரையாடுவோம். அந்த நிலைமை இன்றும் உள்ளது மகிழ்வான விடயம். பொறுப்புணர்வோடு வெளிவந்துள்ள ராஜ்ஜின் கவிதைகள் கனவல்ல. இவை சாட்சியங்கள். இந்தக் கவிதைகளுக்கு வலி அதிகம். எனவே மாணவன், கவிஞன், ராஜ் எழுதிய கவிதை வரிகள் சமூகத்துக்குப் போய்ச் சேரும். தூங்குகின்றவர்களை தட்டி எழுப்பும் என்பதில் சந்தேகம் இல்லை.-என்றார்.
இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவரும் சிரேஷ் மாணவ ஆலோசகரான பேராசிரியர் புஸ்பரட்ணம் உரையாற்றுகையில்:
'கவிஞன் வாழும் கால கட்டத்தின் அனுபவங்கள் துன்பம், துயரம், சவால், தோல்வி, வெற்றியின் விளைவே அவர்களின் கவிதைகள். 'உயிர்த்தெழும் வலிகள்' பலவற்றைச் சொல்லி மனதில் தங்குகின்றது. கவிதைகள் எதிர்காலத்துக்கு கடந்த காலத்தைக் கொடுப்பதாக அமைகின்றன. எதிர்காலத்தில் கவிஞர்கள் இல்லாவிடினும் அவர்களது கவிதைகள் நிலைக்க வேண்டும். கவிதைகள் சமகாலத்தைப் பிரதிபலிக்க வல்லன. படைப்பு பாராட்டத்தக்கது'' என்றார்.
இந்த நிகழ்வில் சட்டத்துறை துறைத் தலைவர் கலாநிதி கலாமணி, தமிழ்த்துறை பேராசிரியர் ரகுநாதன், மாணவர்கள் உட்பட இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-ரி)



லண்டன் வாழ் சைவ அன்பர்கள், சைவ ஆலயங்களின் நிதியுதவியில் கட்டப்பட்ட இரு மாடிகளைக் கொண்ட நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் புதிய மடாலயம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது. (வ)

# புத்தூர் - சிறுப்பிட்டி பகுதியில் மூட்டுநோய் தாக்கம் அதிகரிப்பு

## சுகாதாரப் பகுதியினர் கவலை

அச்சுவேலி, ஜூன் 20
புத்தூர், சிறுப்பிட்டி பகுதியில் வசிப்போர் மத்தியில் மூட்டு மற்றும் அவற்றோடு தொடர்பு டைய நோய்த் தாக்கம் அதி கரித்து வருகின்றது. இதனால் வயது வேறுபாடின்றி மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி வருவ தோடு நோயாளிகள் இயல்பு நிலையில் செயற்பட முடியாத நிலைக்கும் உள்ளாகுவதாக சுகாதாரப் பகுதியினர் கவலை தெரிவிக்கின்றனர்.
கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ முகாம்கள் மற்றும் சுகநலம் தொடர்பான மதிப்பீடுகளில் இருந்து மூட்டு மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்களின் தாக்கம் தொடர்பான விவரம் வெளியாகி உள்ளது. ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டோர் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.
போஷாக்குக் குறைபாடு, மூடநம்பிக்கை, வறுமை நிலை, நோய் தொடர்பான விழிப்புணர்வு இன்மை, கல்வி அறிவு குறைந்த நிலை, பரம்பரை இயல்பு போன்ற பல்வேறு காரணி கள் நோய் தொடர்பான பாதிப் புக்கு அடிப்படையாக இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.
மூட்டு மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்கள் மற்றும் தொற்றாநோய்த் தாக்கத்துக்கு உள்ளானோர் தமக்கு நோய் ஏற்பட்டிருப்பதை நீண்டகாலமாக அறிந்து கொள்ளாமலும் ஏற்பட்டுள்ள நோய் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு விரும்பாத நிலையிலும் இருந்து வருகின்றனர். சுகாதாரப் பகுதியினரால் முன்வைக்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை ஏற்று அதன்படி செயற்பட விரும்பாத நிலையும் காணப்படுகின்றது.
குறித்த பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மகளிர் அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மேற்படி நோய்த் தாக்கம், அதன் பாதிப்பு, அதனால் எதிர்காலத்தில் இயல்பு நிலையில் செயற்பட முடியாமல் போவதோடு எதிர்பாராத உயிரிழப்பும் ஏற்படுவது தொடர்பாக தமது உறுப்பினர்கள் மற்றும் தமது பிரதேசத்தில் வாழும் பொது மக்களுக்கு அறிவூட்டல் ஆலோசனைகளை வழங்கல், நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு சுகாதாரப் பகுதியினரின் வேலைத் திட்டங்களுக்கும் தமது முழுமையாக ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என பிரதேச சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-11)

## போதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 21
வாகனம் செலுத்துவதற்குரிய ஆவணங்கள் எதுவுமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 19 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாரதிய அனுமதிப்பத்திரம், வாகன வரி, காப்புறுதி ஆகியவை இல்லாமல் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களுடன் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நான்கு குற்றங்களுக்குமாக 19 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## காலாவதியான பொருள் விற்பனை வேலணை உணவகங்களில் இல்லை

**யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலம் கடந்த பொருள்கள் இனங் காணப்பட்டன**

வலி.வடக்கு, ஜூன் 21
வேலணை பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடைகள், உணவகங்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்ற போதிலும் சுகாதார சீர்கேடான உணவு வகைகளோ அன்றி கடைகளில் காலம் கடந்த பொருள்களோ விற்பனை செய்யப்படுவது இனங்காணப்படவில்லை என வேலணை சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலம் கடந்த பொருள்கள் விற்பனையில் உள்ள வேளையில் பொது சுகாதார பரிசோதகர்களால் இனங் காணப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் பொருள்கள் அழிக்கப்பட்டும் உள்ளன.
இத்தகைய நிலையில் வேலணை பிரதேச சுகாதார வைத்தியதிகாரியுடன் இது தொடர்பாக கேட்ட போது இத்தகைய காலம் கடந்த பொருள்கள் எவையும் குறித்த வைத்தியதிகாரி பிரிவில் வர்த்தக நிலையங்களில் காணப்படவில்லையென தெரிவித்தார். (வ-86)

## மூட்டு நோய் தொடர்பான மருத்துவ ஆலோசனை

அச்சுவேலி, ஜூன் 21
மூட்டு மற்றும் அதனுடன் தொடர்புடைய நோயாளிகளுக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு மருத்துவ உதவி மற்றும் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு உதவித்தொகையும் வழங்கப்பட்டது.
கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 80 நோயாளர்கள் கலந்து கொண்டனர்.
குறித்த நோய்களுக்கான விசேட மருத்துவர்கள், திருமதி ஏ.என்.எச்.ஹேரத், செல்வி த.ராஜந்தினி ஆகியோர் கலந்து கொண்டு நோயாளர்களை சோதனை நடத்தி மருத்துவ உதவி வழங்கியதோடு நோய் மற்றும் நோய்த்தாக்கம் தொடர்பான கருத்துரைகளையும் வழங்கினர்.
மருத்துவ முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு உதவு தொகை மற்றும் பழவகைகள் உள்ளடங்கிய பொதி, நோய்த் தாக்கம் மற்றும் நடைமுறைகள் உள்ளடங்கிய பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவத்தினர் திருப்பி அனுப்பப்படுவார்கள்

## மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறுகின்றார்




சென்னை, ஜூன் 21
தமிழகத்தில் பயிற்சியளிக்கப்படும் இரு இலங்கை இராணுவ அதிகாரிகளும் விரைவில் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.
சென்னை விமானநிலையத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
''குன்னூரில் இராணுவப் பயிற்சி வழங்கப்படும் இரு இலங்கை இராணுவ அதிகாரிகளையும் திருப்பி அனுப்புமாறு பாதுகாப்புத்துறை அமைச்சர் மற்றும் செயலரிடம் வலியுறுத்தியுள்ளோம். விரைவில் இரு இராணுவ அதிகாரிகளும் திருப்பி அனுப்பப்படுவார்கள்'' என்று அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.
இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்தும் தமிழக மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படுவது குறித்து அவரிடம் கேட்டபோது,
''அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அவர்கள் விரைவில் நாடு திரும்புவார்கள்'' என்று தெரிவித்தார் அமைச்சர்.
குன்னூரில் உள்ள வெலிங்டன் இராணுவ பயிற்சி மையத்தில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவருக்கு 10 மாத கால பயிற்சி வழங்கப்படுகின்றது. கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமான பயிற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக அரசியல் கட்சிகளும், மக்களும் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். (ற)

# அனர்த்தங்களுக்கு காரணம் மனிதனே


## விஞ்ஞானிகள் அதிரடித் தகவல்

ரிஷிகேஷ், ஜூன் 21
வட இந்தியாவில் குறிப்பாக ஜார்க்கண்டின் இமயலையை ஒட்டிய இந்துக்களின் புனித யாத்திரைப் பகுதிகளில் இயற்கை ஏற்படுத்தி உள்ள சீர்குலைவுக்கும், வெள்ள பேரழிவிற்கும் காரணம் இயற்கை மட்டுமல்ல மனிதர்களாகிய நாமும் தான் என விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளனர்.
இதுகுறித்து இஸ்ரோ அதிகாரிகள் குறிப்பிடுகையில்,
''1980ஆம் ஆண்டுப் பகுதியில் புனித தலமான கேதார்நாத் கோயில் அருகே சில கட்டட்டங்கள் மட்டும் தான் இருந்தன. இப்போது இமயமலையின் உச்சியான கேதர்நாத்தையே ஒரு நகரமாக உருவாக்கி உள்ளனர். கேதர்நாத் கோயிலை ஒட்டி ஓடுகிற மந்தாகினி ஆற்றின் போக்கை கடந்த பல ஆண்டுகளாக திசை திருப்பி விட்டதன் விளைவுதான் இந்தப் பேரழிவு. கோயிலின் பின்புறம் இருக்கும் கேதர் டோம் எனப்படும் பனிச்சிகரம் உடைந்து கோயிலில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சர்பால் ஏரியில் மூழ்கி உள்ளது. அந்த பனிச்சிகரம் உருகி பனிச் சுனாமியாக உருவெடுத்து சர்பால் ஏரியையும் அதை ஒட்டிய மந்தாகினி ஆற்றிலும் பேரலைகளை உருவாக்கியதாலேயே இந்த கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இமயமலையில் ஓடுகிற மந்தாகினி ஆறு, அலக் நந்தா, பகீரதி போன்றவை கள் அனைத்தும் இணைந்து தான் கங்கையாக, யமுனை யாக சமவெளிக்கு ஓடி வருகிறது'' என்று கூறுகின்றனர்.
தற்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் கேதார்நாத் கோயிலைத் தவிர சுற்றி உள்ள அனைத்து பகுதிகளையும் வாரி எடுத்து சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த பேரழிவு காரணமாக இன்னும் ஓராண்டுக்கு கேதார்நாத்திற்கு யாத்திரிகர்கள் யாரும் வர வேண்டாம் என உத்தர்கண்ட் முதலமைச்சர் விஜய் பகுகுனா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)

# கொல்லச் சதி நடக்கின்றது

## மம்தா பானர்ஜி கூறுகின்றார்

புதுடில்லி, ஜூன் 21
மாவோயிஸ்டுகளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலரும் தன்னைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டியுள்ளனர் என்று மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றஞ் சாட்டியுள்ளார்.
அதையடுத்து அவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீகாந்த மகதோ மற்றும் மிரிகென் மைதி ஆகியோருக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.
ஒரிசா மாநிலத்தில் உள்ள சாரந்தா வனப்பகுதியில் சுமார் 45 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கூடி சதித் திட்டம் தீட்டியுள்ளனர் உளவுத்துறை தகவல் என அளித்துள்ளது என்று மேற்குவங்க காவல்துறை தெரிவித்துள்ளது. முக்கிய பிரமுகர்களை குறிவைத்து தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டிருக்கலாம் என்றும் தாரா என்னும் பெண் மாவோயிஸ்ட் தலைமையில் அவர்கள் செயல்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
அதையடுத்து மேற்குவங்கத்தில் உள்ள ஜங்கள் மஹால் வனப்பகுதியில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (ற)







வட இந்தியாவில் தொடரும் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் பல்வேறு நகரங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ள. ஹரிதுவார் நகரில் சுமார் 40 அடி உயரமுள்ள ஈஸ்வரன் சிலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

# பா.ம.க. ஆதரவு யாருக்கு? நாளை அறிவிக்கப்படும்

சென்னை, ஜூன் 21
மாநிலங்களவை தேர்தலில் பா.ம.கவின் ஆதரவு யாருக்கு என்பது குறித்து நாளை அறிவிக்கப்படும் என்று அக் கட்சியின் இளைஞரணி தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.
தி.மு.கவுக்கு ஆதரவு அளிக்குமாறு கோரி, அந்த கட்சியின் பொருளாளர் ஸ்டாலின், துரைமுருகன் உள்ளிட்டோர் தங்களை சந்தித்ததனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
''மாநில திராவிட கட்சிகளுடன் கூட்டணி இல்லை என்ற தங்கள் கட்சியின் முடிவுக்கு பிறகு, இந்த மாநிலங்களவை தேர்தலில் பா.ம.கவின் முடிவு நாளை நடைபெறும், செயற்குழு கூட்டத்திற்கு பிறகு அறிவிக்கப்படும்'' என்று அன்புமணி தெரிவித்தார். (ற)

# கனிமொழியின் வெற்றி உறுதி



சென்னை, ஜூன் 21
எதிர்வரும் மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு புதிய தமிழகம் கட்சி ஆதரவளிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார். அதையடுத்து கனிமொழியின் வெற்றி உறுதியாகியுள்ளது.
நேற்று தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிய பின்னர் கிருஷ்ணசாமி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
''மாநிலங்களவைத் தேர்தலில், தி.மு.க. சார்பில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர் கனிமொழிக்கு புதிய தமிழகம் கட்சி தனது ஆதரவை அளிக்கும். தி.மு.க. மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுக்கு போதுமான ஆதரவு உள்ளது. எனவே எங்கள் கட்சியின் வாக்குகள் வீணாகக் கூடாது என்பதற்காக தி.மு.கவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளோம்'' என்று தெரிவித்தார் அவர்.
புதிய தமிழகம் கட்சிக்கு 2 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். மனிதநேய மக்கள் கட்சி ஏற்கனவே தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் கனி மொழியின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. (ற)



# இந்தியாவும் இனி கண்காணிக்கும்

புதுடில்லி, ஜூன் 21
அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனம், முக்கிய இணைய நிறுவனங்களின் மூலம் இணையத்தில் உள்ளவர்களின் தகவல்களை ரகசியமாக பெற்றது போன்று இந்தியாவும் தொலைபேசி மற்றும் இணைய பயன்பாட்டாளர்களின் நடவடிக்கையை கண்காணிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.
இந்தியாவில் 90 கோடி பேர் தொலைபேசி பயன்படுத்துகின்றனர். 12 கோடி பேர் இணையத்தை பயன்படுத்துகின்றனர். இவர்களின் தகவல் பரிமாற்றங்களை கண்காணிக்கும் விரிவான கண்காணிப்பு திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது.
இதன் மூலம் இந்தியாவின் வருமான வரித்துறை உள்ளிட்ட அரசு அமைப்புகளும், பாதுகாப்பு அமைப்புகளும் பயன்பாட்டாளர்களை நேரடியாக கண்காணிக்க முடியும் என்று கூறப்படுகிறது. இதனை நீதிமன்றம் அல்லது பாராளுமன்ற மேற்பார்வை இல்லாமல் நேரடியாக செய்ய முடியும். இந்த கண்காணிப்பு முறை கடந்த ஏப்ரல் மாதம் முதலே ஒவ்வொரு மாநிலமாக செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அரசு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்த மத்திய கண்காணிப்பு அமைப்பு குறித்த அறிவிப்பு கடந்த 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அப்போது இது விவாதப் பொருளாக மாறிய போதும், அரசு இதன் செயற்பாடு பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடவில்லை. (ற)

# நாட்டின் அமைதியைக் குலைக்கின்றன

## எதிர்க்கட்சிகள் மீது சோனியா பாய்ச்சல்


புதுடில்லி, ஜூன் 21
நாட்டில் நிலையற்ற தன்மையை உருவாக்க எதிர்க் கட்சிகள் முயற்சிப்பதாக காங்கிரஸ் தலைவர் சோனியா தெரிவித்துள்ளார்.
புதுடில்லியில் நேற்றுப் பேசிய சோனியா, உணவு பாதுகாப்பு மசோதாவை நிறை வேற்ற விடாமல் எதிர்க்கட்சி கள் முட்டுக்கட்டையாக இருப்பதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.
"நாட்டின் நிலைத்தன்மையை குலைத்து, நிலையற்ற தன்மையை ஏற்படுத்த சில கட்சிகள் முயற்சிக்கின்றன. இது போன்ற கட்சிகள் நாட்டின் முன்னேற்றத்துக்காக எதையும் செய்யமாட்டா. அவர்களுக்கு பதவி மட் டுமே தேவை. அதற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். அதுபோன்ற கட்சிகளுக்கு எதிராக மக்கள் சக்தி ஏற்பட வேண்டும்'' என்று கூறினார்.
''இந்தியாவில் அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே உணவு பாதுகாப்பு மசோதா கொண்டு வர மத்திய அரசு முயற்சிக்கிறது. என்றும் தெரிவித்தார் சோனியா. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அலுவலகம் மீது மனிதக் குண்டுத் தாக்கு

## சோமாலியாவில் 20 பேர் சாவு; பலர் காயம்

மொகாடிசு, ஜூன் 21
சோமாலியாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.
சோமாலியாவின் தலைநகரான மொகாடிசுவில் அமைந்துள்ள ஐ.நா.சபை அலுவலகம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அலுவலகத்தின் வாசலைக் குண்டு வைத்துத் தகர்த்து உள்நுழைந்த 7 பேர் அங்கு கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் தமது உடலில் கட்டப்பட்டிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தனர். அதில் மூன்று வெளிநாட்டவர்கள் உட்பட ஐ.நா. அலுவலக அதிகாரிகள் 13 பேர் உயிரிழந்தனர்.



தாக்குதலை நடத்தியவர்கள் அல் குவைதா அமைப்புடன் தொடர்புடைய அல் ஷபாப் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலை நடத்திய அனைவரும் சம்பவ இடத்திலேயே உடல்சிதறி உயிரிழந் தனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# போர்களில் இனி மேல் பெண்களும்

### அனுமதி வழங்கியது பென்டகன்

வோஷிங்டன், ஜூன் 21
2016ஆம் ஆண்டு முதல் கடற்படை கொமாண்டோ உட்பட அமெரிக்காவின் சிறப்புப் படைப் பிரிவுகளில் பெண்கள் இணைந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.
அதன்மூலம் பெண்கள் போர்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் பென்டகன் கூறியுள்ளது.
இதுகுறித்து பாதுகாப்புத் துறை இயக்குநர் ஜூலியட் பெய்லர் கருத்துத் தெரிவிக்கையில்,
''தகுதியுடன் கூடிய திறமையானவர்களை பணியில் அமர்த்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே பாதுகாப்புத் துறையின் நோக்கம். அதற்கு பாலின பேதமில்லை' என்று தெரிவித்தார்.
எனினும் அமெரிக்காவுக்கான பெண்கள் என்ற அமைப்பின் தலைமைச் செயல் இயக்குநர் பென்னி நேன்சி, இராணுவத்தின் சிறப்புப் படைகளில் பணிபுரிய பெண்களுக்கான தடை நீக்கப்பட்டமையை விமர்சித்துள்ளார்.
பெரும்பான்மையான பெண்களின் பிரச்சினைகளை இந்த நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை. பாதுகாப்புத் துறையில் இரு பாலினத்தவருக்கும் சமமான வாய்ப்பு என்று கூறி மக்களை பாதுகாப்பதில் சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

# தூதரகத்தை விட்டு வெளியேற மாட்டேன்



லண்டன், ஜூன் 21
விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே, பிரிட்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தை விட்டுத் தான் வெளியேறப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.
தன்னுடைய வழக்கறிஞர்கள் ஈக்குவடோர் தூதரகத்தை விட்டு வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ள அசாஞ்சே, சுவீடன் அரசு தன் மீதான விசாரணையைக் கைவிட்டாலும் கூட, தான் தற்போது இருக்கும் இடத்தில் இருந்து வெளியேறப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
அசாஞ்சே பிரிட்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்து ஒரு வருட காலம் ஆகியுள்ளது. (ற)



ரஷ்யாவின் தென்மேற்கில் உள்ள சமரா பகுதியில் உள்ள இராணுவ ஆயுதக் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் இருந்த சுமார் 6 ஆயிரம் பேர் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அதையடுத்து அங்குள்ள வீதிகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளன.

# பேச்சுக்கள் இரத்து

காபூல், ஜூன் 21
அமெரிக்காவுடன் நடைபெறவிருந்த பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த பேச்சுக்களை ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் இரத்து செய்துள்ளார்.
ஆப்கனில் உள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் 2014 ஆம் ஆண்டு முழுமையாக வெளியேறுகின்றன. இருப்பினும் அமெரிக்கப் படைகள் மேலும் சில காலம் ஆப்கனில் நிலைகொண்டிருக்க வகை செய்யும் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இரு நாடுகளும் பேச்சு நடத்த முடிவு செய்திருந்தன.
தற்போது, தலிபான்களுடன் நேரடியாக பேச்சு நடத்த முடிவு செய்திருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. தலிபான்களால் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வரும் ஆப்கன் அரசு, அமெரிக்கா தலிபான்களுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதை விரும்பவில்லை. அதையடுத்து ஆப்கனுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.
அமெரிக்காவின் திடீர் அறிவிப்பால் அதிருப்தியடைந்துள்ள ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த பேச்சுக்களை இரத்துச் செய்துள்ளார்.
"இந்தவிவகாரத்தில் அமெரிக்கா அவசரம் காட்டுவது சரியல்ல. அமெரிக்காவின் சொல்லும் செயலும் மாறுபட்டு இருக்கின்றன'' என்று தெரிவித்துள்ளார் ஹமீத் கர்சாய். (ற)

# விண்வெளியில் இருந்து விரிவுரைகள்



பீஜிங், ஜூன் 21
விண்வெளியிலிருந்து மாணவர்களுக்கு விரிவுரைகளை நடத்தி சீனா சாதனை படைத்துள்ளது.
விண்வெளிக்குச் சென்ற சீனாவின் இரண்டாவது விண்வெளி வீராங்கனையான வாங் யாப்பிங், விண் வெளியிலிருந்து காணொலி மூலம் நேரடி விரிவுரைகளை நடத்தியுள்ளார்.
மாணவர்களுக்கு பௌதீகவியல் பாடம் தொடர்பிலேயே விரிவுரைகள் நடத்தப்பட்டுள்ளன.
மூன்று வீரர்களுடன் விண்வெளிக்குச் சென்ற விண்கலத்தின் மூலமாக இந்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சீனாவில் இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமை இதுவே முதற்தடவையாகும். (ற)

# கண்காணிப்பு அவசியம் கூறுகின்றார் ஒபாமா



நியூயோர்க், ஜூன் 21
அமெரிக்காவின் இரகசிய கண்காணிப்பு நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு வெளிக்கிளம்பியுள்ள நிலையில், அத்தகைய இரகசிய உளவுத் திட்டங்களால்தான் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடக்க இருந்த பல தாக்குதல்கள் தடுக்கப்பட்டன என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஒபாமா, ''நாட்டு மக்களையும், அவர்களின் வாழ்க்கையையும் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. உளவு பார்க்கும் திட்டத்தில் உள்நோக்கம் கிடையாது என்று தெரிவித்தார்.
''தனிப்பட்ட நபர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்க வேண்டிய அவசியம் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு அமைப்புக்கு இல்லை'' என்றும் ஒபாமா மேலும் தெரிவித்தார். (ற)

# உளவுத்திட்ட செய்திகளுக்கு பிரிட்டனில் தடை

லண்டன், ஜூன் 21
அமெரிக்காவின் இரகசிய உளவுத் திட்டங்களை பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாது என்று ஊடகங்களுக்கு பிரிட்டன் அரசு உத்தரவிட்டுள்ளது என்று கார்டியன் இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. பிரிட்டனின் பாதுகாப்புத்துறை அதிகாரிகள். இதற்கான கடிதத்தை அனுப்பியுள்ளனர் என்றும் கார்டியன் தெரிவித்துள்ளது.
சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைபேசிகளில் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு அமைப்பு வேவு பார்ப்பதாக அண்மையில் கார்டியன் மற்றும் வோஷிங்டன் போஸ்ட் ஆகிய இதழ்கள் செய்தி வெளியிட்டிருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. (ற)

# சமரச முயற்சிகளை ஆரம்பித்தது அமெ.

நியூயோர்க், ஜூன் 21
அமெரிக்காவுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஆப்கன் ஜனாதிபதி ஹமிட் கர்சாய்க்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கும் இடையில் இது குறித்து விசேட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.
ஆப்கன் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் கலந்துரையாடிய ஜோன் கெர்ரி இந்த விவகாரங்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை அமெரிக்காவுடனான பாதுகாப்புத் தொடர்பான பேச்சுக்களை தொடர்வதற்கு ஆப்கன் ஜனாதிபதி விருப்பம் தெரிவித்திருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தப் பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று ஆப்கன் ஜனாதிபதி ஹமிட் கர்சாய் அறிவித்திருந்ததை அடுத்தே ஜோன் கெர்ரியின் இந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கட்டாரில் திறக்கப்பட்டுள்ள தலிபான்களின் அரசியல் அலுவலகம் மற்றும் தலிபான்களுடனான பேச்சு குறித்து அமெரிக்கா வெளியிட்ட கருத்துக்கள் என்பன இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலைமையைத் தோற்றுவித்துள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணபதி து...



# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் நீராவியடி – யாழ்ப்பாணம்

# புதிய சித்திரத்தேர் வெள்ளோ...

## விநாயகர் அடியார்களுக்கு,



யாழ்ப்பாணம் நீராவியடிப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் வீரகத்திப் பெருமானுக்கு இன்று புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதனையிட்டு மகிழ்வடைகின்றோம். திருவிழாக்களில் சிறப்பு பெறுவது தேர்த்திருவிழாவாகும். ஐந்தொழில் புரியும் சங்கார உற்சவத்தில் தேர்த்திருவிழா அஞ்ஞான ஒளியை நீக்கி மெஞ்ஞான ஒளியைத் தருவதாகும். மும் மூர்த்திகளின் வடிவமான தேர் கீழ்ப் பகுதி பிரம்மாவாகவும், நடுப்பகுதி விஷ்ணுவாகவும், மேற்பகுதி உருத்திரனாகவும் தேரின் வடிவம் அமையப் பெறுகிறது. நான்மறைகள் குதிரைகளாகவும் சூரிய சந்திரர்கள் சக்கரங்களாகவும் உருவாகப்படும் தேர், விஸ்வப் பிரம்ம சமூகத்தினால் இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படுவதாகும். இப்புனித பணியைச் செயல்படுத்தியிருக்கும் நீரை ஆவியாக்கும் திருக்கேணியினைக் கொண்ட ஆலயத்திற்கு கிடைத்திருப்பது மிக்க சிறப்பிற்குரியதாகும். இவ்விநாயகப் பெருமானை அனைவரும் போற்றி வணங்கி மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

## அனைவருக்கும் விநாயகர் அருள் கிடைக்கட்டும்



யாழ்ப்பாணம், நீராவியடி அருள்மிகு ஜெய நீராவியடி வீரகத்தி விநாயகர் எழுந்தருளிய இடம் கிழக்கே பிறவுண் வீதியையும் மேற்கே நீர்வாவித் திருக்குளத்தையும் வடக்கே கல்லூரி வீதியையும் தெற்கே அருள் விநாயகர் தேரோடும் வீதியையும் காணலாம். நீர் வாவி வீரகத்தி விநாயகர் பிற்காலத்தில் நீராவியடி பிள்ளையாராக மாற்றம் பெற்றதை அடியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். இவ் வீரகத்தி விநாயகர் இதுவரை காலமும் அலங்கார மூர்த்தியாக நின்று அருள் பாலித்து இன்று மகோற்சவ மூர்த்தியாகப் புதிய தேரில் வீதி வலம் வரப்போகின்றார்.

ஒரு தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவர் விநாயகப்பெருமான். ஆலயங்களிலும் சரி வீடுகளிலும் சரி எந் நிகழ்ச்சியாக இருந்தாலும் வல்ல வினைகளைப் போக்கி நற்பேறு கிடைக்க ஆசீர்வாதம் செய்யும் விநாயகரை வணங்கிச் செய்யும் காரியங்கள் எல்லாம் தடையின்றி நடைபெறும்.இது எங்களுடைய ஆன்றோர் வாக்கு. நாகரிகங்கள் தான் எவ்வாறு முன்னேறினாலும் விநாயகரை வணங்கினால் தான் எமது முன்னேற்றம் என்பதை யாரும் மறப்பதில்லை. சிங்கள மக்கள் கூட "கண தெய்யோ" என்று வணங்குவதைக் காணலாம். எல்லா இந்துக்களின் வீட்டு சுவாமி அறையிலும் முதலாவது படமாக அமைவது விநாயகருடைய படம் தான். திருவிழாக்காலங்களில் சுவாமி வாகனங்களில் அமர்ந்து இரதோற்சவம் "தாம்பவ" தீட்சை எனப்படும். திருக்கோயிலில் உட்சென்று வழிபட முடியாதவர்கள் இத் "தாம்பவ" தீட்சையில் வழிபாடு செய்ய முடியும். இவ்வாலயம் இவ்வருடம் தொடங்க இருக்கும் மகோற்சவத்தின் போது ஆலயத்தை சுற்றி முதன்முதலாகத் தேரோட இருக்கும் வீதியைச் செப்பனிடச் சந்தர்ப்பம் தந்தமைக்கு விநாயகப் பெருமானின் அருள் கிடைத்தமை யான் பெற்ற பாக்கியமே.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மாநகர முதல்வர் மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை வடகிழக்கு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் ஆனது, நீராவியடி என்றழைக்கப்படும் இடத்திலே யாழ். நகரப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. திருமறைக்காடு என்றழைக்கப்படும் வேதாரணியத்திலிருந்து கொண்டுவந்து இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட வீரகத்தி விநாயகர் ஆலயம் சிறிய கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து இந்த வருடம் மகோற்சவம் காணும் உன்னத நிலையை அடைந்துள்ளது. முதன்முதலாகப் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேரிலே ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் சிங்காரமாக வீற்றிருந்து அகத்திலுள்ள அகந்தையை அழித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் இந்நன்னாளில் ஆலயத்தின் வளர்ச்சிக்காகவும், யாழ். மாநகரத்தின் வளர்ச்சிக்காகவும் அவன் தாள் பணிவதோடு, நீடித்த இறைபணிக்காக ஆலய நிர்வாகத்தினருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செ.பிரணவநாதன்,மாநகர ஆணையாளர்,யாழ்ப்பாணம்.

## ஊர்கூடித் தேர் இழுத்து உவகை கொள்வோம்



சைவம் போற்றித் தமிழ் வளர்த்த யாழ்ப்பாணத்தில் பூலோகமுதலியார் பரம்பரையினரால் கொண்டு வரப்பட்டு பூஜிக்கப்பெற்ற ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகருக்கு ஊர் கூடித் தேர் இழுக்கும் அற்புதத் திருவிழா. அழகு, எளிமை, வனப்பு என அத்தனையும் கைவரப்பெற்ற நீராவியடியின் பெயரினைப் பறைசாற்ற எழுந்துநிற்கும் ராஜகோபுர அழகு, வீரகத்தி விநாயகரின் அற்புதத்தின் அடையாளம் எனலாம். ஏனெனில் ஊருக்கும், குடிகளுக்கும் அன்பு, பாசம், சமூக உறவு என அனைத்தையும் வாரி வழங்கும் தெய்வீகம் கைவரப்பெற்றவர் வீரகத்தி விநாயகர். நவாலியூர் நடராஜா சிவபாலன் கற்பனையின் கலைப்படைப்பாக அவதரித்த சித்திரத்தேர் 21.06.2013 வெள்ளோட்டம் காண்பது நீராவியடி வீரகத்தி விநாயகரின் அருட் கடாட்சம் எனவும், யாழ்.கலாசாரத்தின் கலைப்படைப்பின் பிரதிபலிப்பு எனவும் நம்பப்படுகின்றது.கோயில் கட்டுவதும் தேரோட்ட நிகழ்வுசெய்து அகமகிழ்வதும் மன்னராட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே சிறப்புப்பெற்று வருகின்றது. அதன் அறாத்தொடர்ச்சியான வளர்ச்சியே இன்றைய தேரோட்ட நிகழ்வின் பிரதிபலிப்பாகும். அத்தவகையில் இன்றைய தருணத்தில் நினைவுகூர வேண்டியவர்கள் பூலோக முதலியார் பரம்பரையினரும், இரகுநாத முதலியார் பரம்பரையினரும் மட்டுமல்ல சலக வழிகளிலும் தேரோடு தோள் நின்ற மெய்யடியார்களுமாவர்.

நீராவியடி வீரகத்தி விநாயகரின் சித்திரத்தேர் முதன்முதல் உலாவரப்போகும் வெள்ளோட்ட உன்னததருணத்தை நினைவுகூர்ந்து, ஊர்கூடித் தேர் இழுத்து உவகைகொண்டு ஒன்றுபட்டு, நீராவியடியான் அற்புதத்தேர், அடியவர் ஆத்மாக்களைத் தெய்வீகத்தின்பால் ஈர்த்துக்கொள்ள வேண்டுமென வாழ்த்தி மனநிறைவடைவதோடு நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

ந.வேதநாயகம்,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு மாவட்டம்.

## இரதோற்சவ வெள்ளோட்ட விழா காண வாரீர்



யாழ்ப்பாண மாநகரிலே கலையும், கலாசாரமும், பண்பாடும், சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்து காணப்படும் கிராமங்களுள் நகரை அண்மித்த நீராவியடிக் கிராமமும் ஒன்றாகும். இங்கு சைவத்தின் சிறப்பைப் பறைசாற்றும் பல கோயில்கள் காணப்பட்டாலும் விநாயக வழிபாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் விதத்தில் வானுயர நிமிர்ந்து நிற்கும் இராஜகோபுரம் உடைய வீரகத்தி விநாயகர் ஆலயம் கடந்த பல வருடங்களாக பெருந்திருப்பணிகளை மேற்கொண்டு தொய்வின்றி சிறப்புற நிறைவேற்றிக் கொண்டு வருகின்றனர். திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமாக இவ்வலாயம் விளங்குகின்றது. அதன் சிறப்பு அம்சமாக இவ்வளவு நாள்களும் அலங்கார உற்சவம் நடைபெற்ற இந்த ஆலயத்தில் முதன்முறையாக தற்போது துவஜாரோகணம் நடைபெறவும். முதன் முதலாக புதியதோர் அழகிய சிற்பத் தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெற இருப்பதையிட்டு அகமிக மகிழ்கின்றோம். இந்தத் தேரை உருவாக்கிய கலைஞர் நாடறிந்த சிற்பக் கலைஞர் நடராஜன் சிவபாலன் அவர்கள். இவரின் கைவண்ணம் போற்றுதற்குரியது. இந்தத் தேரை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு அதை அல்லும் பகலும் அயராது உழைத்து செயற்படுத்திய நிர்வாகத்தினர், அடியவர்கள் அனைவரையும் நாம் நன்றியுடன் இந்த நேரம் நினைவு கொள்ளவேண்டும். அவர்களுக்கு பெருமானின் திருவருள் நிச்சயம் கிடைக்கும்.

திருவிழாக்களில் தேர்த்திருவிழா தனி இடத்தைப் பெறுகின்றது. 'ஊர் கூடித் தேர் இழுத்தல்' என்பது மரபாகும். இங்கு சமூகம் ஒன்றுபட்டு நிற்பதைக் குறிக்கின்றது. ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற நிலை காணப்படுகின்றது. கூட்டுறவு இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வாறு சமய சமூக ஒற்றுமையைப் புலப்படுத்தும் விதத்தில் மட்டுமன்றி எமது கலைகளும் தேரில் காணப்படுகின்றன. இதனால் எமது பண்பாட்டின் சின்னமாகவும் விளங்குகின்றது எனலாம். எனவே பல்வேறு தன்மைகளைப் புலப்படுத்தும் இரதோற்சவ வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெற அந்த வேழமுகத்து விநாயகனின் பாதம் பணிந்து நிறைவு செய்கின்றோம்.

*" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"*

மஹோற்சவகால பிரதமகுரு, கிரியா கலாமணி சிவஸ்ரீ ச.சந்திரகுமாரக் குருக்கள்.

## சித்திரத் தேரிலே விநாயகனே வருக... வருக...



யாழ்ப்பாணம், நீராவியடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய முதலாவது மகோற்சவப் பெருவிழா (12.06.2013 முதல் 24.06.2013) இவ்வாண்டு மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்குத் திருவருள் பாலித்திருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். இந்து சமய வழிபாட்டு மரபில் விநாயகர் வழிபாட்டிற்கு முதன்மையும், முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணம், நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையும் வழிபாட்டுச் சிறப்பும் மிக்கதாகவும் விளங்குகின்றது. அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த இத் திருத்தலத்தில் இவ் வருடம் முதலாவது மகோற்சவ விழாவும், பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திரத் தேர்விழாவும் நடைபெறுவது எம் எல்லோருக் கும் நல்லன எல்லாம் தரும் என்று நம்புவோமாக. இவ்வாலய பரிபாலனத்தைத் தனியாளாக நின்று மிகவும் சிறப்பான முறை யில் செய்து வரும் சிவத்திரு வை.இரகுநாத முதலியார் குடும்பத்தினரை வணங்கி வாழ்த்து கின்றோம். நாட் டிலே சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு எல்லோருக்கும் வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுமென்று விநாயகப் பெருமானின் பொற்பாதங்களைப் போற்றித் துதித்து வாழ்த்துகின்றோம்.

*"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"*

பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்,

## நல்லருள் பாலிக்கத் திருவுள்ளம் கொண்டிருக்கும் விக்கின கணபதியே



சீர்வளரும் சிவபூமியாம் யாழ்ப்பாண நன்னகரில் யார் வரினும் அருள் பொழியும் நீராவியடி கணபதியான்! நாள் தவறாமல் காரைநகர் மருதடியில் கை கூப்பி தொழுதுவந்த என்னைத் தன்னருகே அழைத்துவைத்து அருள் பொழிந்தான். கல்வி, தொழில் என்பவற்றின் வளர்ச் சிக்கு நான் வந்த நாள் முதல் சொந்த தந்தைபோல் பேரருள் புரிந்தான். அமைதியாய் இருப்பான் அன்று முதல் இன்றுவரை அவனது பக்தர்களை ஒருபோதும் கைவிடான். ஆலயத்தினுள் செல்லச் செல்ல ஆன்ம விடுதலைக்கான அதிசய அருளைப் பொழிவான். முதன் முதலில் தேர் ஏறிவந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கத் திருவுள்ளம் கொண்டிருக்கும் விக்கின கணபதியை விழிமேல் நீர் சொரியக் கை கூப்பி நிற்கிறேன்.

V.N. பத்மநாதன் அதிபர், யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க.வித்தியாலயம்.

## வீரகத்தி விநாயகரின் சித்திரத் தேர் வெள்ளோட்டம்



யாழ். நீராவியடிப் பகுதியிலே வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகருக்கு இன்று புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நடைபெறும் காட்சியானது மிக அற்புதமானது. திருவிழாக்களிலே முதன்மை பெறுவது தேர்த் திருவிழாவாகும். எம் பெருமானின் அருளினைப் பெறத்தேரின் வடம் பிடித்திடுவோம். இப் புதிய சித்திரத்தேரில் எழுந்தருளி வரும் விநாயகப் பெருமானின் கண்கொள்ளாக் காட்சியினைகாண வைத்த இந்த ஆலய நிர்வாகத்தினருக்கு எம் பெருமானின் அருட்கடாட்சம் என்றும் நிலைத்திருக்கும். அவர்கள் பணி என்றும் தொடர வாழ்த்துகின்றோம். ***வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்.***

குட்டித்தம்பி குடும்பம்.

## விநாயகர் பெருமானின் திருவருள் பெறுவோமாக

ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலயங்கள் இன்றியமையாதவை ஆகும். இன்றைய கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் குறுகிய சுயநல வாழ்வியலில் ஈடுபடாது இறைவழிபாட்டு முறையில் தொண்டு, சேவை என்பவற்றைப் புறந்தள்ளாது வாழ்வதே சாலச்சிறந்தது ஆகும். நன் நிலமும் நீர்வளமும் ஒருங்கே அமைந்த புண்ணியப் பதியான நீராவியடியில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரின் திருப்பாதமே இவ்வுலகின் அறவாழ்க்கைக்கு அருமை மருந்தாகும். என்பது முன்னோர் கூற்றாகும். எனவே எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் மகோற்சவம் மற்றும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற வேண்டி நாமும் அவற்றில் பங்களிப்பு செய்து விநாயகப் பெருமானின் திருவருள் பெறுவோமாக.

சே. செல்வராஜன் நீராவியடி.


(C/9817)(2.6.3)


★ பிரசுர அனுசரணையாளர்கள் ★

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆறுமுகம் டெக்ஸ்ரைல்ஸ் 20, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். | நந்தினி என்ட பிரைய்ஸ் 241, 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | S.S.தரன் [illegible] 87 [illegible] யாழ்ப்பாணம். | சிற்றி ஹாட் வெயர் அன் [illegible] ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | லிங்கம் கிறீம்ஹவுஸ் 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 526, பருத்தித்துறை வீதி, [illegible] | யாழ் பாண்டி ஹோட்டல் 7, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். | ஐடியல் அ[illegible] [illegible] சீரணிச்சந்தி, [illegible] கே.கே.எஸ்.வீதி, [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பதி துணை



# ...ோட்ட சிறப்புமலர் – 21.06.2013

## வெள்ளோட்ட ஆசியுரை



"திருவாரூர் தேர் அழகு" சிறுவயதில் தேடலாய் மனதில். திருவாரூர் தியாகராஜப் பெருமானின் மிகப் பெரிய கட்டுத் தேரை இழுக்கும் பாக்கியமும் பெற்றிருந்தேன். முன்னர் இத்தேர் பவனி வரப் பல நாள்கள் எடுக்கும்.

"திருப்பல்லாண்டு" பாடி சேந்தனார் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் ஓடாது நின்ற திருத்தேரைத்தானாகவே ஓடச் செய்தார். அத் தேர் விழாவையும் கண்டுகளிக்கும் புண்ணியமும் எனக்கு - எங்கட்கு!

இந்த அற்புதங்கள் தேடலாய் எங்களுள் அலங்காரத்திருவிழாக்களை எங்களை வைத்து நடைபெறச் செய்தார். மனதுள் ஒரு நெருடல் ஆசை! நீராவிப் பிள்ளையார் கொடியேறி அழகிய சித்திரத் தேரில் பவனி வரவேண்டும். வேண்டுவார் வேண்டுவதைக் கொடுப்பவர் அவர் அல்லவா! மஹோற்சவம் நடை...பெறும் காலம் வந்துவிட்டதை நீராவிப் பிள்ளையார் தாமாகவே எங்கட்கு உணர்த்தினார். கொடிமரம், திருத்தேர் போன்ற பெரிய வேலைகளைத் தாமே தகுதியானவர்களைத் தெரிந்து பலரும் போற்றும் வ...ளம் நிறைவேற்றினார். அவர் இட்ட பணியை அவர் வழிகாட்டலில் செய்து வருகின்றோம்.

நீராவிப் பிள்ளையார் விருப்பம் போல மிக்க அழகான திருத்தேர் சிற்பாசாரி நடராஜா சிவபாலன் கைவண்ணத்தில் உருவாகி உள்ளது. வெள்ளோட்டவிழா எல்லாம் வல்ல நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகப் பெருமானின் அருளாசியுடன் நடைபெற அவரது பாதங்களைப் பணிந்து அவரது ஆசியை வேண்டிநிற்கின்றோம்.

வை.இரகுநாதமுதலியார், ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்,
ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

## தேரேறி வருகிறார் நீராவியடி வீரகத்தி விநாயகர்!



சைவமும் தமிழும் தளைத்து உயர்ந்தோங்கும யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையத்தில் இருக்கின்றது நீராவியடி. இது யாழ்ப்பாண நகரத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும் இங்கே கிராமிய மணம் கமழ்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களும் கொண்ட வீரகத்தி விநாயகர் நீராவியடியின் நடுவில் அமர்ந்திருக்கின்றார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு காலத்தில் செல்வம் செல்வாக்குடன் பெரும் நிலக்கிழாராக விளங்கிய சிறாப்பர் குடும்பத்தினரே நீராவியடியில் வீரகத்தி விநாயகர் கோயிலையும் நிறுவி அருகில் ஒரு கேணியையும் வெட்டிவிட்டனர். சிறிய கோயிலாயினும் மூன்று காலப் பூஜைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. விசேட தினங்கள் கொண்டாடப்பட்டன. யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளும் நீராவியடியிலேயே நிறுவப்பட்டுள்ளன. அவற்றிற்கும் அக்கல்லூரிகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சைவபரிபாலன சபைக்கும் கூட சிறாப்பர் குடும்பத்தினர் நிலங்கள் நன் கொடையாக வழங்கியிருக்கிறார்கள். சிறாப்பர் குடும்பத்தின் கடைசி ஆண் வாரிசாக விளங்கிய சம்பந்த நாத முதலியார் 1975ஆம் ஆண்டு கோயில் நிர்வாகத்தைத் தமது ஒன்றுவிட்ட சகோதரி வைத்திலிங்கம் செல்லம்மாவிடம் கையளித்தார். அவர் களுடைய நிர்வாக காலத்தில் அவர்களது மகன் இரகுநாத முதலியார் கோயிலை மேலும் கட்டி யெழுப்பினார். இரண்டு பெரிய மண்டபங்களை அமைத்ததுடன், வீதிக்கும் கொட்டகையிட்டார். முகப்பில் அழகிய கோபுரம் ஒ...ம் கட்டப்பட்டது. அது கம்பீரமாக உயர்ந்து நின்று எல்லோரையும் அழைக்கின்றது.

போரின் பின் இரகுநாத முதலியார் குடும்பத்துடன் திரும்பி வந்து, கோயிலைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்தார். கோயில் காணிகளில் அடாத்தாகக் குடியிருந்தவர்களை அகற்றிவிட்டு, அக்காணிகளையும் விற்று கோயிலை மேலும் அழகுபடுத்தினார். எங்கள் குடும்பத்திற்கும் கோயிலில் பங்கு இருந்தாலும், இலக்கியப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் நான், கோயில் பக்கம் போவதில்லை. இருந்தாலும் எனது ஒன்றுவிட்ட மைத்துனரான இரகுநாத முதலியாரையும் அவரது பாரியாரையும் சந்திக்கும் போதெல்லாம் அவர்கள் செய்யும் திருப்பணிகளைப் பாராட்டுவேன். கோயிலை அழகுபடுத்தும் படி உற்சாகப்படுத்துவேன். இப்பொழுது பெரிய தேர் முட்டியையும் கட்டி,ஓர் அழகிய தேரையும் செய்வித்திருக்கின்றார் இரகுநாதன். வீரகத்தி விநாயகர் தேரேறி வரப்போகிறார். தேரேறி வரும் விநாயகனை வாழ்த்துவோம்! அவன் எங்களுக்கு மேலும் அருள்பாலிக்க வேண்டும்! என்று நன்கு வேண்டுவோம்.

கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை.

## பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரனே சரணம்

இலங்கைத் திருநாட்டின் சிரமெனத்திகழும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாம் யாழ்ப்பாணத்து நீராவியடியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜெய வீரகத்தி நீராவி விநாயகரின் பாதாரவிந்தங்களை வணங்கி மகிழ்கின்றோம்.

எல்லோரது மனங்களிலும் நீக்கமற நிறைந்து வேண்டுவார் வேண்டுவன அருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமான் வரலாற்றில் இன்று முதற் தடவையாகத் திருத்தேரில் வலம் வந்து அடியார்களின் இன்னல்களை நீக்கி, பேரின்பப் பெரு வாழ்விற்கு வழிகாட்டி நிற்கின்றார்.

இந்த ஆலயம் இன்று மகோற்சவப் பெருவிழா காணவும், விநாயகப்பெருமான் தேர்ஏறி வலம் வந்து அடியார்களின் வெவ்வினையை வேரோடு சாய்க்கவும் வழிசமைத்த ஆலய அறங்காவலர்களை மனமார வாழ்த்துகின்றோம். இன்று நடைபெறும் இரதோற்சவப் பெருந்திருவிழா சிறக்கவும் இவ்விழாக்காணும் பக்தர்கள் உல கியல் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று ஆன்ம ஈடேற்றம் பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீ ஜெய நீராவி விரகத்தி விக்னேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

*வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்*

பேரின்பநாதன், கோபாலக்கிருஷ்ணன், அருள்ஜோதி.

## சர்வலோக நாயகன் சித்திரத் தேரில்



"அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி" சர்வலோக நாயகன் அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளி பக்தர்களின் இன்னல்களை நீக்கி கேட் கின்ற வரங்களை வாரி வழங்கி வரும் விநாயகப் பெருமானின் வருடாந்த மகோற்சவத்தில் இம்முறை புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரிலே பவனி வருகின்றார். தேர்த்திருவிழா அழித்தலைக் குறித்து நிற்கின்றது. அந்த வகையில் பக்தர்களுடைய ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும் மலங்களையும் நீக்கி பக்தர்களுடைய உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக்கி இறைவனிடத்தில் லயிக்கச் செய்வது இரதோற்சவ திருவிழாவாகும். அந்த வகையில் இந்தச் சித்திரத் தேரின் வடம் தொட்டு விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து வணங்கி நிற்கும் அடியார்கள் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகருடைய பாதார விந்தங்களைச் சிரசினால் வணங்குகின்றோம்.

நா.அப்புலிங்கம்.

## ஆசியுரை



ஈழமணித் திருநாட்டின் வடபால் சென்னி என விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவ மணம் கமழும் நீராவி என்னும் பதியிலே வீற்றிருந்து வேண்டுவோர் வேண் டுவதை ஈந்தருளும் அருள் மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு, திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அவர்கள் நீராவிப் பிள்ளையார் மேல் வைத்த ஆழ்ந்த பக்தி காரணமாக மரபு வழியாகப் பெற்ற ஐம்பது பரப்பு காணியையும் நீராவிப் பிள்ளையாருக்கே கொடுத்து விட்டார். சிறிய அளவில் இருந்த குடும்பக் கோயில் இன்று அவரது காணியின் வருவாய்களால் புதுப்பொலிவு பெற்று மிளிர்கின்றது.

ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுக்குப் புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு எம்பெருமான் தேரேறி வரும் இந்நாளில் மக்கள் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களை அள்ளி வாரி வழங்கி என்றென்றும் இவ்வாலயம் சிறந்து விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீஜெய நீராவி வீரகத்திவிநாயகப் பெருமான் பாதார விந்தங்களை உளமார பிரார்த்திக்கின்றேன்.

ஆலய அர்ச்சகர் சிவசிறீ பாரதிதாசசர்மா

## வேண்டி வரும் அடியார்களின் வினைகளை வேரறுத்து அருளாட்சி வழங்கும் நீராவிப் பிள்ளையார்



ஒல்லாந்த அரசு காலத்தில் நீராவிப் பகுதியில் வேதாரண்யத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட வீரகத்தி விநாயகரே நீராவிப் பதிமக்களைக் காத்து அருளாசி வழங்கி வருகின்றார். தனது ஆலயத்தை நவீனமயமப்படுத்தி அழகாக்கி வரும் போது தனக் குரிய தேரினைச் செய்ய என்னைப் பணித்தது நான் செய்துள்ள பூர்வ புண்ணியம் என்பேன். என் மனதுள் நின்று இன்னது இன்னவாறு செய்ய வேண்டும் என்று உணர்த்தி இந்தச் சித்திரத்தேரினை கலை நயத்துடன் உருவாக்கிய வண்மையை எப்படி எடுத்துரைப்பேன். திருத்தேரில் விநாயகப் பெருமான் ஆரோகணித்துப் பவனி வரும் திருக்காட்சியைக் காணத் தவம் இருக்கின்றேன். எல்லாம் வல்ல பரம் பொருள் சிறி யேனையும் ஆட்கொண்டு, ஆசி வழங்க, அவரது பாதார விந்தங்களை வணங்கிப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

- விஸ்வப்பிரம்மஸ்ரீ ந.சிவபாலன் ஆச்சாரியார்.

## தேரோடும் வீதியிலே புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற வேரோடுவினை களையும் வேழமுகத்து விநாயகர் யாழ். நீராவிப்பதியிலே ஜெய வீரகத்தி விநாயகராக எழுந்தருளி வீற்றிருந்து வழிபடும் அடியவர்க்குத் திருவருள் வழங்கி அருள்பாலிக்கின்றார். அத்தகைய அருள்மிகு விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவதற்காக நிர்மாணிக்கப்பெற்ற புதிய சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் விடப்படுகிறது. இது ஒரு பொன்னான நன்னாள்.



அழகிய புதுப்பொலிவுடன் அற்புத வடிவில் அமைக்கப்பெற்ற புதிய சித்திரத்தேர் இன்று கோலாகலமாக வெள்ளோட்டம் காண்பது ஒரு புனித புண்ணிய கைங்கரியமாகும். அரிய பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த பெரும்பாக்கிய சாலிகளால் நிறைவேற்றப்பட்டுள்ள இத்தேர்த்திருப்பணி ஒப்புவமையில்லாத பூர்வ ஜென்மப் புண்ணியப் பேறாகும். ஆகவே, இன்று நிகழும் தேர் வெள்ளோட்ட நிகழ்வில் கலந்து கொண்டு எம்பெருமானுடைய திவ்ய பேரருளுக்குப் பாத்திரமாகிப் பேரானந்தப் பெருவாழ்வுக்கு அடிகோலுமாறு அடியார் பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம். ***"கணபதியைக் கைதொழ கடுவினை அகலும்"***

-கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.

## அடியார்களின் குறைகளைத் தீர்க்கும் விநாயகனே!



"நற்கும் சரக்கென்று நண்ணில் கலை ஞானம் கற்கும் சரக்கு அன்று காண்....

யோகிகளும், சித்தர்களும் நடமாடிய வண்ணையம்பதியில் நீராவியடி குளக்கரையில் விரும்பி உறைந்து அருள்மழை சொரிந்து அருளாட்சி புரிகின்றார் நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர்.

ஓம் என்பது பிரணவ மந்திரமாகும். அம் மந்திர வடிவினராக விளங்கு பவர் பிள்ளையார். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்று சீரான கோபுரத்துடன் காட்சி அளிக்கின்றார். பத்து நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த ஆலயத்தில் இவ்வருடம் பெருமானின் திருவருள் கைகூட புதிய கொடித்தம்பம், புதிய தேர், புதிய தேர்முட்டி, புதிய யாகசாலை என்பன அமையப்பெற்று முதன்முதலாக மஹோற்சவம் நடைபெறுகிறது. இதை மனதில் நினைக்கும்போது இவ்வளவு விரைவாகப் பெருமான் புதிய தேரில் ஏறி இரண்டாம் வீதியில் ஆரோகணம் செய்வார் என்று ஒருவரும் நினைக்கவில்லை. இரகுநாத முதலியார் குடும்பத்தின் அருமுயற்சியோடும் கைகூடியுள்ளது என நினைக்கும் போது உள்ளம் உருகி உவகையடைகிறது. நீராவியடி ஸ்ரீ வீரகத்திப் பெருமான் தன்னை நம்பிவரும் அடியவர்களின் குறைகளைத் தீர்ப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சிற்பமாக்கி பெருமான் அடியவர் ஆசிரியர்செ.லோகேஸ்வரன்.

## நீராவியம்பதி அமர்ந்த வீரகத்தி விநாயகனே



தேர் வெள்ளோட்டம் காண வைத்த வேழ முகத்தவனே
விஜய வருடமதில் வினைகள் தீர்க்க
வந்திடுவாய் தேர் ஏறி
தந்தை தாயே உலகம் என உலகுக்கு உணர்த்தியவனே
கஷ்டங்கள் போக்க வல்ல கண நாதனே
ஔவைக்கு கைலாயத்தை காண்பித்த கணபதியே
எம் மக்களின் விடிவுக்காய் தேர் ஏறி வாரும் ஐயா
நல்லது நடக்க நல் அருள் தந்திடப்பா
வீரகத்தி விநாயகனே
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

பு.ஆறுமுகதாசன்
பொது சுகாதாரப் பரிசோதகர்.

## அனைவருக்கும் அருள் ஆசி கிடைக்கட்டும்



ஈழத் திருநாட்டில் சைவமும் தமிழும் தளைத் தோங்கும் நீராவியடிப் பதியில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிக்கும் ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகப் பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்பாக இடம் பெற விநாயகப் பெருமானை வேண்டுவதோடு அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருள் ஆசி கிடைக்க வேண்டும் என மன நிறைவோடு வேண்டுகின்றேன்.

சோமசுந்தரம் பிரதீஸ்வரன், உரிமையாளர் சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

...ல் அக்கடமி
...வீதி, சண்டிலிப்பாய்.
...வீதி, யாழ்ப்பாணம்.

SINGER PLUS
No.01, Stanly Road,
Jaffna.

திரு.திருமதி
மனோகரன் குடும்பம்
18, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வேணி களஞ்சியம்
இல 65, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நவரதினி வசந்தரூபன்
அவர்களின் பாசமிகு தந்தையார்
**இரத்தினசிங்கம் நவரத்தினம்**
15.06.2013 அன்று காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம். (35076)(3.6.7.11)

## 90 ஆம் நாள் நினைவலைகள்



**முத்துராசா முகுந்தன்**

பிறப்பு: 12.10.1982
இறப்பு: 22.03.2013

*நேற்று எம்முடன் இருந்து*
*நெடுந்தூரம் காற்றிடை சென்றீரோ?*
*ஆற்றிடா துயரத்தால் அரற்றுகின்றோம் –*
*எம் செல்வமே!*
*வற்றிடா நதியாய் எமக்கு அன்புகாட்டி*
*விழி நீர் சொரிய விதிவசத்தால் சென்றதெங்கே?*
*விம்மியழுதபடி விழிகளில் உமை சுமந்தபடி*
*நாம்............*

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 08 - 1958
உதிர்வு 24 - 06 - 2010



எங்களுடன் ஒன்றாக வாழ்ந்த
தம்பியே!
நோயின் கொடுமையால்
அதனுடன் போராடி போராடி
இறுதியில் எங்களையெல்லாம்
கண்ணீரில் மிதக்கவிட்டு
காற்றோடு காற்றாகி இன்றுடன்
மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன.
கண்முன்னே நிழலாடும்
உனது நினைவுகள்
என்றும் எங்களுடன் உயிர்வாழும்.

அமரர்
**சின்னத்துரை சச்சிதானந்தன்**

15, ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்

உனது பிரிவால் வாடும்
அக்காமார், அண்ணா,
(38456)(3.5.6) மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவாக

தோற்றம் 29.01.1929
மறைவு 01.07.2012



**அமரர் நாகலிங்கம் இலட்சுமணன்**
(முன்னாள் சாரதி இலங்கை போக்குவரத்து சபை)

*ஓராண்டு ஆனதோ அப்பா*
*ஓராயிரம் நினைவுகளுடன் நாங்கள்*
*பெரும் சொத்து பிரிந்ததோ அப்பா*
*பெய்த மழையும் வறட்சியானதோ*
*சிவனே சிவனே என்ற சிவச்சொத்து*
*சிதறிப் போனதோ அப்பா*
*பலாலியில் பக்குவமானவராய்*
*ஏழாலையில் எழில் மிகுந்தவராய்*
*மல்லாகத்தில் மதிப்புக்குரியவராய்–வாழ்ந்த*
*இலட்சுமணன் என்ற நாமமோ*
*இலட்சனையானதோ அப்பா*
*சிந்தனையெல்லாம் சிவனே என்று*
*சிவன் நன்நாளாம் ஆனிப் பிரதோஷத்தில்*
*சிவனடி சேர்ந்தீர்களே அப்பா*

7 ஆம் கட்டை, கோயில் வீதி,
மல்லாகம்.

(38476)(3.6.11)

குடும்பத்தினர்.

## பொதுக்கூட்டம்

வலி வடக்கு, ஜூன் 21

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கான மகா சங்க கட்டுப்பாட்டுச் சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை ச.சந்திர குமார் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும் சமுர்த்தி சங்கங்களின் தலைவர்கள் நூற்று அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் தமது மகா சங்கத்துக்கான உறுப்பினர்கள் 21 பேரை தெரிவு செய்யவுள்ளனர். (ந-86)

## பரிசளிப்பு விழா

கரணவாய், ஜூன் 21

வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தையல் பாகர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடை பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை பேரா சிரியர் மா.சின்னத்தம்பியும், சிறப்பு விருந்தினராக வட மராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.செல்வ ராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-400)

## சமய சந்நிதிகளில்

மூளாய்–வதிரன் புலோ சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் திருத்தண்டிகையில் வீதியுலா வருவார். (ந)

★ ★ ★

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் பெரும் பொருள் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வசந்த மண்டபத்தின் கலச அபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.48 மணிக்கு நடைபெற வுள்ளது. (வ)

## பயிற்சி வகுப்பு

அளவெட்டி, ஜூன் 21

சுகாதாரப் பணி உதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி நிரந்தர நியமனம் பெற்ற சுகாதாரப் பணி உதவியாளர்கள் அனைவரையும் இந்த வகுப்பில் கலந்து கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-36)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொழும்பு பங்குப் பரிவர்த்த னையின் யாழ்.கிளை முதலீட்டாளர் வலுவூட்டல் நிகழ்வாக ''நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு'' எனும் தலைப்பில் முதலீட்டாளர் வலுவூட்டல் நிகழ்வு நாளை சனிக்கிழமை தொடக்கம் வார இறுதி நாள்களில் பிற் பகல் 3 மணி முதல் மாலை 6 மணிவரை பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளையில் நடைபெறவுள் ளது.

நிறுவனங்கள் தமது செயற்பாடுகளின் பெறுபேறுகளை நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் நிதிக் கூற்றுக்களை பகுப்பாய்வு செய்யவேண்டிய தேவையும் உள்ளது. இதனை மையப்படுத்தி இந்தப் பயிற்சிப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் யாழ். பல் கலைக் கழக விரிவுரையாளர்கள் ஆ.சுப்பிரமணியம், நிமலதாசன் மற்றும் விரிவுரையாளர் வே.குமணன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ஓ-14)

★ ★ ★

கட்டுடை கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு கட்டுடை சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பயிற்சிப் பட்டறையில் பிரதேச செயலர் [illegible] ஆகியோர் கலந்து கொள்வர். (ந-100)

## வாழ்க்கையின் ஆதாரம்

''கதையில் எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்'' என கதையில் முடிவைச் சொல்கிறமாதிரி, ஆனந்தமாக இருப்பது என்பது முடிவு அல்ல; அதுதான் உங்கள் வாழ்வின் முதற்படி! ஆனந்தம் என்ற அடித்தளம் உறுதியாக இருந்தால்தான் அதன்மீது உங்கள் வாழ்வு என்ற மாளிகை எழ முடியும். வாழ்வின் அடித்தளமான ஆனந்தம் உங்களிடம் தான் உருவாக வேண்டும். இந்த உண்மையை உணராமல் அதைத்தேடி எங்கேயோ போய்க் கொண்டிருக் கிறீர்கள். அடித்தளமே இல்லாத ஒரு வீட்டில் குடி இருப்பது எவ்வளவு ஆபத்தான விடயம் தெரியுமா? வீட்டின் கூரையைக் கையில் தாங்கிக்கொண்டே உங்களால் எவ்வளவு நேரம் இருக்க முடியும்? சற்றுநேரம் நீங்கள் தளர்ந்தால், உங்கள் தலைக்கு மேலேதான் எல்லாம் வந்து விழும்.... இல்லையா? நிலையான அஸ்திவாரம் அமைந்தால், அதன் மீது எவ்வளவு பெரிய மாளிகையையும் நீங்கள் கட்டிக் கொள்ளலாம்.

வாழ்க்கையும் இப்படித் தான்! நீங்கள் ஆனந்தமாக இருந்தால் உங்கள் விருப்பப்படி ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம்.

ஞானக்கதிர்

ஆனால் இப்போது உங்களிடம் ஆனந்தம் என்னும் அஸ்திவாரமே இல்லாததால், வாழ்க்கையே பெரும் பாரமாகி விட்டது. தினசரி செய்யும் வழக்கமான செயல்கள் கூட உங்களுக்குப் பெரும் சலிப்பையும் வேதனையையும் தரும் விடயங்களாக மாறிவிட்டன.

## மரண அறிவித்தல்

**பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர் கைலாயநாத சர்மா**

*(சந்திரன் ஐயா-பிரதம குரு பூநகரி செட்டியாகுறிச்சி திகிரிப் பிள்ளையார் ஆலயம்)*

நேற்றைய உதயனில் (20.06.2013) பக்கம் 4 இல் பிரசுரமாகி இருந்த மேற்படி மரண அறிவித்தலில் பகீரதசர்மா, கேதீஸ்வரசர்மா, ராதிகா ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரசர்மா (சுச்சாய் வீதி, வீரபத்திர கோயில் )அவர்களின் அன்பு மாமனும் என்பதையும் சேர்த்து வாசிக்கவும். (சி/9926)(3.5.6.7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஞானாமிர்தம் மரியநாயகம்
அவர்களின் பாசமிகு மாமியார்
**நீக்கிலஸ் கத்தறினா**
அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு
அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு
அன்னாரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/நாவற்குழி ம.வி. நாவற்குழி. (38497)(3.5.6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07.02.1949
மறைவு 24.06.2010



**அமரர் சின்னத்தம்பி ஐயாத்துரை**
(முன்னாள் சாரதி CTB)

ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு அகலவில்லை
உங்களை அன்புடன் நினைவு கூரும்.

மட்டுவில் தெற்கு, மருதங்குளம்
சாவகச்சேரி.

(38424)(3.6.10)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17.03.1935
மறைவு 22.05.2013



யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை
வதிவிடமாகவும் கொண்ட
**அமரர் கந்தையா முத்துக்குமாரசாமி**
(இளைப்பாறிய தபாலதிபர்)

கடந்த 22.05.2013 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா முத்துக்குமாரசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (21.06.2013) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(38468)(15.6.3)

மனைவி,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தேர்தலை நடத்த சிங்கள மக்கள் ஆதரவு

## இனவாதிகளே குழப்பம் செய்கின்றனர் என்கிறார் அஸாத்

கொழும்பு,ஜூன் 21

சிங்கள மக்களில் 90 வீதமானவர்கள் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு பூரண சம்மதம் தெரிவிக்கின்றனர். ஆனால், பொதுபல சேனா, இராவணா பலய போன்ற இனவாத இயக்கங்கள் சிங்கள மக்களின் பேரில் நாட்டில் துவேசத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் மும்முரமான ஈடுபட்டு வருகின்றன.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் அஸாத் சாலி குற்றம் சுமத்தியுள்ளார்.

'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு பான்ஸ் பிளேசில் அமைந்துள்ள அஸாத் சாலி அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்



இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் 'சிங்கள மக்களின் பேரிலேயே அநியாயங்கள் நடைபெருகின்றன.

வடமாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால், அது நாட்டையே இரண்டாக்கிவிடும் என பொது பல சேனா, இராவணா பலய போன்ற இனவாத அமைப் புகள் கூளுரைத்துக் கொண்டு இருக்கின் றன. அதுமட்டுமல்லாது, அப்படி நடைபெறுமாயின் அது சிங்கள மக்களுக்கே பெரும் அச்சுறுத்தலாகிவிடும் என்றும் கூறிக் கொண்டிருக்கின் றன. ஆனால், அவர்களின் பேச்சை எல்லாம் தற்போது சிங்கள மக்கள் கருத்தில் கொள்வதேயில்லை.

இலங்கையிலுள்ள 8 மாகாண சபைகளிலும் இதுவரை காலமும் தேர்தல்கள் நடைபெற்றே வருகின்றன. வட மாகாணத்தில் மட்டும் தேர்தலை வைத் தால் எப்படி அது பயங்கரவாத செயலாகும் என்ற கேள்வி தற்போது சிங்கள மக்கள் நன் றாக மத்தியில் தலையெடுத்துள்ளது-என்றார். (ச)

## ஆஸி. புகலிட கோரிக்கையாளருக்கு நிபந்தனைகளுடன் தற்காலிக விசா

### உயிரிருந்தும் நடமாட முடியாத நிலை

கொழும்பு,ஜூன் 21

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருவோருக்கு மூன்று நிபந்தனைகளுடன் தற்காலிகமான விசா வழங்கப்படுவதனால் தமிழர்களுக்கு உயிரிருந்தும் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ஆஸ்திரேலியாவில் இருக்கும் பாதிக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புகலிட கோரிக்கையாளர்களுக்கு தொழில் செய்ய முடியாது, குடும்பத்தை ஆஸ்திரேலியாவுக்கு அழைக்க முடியாது மற்றும் பணம் அனுப்பமுடியாது ஆகிய மூன்று நிபந்தனைகளுடனேயே தற்காலிக விசா வழங்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதிக்கு பின்னர் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைந்தவர்களுக்கே இவ்வாறான நிபந்தனைகளுடன் தற்காலிக விசா வழங்கப்படுகின்றது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில், தமிழ் மக்கள் சொந்த நாட்டிலேயே அச்சமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை கிட்டாமையாலேயே தாய் நாட்டை விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்து வருகின்றனர். இவற்றில் ஒன்றுதான் இந்த கடல் வழியான ஆஸ்திரேலியா பயணமாகும் என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடல் மார்க்கமாக பயணிப்பது என்பது ஒரு மனிதனின் மரணப் பயணமாகவே அமைகின்றது. தமிழ் அகதிகள் தமது உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்திலேயே இவ்வாறான பாதுகாப்பற்ற இந்த கடல் பயணத்தை தொடர்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், தற்போது ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம். தனது சட்டத்தில் திருத்தங்களை எற்படுத்தி உள்ளது. இந்த திருத்தங்களுடன் வழங்கப்படும் தற்காலிக விசா தமிழர்களுக்கு உயிரிருந்தும் நடமாடமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச)


புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

21.06.2013

நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனித்திங்கள் 07ஆம் நாள் 21.6.2013 வெள்ளிக்கிமை மு.ப. 10.30 மணிவரையுள்ள சித்தமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

சிவா றேடிங்கோ

எனும் புதுக்கடை திறப்பு விழா செய்ய இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

A-9 வீதி,
கிளிநொச்சி.

R. சுதன்



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com



மண்டப வசதி உண்டு

அரங்கேற்றம், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் விழா, ஒன்று கூடல் மற்றும் பொது வைபவங்கள் அனைத்துக்கும் சகல வசதிகளும் கூடிய மண்டபம்.

தொடர்பு: க. ராதாகிருஷ்ணன்
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
T.P: 0777549803, 021 222 3334
(38559) (10,7,16)



வாடகைக்கு

TATA 207 DI FULL BODY
மாத வாடகைக்கு விடப்படும்.
T.P:- 077 9431388



FOR HIRE வாடகைக்கு விடப்படும்



JCB (Bachoe), Dozer (D4E & mini), Exavator with Braker (havy & light) Tractor with Trailer or carrier, lorry with full body, halfbody, with out body, water bowser, concrete mixture
Contract for land Cleaning, Land Scaping, Fencing and Planting
எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப்படும்
CONTACT :- 0722263778 / 0714167878



வேலையாள்கள் தேவை

கட்டட வேலைக்கு கைஉதவி வேலையாள்கள் தேவை.

தொடர்புக்கு:
0729151215
(38554) (10,7,18)



வெல்லுக மகாஜன மாதா

யாழ் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

இடம்:
பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர் கூடம், மகாஜனக் கல்லூரி.
காலம்:
24.06.2013- திங்கட்கிழமை
நேரம்:
காலை 9.00 மணி
தலைமை
திரு.கு.வேல்சிவானந்தன் அவர்கள்
(அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)
பிரதம அதிதி
பேராசிரியர். சோ. சந்திரசேகரன் அவர்கள்
மகாஜனன்
(முன்னாள் பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)
விசேட அதிதிகள்
திரு.செ. சந்திரராஜா அவர்கள்
(கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
திரு.க.ஜெயேந்திரன் அவர்கள்
மகாஜனன்
(உற்பத்திப் பொறியியலாளர், தலைவர், பழைய மாணவர் சங்கம், கனடா)
கெளரவ அதிதி
திரு.சு.சண்முககுலகுமாரன் அவர்கள்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்)
நினைவுப் பேருரை
கலாநிதி .சி.சிவநிர்த்தானந்தா அவர்கள்
மகாஜனன்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர், கல்வித்திணைக்களம், கிழக்கு மகாணம்)
ஆசியுரை
கெளரவ கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
பரிசில் வழங்கல்
திருமதி சா. சந்திரசேகரன் அவர்கள்
நன்றியுரை
திரு. இ. ஸ்ரீதரன் அவர்கள்
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலைச் சமூகம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
சுத்தப்படுத்தல் சேவை
வழங்குவதற்கான விலைமனு கோரல்

இல.84, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்துக்கு ஒரு வருட காலத்துக்கு சுத்தப்படுத்தல் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

வியாபாரப் பெயர்கள் சட்டம் இல.4/1990 இனால் ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 149) இன்படி பதிவு செய்த அல்லது வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றுடன் இணைக்கப் பட்டமைக்கான சான்றிதழ் (பகுதி 20இன் பிரகாரம்) உள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 05.07.2013 நண்பகல் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/=ஐ நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் உறையின் மேல் மூலையில் ''சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு'' என அடையாளமிடப்பட்டு 09.07.2013 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதவுத் தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ இல.57, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலை மனுக்கள் 09.07.2013 அன்று பி.ப 2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்துக்கு சமுகமளிக்கலாம்.

சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்துக்கு குறையாத சம்பளம் ஊழியர்களுக்கு வளங்கப்படுமென்ற உத்தரவாதம் சேவை வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்

சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையும், ஓய்வுநிலை உச்ச நீதி மன்ற நீதியரசர் க.வி. விக்னேஸ்வரனின் சொற்பொழிவுகளின் தொகுப்பான 'இந்து சமய சிந்தனைகள்' தமிழ், ஆங்கில மொழிகளிலான இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பணிமனையில் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும். அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் வி.கைலாசபிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில்; வெளியீட்டு உரையை கலாநிதி ஆறு.திரு முருகனும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையை நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனும் நிகழ்த்துவர்.

நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலயங்களுக்கு பன்னிரு திருமுறைகள் வழங்கலும் இடம்பெறும். (ந)

குடாநாட்டு வர்த்தகர்களின்

# கடன் சுமையைக் குறைக்க வங்கிகள் முன்வரவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 21

குடாநாட்டு வர்த்தகர்களின் கடன் சுமையைக் குறைப்பதற்கு உடனடி நிவாரணமாக மத்திய வங்கி இலகு கடன் திட்டத்தை குறைந்த வட்டி யுடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

குடாநாட்டு வர்த்தகர்களின் தற்போதைய பிரச்சினை தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி யாழ்ப் பாண வணிகர் கழகத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துரை வழங்கிய வணிகர் கழகத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய் சூழலில் குடாநாட்டு வர்த்தகர்கள் எதிர் கொள்ளும் பாரிய பிரச்சினையாக கடன் சுமை உள்ளது.

குறிப்பாக வங்கிகளின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டமையால் பலர் கடன்களை மீளச் செலுத்த முடியாமல்தற்கொலை செய் துள்ளதுடன்தற்கொலைமுயற்சி யிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்கான தீர்வு அவர்களது கடன் சுமை குறைக்கப்படவேண்டும்.

இவ் விடயத்தில் மத்திய வங்கி தலையிட்டு உடனடியாக வங்கிகள் ஊடாக இலகு கடன் திட்டத்தை குறைந்த வட்டியுடன் வழங்க வேண்டும். அவ்வாறானதொரு திட்டம் கொண்டு வரப்பட்டால் வர்த்தகர்களை கடன் சுமை யில் இருந்து மீட்க முடியும்.

அத்துடன் வங்கிகள் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளாமல் தகுதிக்கு மீறியதான கடன்களை வர்த்தகர்களுக்கு வழங்குவதுடன் அவர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றன.

எனவே வர்த்தகர்களின் தற்போதைய கடன் சுமையை குறைக்க வங்கிகள் ஒத் துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ந-14)

## மாணவனைக் காணவில்லை



யாழ்ப்பாணம், ஜூன் 21

வவுனியா பண்டாரிக் குளத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவன் சிவ சூரியகுமார் சனராஜ் என்பவர் கடந்த 13 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரியைச் சேர்ந்த குறித்த மாணவன் காணாமல் போயுள்ளமை தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையம், மனித உரிமை ஆணைக் குழு, சிறுவர் பாதுகாப்புக் குழு, பாடசாலை நிர்வாகம் ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

பாடசாலை செல்லு[illegible] போது காணாமல் போயுள்ள குறித்த மாணவன் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ, மனித உரிமை ஆணைக் குழுவிலோ தெரிவிக்கும் படி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (ந-14)

# இரவோடு இரவாக திருட்டுப் போகும் மண்

### பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டும் பயனில்லை

கொழும்புத்துறை, ஜூன் 21

அரியாலைப் பகுதிகளில் சட்ட விரோத மண் அகழ்வு இரவு வேளைகளில் மும்முரமாக இடம் பெற்று வருவதாக அந் தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக தினமும் இரவு வேளைகளில் பல டிராக்டர்கள் ஒன்றிணைந்து இந்த மண் அகழ்தலை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்ட விரோத மண் அகழ்வினால் அரியாலை, நாவலடி, பூம்புகார், கிழக்கு அரியாலை போன்ற பகுதி களில் உள்ள தனியார் காணிகள் பெரும் குழிகளாக மாறிவருவதைக் காணமுடிகிறது.

இந்த சட்ட விரோத மண் அகழ்வைத் தடுக்கும் முகமாக பகல் வேளைக ளில் பொலிஸாரின் கண் காணிப்பு, நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகளின் கண்காணிப்பு என்பன முடுக்கிவிடப் பட்டன. எனினும் இரவையும் நிலவையும் சாதகமாக்கி மண்ணை அகழ்ந்து வந்து விற்பனை செய்வதில் சிலர் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-135)

## இறுவட்டுகள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் சங்காபிஷேகமும், இறுவட்டு வெளியீடும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. நாளைக் காலை 7 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்ப மாகி நண்பகல் 12 மணிவரையில் இடம் பெறும். அதன்பின்னர் 'அம்பலவாணேஸ்வரர் போற்றி' இறுவட்டு ஆலய பரிபாலனசபையால் வெளியிடப்படவுள்ளன.

நிகழ்வில் வாழ்த்துரையை யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகமும், வெளியீட் டுரையை வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷும், மதிப்பீட்டுரையை யாழ்.பல் கலைக்கழக விரிவுரையாளர் ச.குமரனும் வழங்கவுள்ளனர். (ஒ-5)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 21

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் மீது பாடப்பட்ட பக்திப் பாடல்கள் கொண்ட 'லஷ்மி நாதம்' எனும் இறுவட்டு அமரர் விஜய லஷ்மி அம்மா இராமச்சந்திரக் குருக்கள் நினைவாக வெளியிடப்படவுள்ளது.

இந்தவெளியீடுநாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஆலய மண்டபத்தில் ஆலய அறங் காவலர் சபைத் தலைவர் [illegible] தலைமையில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (ந)




சித்தி விநாயகர்
(ஐயனார்) கோவில், கோக்குவில் மேற்கு, கோக்குவில்.
2013 ஆம் ஆண்டு
மஹோற்சவ அறிவித்தல்
விஜய வருடம் ஆனி மாதம் 29 ஆம் நாள் (13.07.2013) சனிக்கிழமை
கொடியேற்றவிழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் (10) தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.
தர்மகர்த்தா
கப்பையா சற்குணம்.

முன்பள்ளி ஆசிரியர்கள் தேவை
வவுனியாவில் அமைந்துள்ள முன்பள்ளிக்கு ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.
முன்பள்ளி கல்வியைத் தேர்ந்தெடுக்க ஆர்வமுள்ளோரும் ஆங்கிலம் தெரிந்தவர்களும் 27.06.2013 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.
தொடர்பு:
இல.86, 4 ஆம் ஒழுங்கை, பாலவிநாயகர் வீதி, தவசிகுளம், வவுனியா.
(35276) (3.6.7.11)

மொறட்டுவ பல்கலைக்கழக பட்டப்படிப்பு
Bachelor of Information Technology
உலகத்தரம் வாய்ந்த மொறட்டுவ பல்கலைக்கழக பட்டப்படிப்பு
மொறட்டுவ பல்கலைக்கழக பட்டதாரியாகும் அரியவாய்ப்பு...!



ESOFT
Shaping Lives, Creating Futures.
இடமிருந்து மட்டுமே...!
NOW IN JAFFNA
தகுதியானவர்கள்
உயர்தரத்தில் எந்த துறையிலாவது ஒரே தடவையில் சித்திபெற்றோர் மற்றும் சாதாரண தரத்தில் கணித பாடத்தில் "C" தரச் சித்தி பெற்றோர்.
அல்லது
HNDIT - SLIATE
பூர்த்தி செய்த மாணவர்களும் நேரடியாக இறுதியாண்டிற்குள் நுழைய முடியும்.
(16 பாடநெறிகள் விலக்களிக்கப்படும்)
விண்ணப்ப இறுதி நாள் 1st சுற்று 30. 06. 2013
விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள ESOFT கிளையை நாடுங்கள்...!
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 750 ...
CALL : 077 309 9 308

பாராட்டி வாழ்த்துகிறோம்
நடராஜா சடாதரன்



'வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம் மனமார வாழ்த்துகிறோம்'
வாழ்த்துவோர்:
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.
அதிபர்,ஆசிரியர்கள், ஊழியர்கள்
(38491)(3.5.6)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரசடி வீதியில் (நல்லூர் கோயிலுக்கு அருகில்)
4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
075 776 3694/077 051 7421


Personal Class
தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். நீங்கள் வந்து கற்கும் நிறுவனத்திலும் கற்கும் வாய்ப்பும் உண்டு.
தொடர்பு: K.K.S. Road, Jaffna.T.P.:077 2734184

உதயன் பணிநிலை வெற்றிடம்
கிளிநொச்சியில் இயங்கும் எமது கிளை நிறுவனத்துக்கு
★ பத்திரிகை விநியோகஸ்தர் (சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள்)
★ லிகிதர் (கணினி அறிவுடையவர்கள்) தேவை
ஆர்வமுள்ளவர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு
சுயவிபரத்தை 25.06.2013 இற்குமுன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.
உதயன் பணிமனை" 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நகர்ப் பகுதியின் பிரதான வீதிகளுக்கே கால்வாய்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 21

நகரப் பகுதிகளின் பிரதான வீதிகளுக்கு மட்டுமே கால்வாய் வசதி வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

வீதியிலுள்ள நீர் வழிந்தோடுவதற்கே அவை அமைக்கப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 'சி-7' திட்டப் பணிப்பாளர் மோசஸ் மரியதாஸன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் 4 பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகளும் நிறைவடையும் நிலையில் உள்ளன. இந்த நிலையில் பிரதான வீதிகள் முழுவதற்கும் கால்வாய்கள் அமைக்கப்படாமல் குறித்த சில இடங்களில் மாத்திரம் ஏன் கால்வாய்கள் அமைக்கப்படுகின்றன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணியானது, வீதியை அகலமாக்கி புனரமைப்பதும் அதனைப் பாதுகாப்பதும்தான். இதனையே நாம் முன்னெடுக்கின்றோம். நகரப் பகுதிகளின் பிரதான வீதிகளுக்கு மாத்திரமே நாம் கால்வாய் அமைத்துக் கொடுப்போம். வீதியிலுள்ள நீர் வழிந்தோடுவதற்காகவே அதனைச் செய்கின்றோம் - என்றார். (வ-5)

# மதுவுக்கு அடிமையானோருக்கு மறுவாழ்வு அளிக்கும் விடுதி

## முதன் முதலாக சாவகச்சேரி வைத்தியசாலையில்



தென்மராட்சி, ஜூன் 21

வடமாகாணத்தில் மதுபோதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாதவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் விடுதியொன்று முதன் முதலாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று உளநல மருத்துவ நிபுணர் சிவயோகன் தெரிவித்தார்.

வைத்தியசாலை பணியாளர்களுடனான நேற்றைய கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் வழிகாட்டலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலை உளநல வைத்திய நிபுணர் சிவயோகனின் நெறிப்படுத்தலில் இந்த விடுதி இயங்கவுள்ளது.

இது விடுதியாக அல்லாது பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கக் கூடிய ஆற்றுப்படுத்தல் நிலையமாகவே செயற்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் சந்தர்ப்ப வசத்தால் மதுபோதைக்கு அடிமையானவர்களே அதிகமானோர் என்பதாலும், அவர்களை நல்வழிப்படுத்துவது இலகுவான விடயம் எனக் கருதப்படுவதாலும் போதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் தவிப்பவர்கள் தாமாக முன்வந்து வைத்திய நிபுணருடன் கலந்தாலோசித்து நிலையத்தில் தங்கலாம். இவ்வாறான நிலையங்கள் இலங்கையில் குருணாகல், கொழும்பு ஆகிய இடங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக இத்தகைய நிலையமொன்றை அமைக்க சுகாதாரத் திணைக்களத்தினர் முன்வந்துள்ளமை பாராட்டக் கூடியது.

அத்துடன் இந்த வைத்தியசாலையில் சிற்றூழியர்கள் பற்றாக்குறையான நிலையிலும் இங்கு பணியாற்றுவோர் மேலதிக நேரம் பணியாற்ற மனவிருப்பத்துடன் முன்வந்தமை சுகாதாரத் திணைக்களத்தினர் எடுத்த நடவடிக்கைக்கு உந்து சக்தியாக அமைகிறது.

இந்த முயற்சி வெற்றியளிக்குமாயின் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளில் இளவயதில் போதைக்கு அடிமையாகியுள்ள எமது மக்களின் இளையோர் இங்கு வந்து புனர்வாழ்வு பெற முடியும். வடபகுதியில் டெங்கு மற்றும் எயிட்ஸ் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களை விட மதுபோதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாதிருப்போரின் எண்ணிக்கை மிக மிக அதிகமாகும்'' என உளநல வைத்திய நிபுணர் கருத்து வெளியிட்டுள்ளார். (வ-9)

குடும்பத் தலைவர் சிறைவாசம் அனுபவிப்பதால்

## சவால்களை எதிர்கொள்ளும் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 21

குடும்பத் தலைவர் நீதிமன்றத்தினூடாக சிறைவாசம் அனுபவிப்பதால் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு நலன்புரி உதவிகளை வழங்க சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்டச் செயலகத்தால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தலைவர் சிறைவாசம் அனுபவிப்பதால் அவரது குடும்ப உறுப்பினர்கள் சமூகப் பிரச்சினைகளுக்கு அதிகளவில் முகம் கொடுக்க வேண்டிய காரணங்களால் அவர்கள் தவறான வழியில் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவ்வாறு செல்வதைத் தடுத்து தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பை செய்ய வேண்டியது அனைவரின் கடமையாகும்.

இவ்வாறான குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதேச இளைஞர் சேவைகள் அலுவலர், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அலுவலர் போன்றோர் மூலம் தகவல் திரட்டி அக்குடும்பத்தினர் எதிர்நோக்கும் பொருளாதார மற்றும் ஏனைய செயற்பாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய தேவைகளையும் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (வ-9)

## நயினை தேர், தீர்த்தத் திருவிழாவுக்கு விசேட பஸ் சேவை ஏற்பாடு

### வடமராட்சி மக்களின் வசதிக்காக

வடமராட்சி, ஜூன் 21

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் தேர், தீர்த்தத் திருவிழாவுக்குச் செல்லும் வடமராட்சிப் பிரதேச பக்தர்களின் வசதி கருதி பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ விசேட பஸ் சேவைகளை நடத்த முன்வந்துள்ளது.

முறையே நாளை சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் இடம்பெறவுள்ள தேர், தீர்த்தத் திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்கள் வசதி கருதி பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஊடாக குறிகாட்டுவானுக்கும், குறிகாட்டுவானிலிருந்து அதே விதத்தில் பருத்தித்துறைக்கும் விசேட பஸ் சேவை நடைபெறும் எனப் பருத்தித்துறை இ.போ.ச. சாலை முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்தார்.



குறித்த இரு தினங்களும் முதலாவது பஸ் பருத்தித்துறையில் இருந்து அதிகாலை 5 மணிக்குப் புறப்படும். தொடர்ந்து பக்தர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு விசேட பஸ் சேவை தொடர்வதுடன் திருவிழாக்கள் நிறைவுற்றதும் குறிகாட்டுவானில் இருந்து பருத்தித்துறை நோக்கி பஸ்கள் புறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-8)

## அங்க சேஷ்டைகளில் மாணவர்கள்

### பொலிஸில் முறையிட்டார் மாணவி

யாழ்ப்பாணம், ஜூன் 21

பாடசாலை மாணவி ஒருவருடன் பாலியல் ரீதியிலான அங்க சேஷ்டைகளில் ஈடுபட முற்பட்டு வந்தனர் என்று குற்றஞ்சாட்டி இருவருக்கு எதிராக குறித்த மாணவி தனது பெற்றோருடன் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்.நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவியே இவ்வாறு முறைப் பாடு செய்துள்ளார். பாடசாலை சென்று வரும் போதெல்லாம் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபட முற்படுவதாக குறித்த மாணவர்கள் மீதும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த மாணவர்களும் மாணவியும் ஒரே பாடசாலையில் கல்வி கற்பவர்கள் என்றும் இந்த அத்துமீறிய செயல் தொடர்பில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரிடம் முறைப்பாடு செய்தும் அவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## நீரிழிவுப் பரிசோதனையில் ஒருவரின் செலவாக ரூ.100

தென்மாட்சி, ஜூன் 21

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறும் நீரிழிவு சிகிச்சை கிளினிக்குக்கு வருவோரிடையே நடத்திய நேர்காணலில் ஒரு நோயாளிக்கு ஒரு தடவை கிளினிக்கு வந்து செல்ல சராசரியாக 100 ரூபாவுக்குள் செலவாவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

சிகிச்சைக்கு வருவோருக்கு ஏற்படும் பயணக் கூலி, தேநீர்ச் செலவு, தனியார் மருந்தகத்தில் பெறப்படும் மருந்துகள் ஆதிய செலவுகள் தொடர்பாக ஆய்வை நடத்தியதன் பேரில் இந்தத் தகவல் பெறப்பட்டது.

மாதத்தில் பிரதி வியாழக்கிழமைகளில் வைத்தியசாலையில் நடத்தப்படும் நீரிழிவு சிகிச்சை கிளினிக்கில் 800 இற்கு மேற்பட்டோர் மாதத்தில் இரு தடவை சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து கிளினிக்குக்கு வரும் நோயாளர்களில் சிலரிடம் கிளினிக்குக்கு வரும் வேளையில் ஏற்படும் சகல செலவுகள் தொடர்பாக நேரடியாகக் கலந்துரையாடப்பட்டது.

இவ்விதம் 15 பேரிடம் பெற்ற தகவலின் அடிப்படையில் கிளினிக்குக்கு வரும் நோயாளர்களுக்கான சகல பரிசோதனைகளும் வைத்தியசாலையில் இலவசமாக மேற்கொள்ளப்படுவதால் ஒரு தடவை கிளினிக்குக்கு வந்துபோக தமக்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவு, காலை உணவு மற்றும் வைத்தியசாலையில் இல்லாத அமலோடிப்பின், மெற்போமின் போன்ற மருந்துகளை தனியார் மருந்தகத்தில் கொள்வனவு செய்வதற்கான செலவு ஆகியவை உட்பட சராசரியாக ஒருவருக்கு தலா 100 ரூபா வீதம் செலவாகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## பருத்தித்துறையில் இரவில் பொலிஸார் ரோந்து



வடமராட்சி, ஜூன் 21

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் இரவு வேளைகளிலும் போக்குவரத்துப் பொலிஸார் வாகனக் கண்காணிப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு நேரத்தில் வெளிச்சம் இன்றி சைக்கிள் ஓட்டுவோர் மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை ஓட்டுவோரை இந்தச் சோதனை நடவடிக்கையின் போது இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்தச் சோதனை நடவடிக்கையால் சைக்கிள்களில் வெளிச்சம் இன்றி இரவு வேளைகளில் பயணிப்போர் தொகை குறைந்துள்ளது. (வ-8)

## மினிபஸ் பின்புறம் விபத்தில் சேதம்

வலி.வடக்கு, ஜூன் 21

இணுவில் கந்தசுவாமி கோயில் சந்தியில் இடம்பெற்ற உழவு இயந்திரம் மற்றும் மினிபஸ் விபத்தில் மினி பஸ்ஸின் பின்புறம் சேதம் அடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த விபத்து காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்றது. சுன்னாகம் - அளவெட்டி செல்லும் பாதையில் பயணிகளுடன் வந்த மினி பஸ்ஸை நிறுத்த முற்பட்ட வேளையில் பின்னால் வந்த உழவு இயந்திரம் மினி பஸ் மீது மோதியது.

இதனால் தெய்வாதீனமாக பயணிகள் எவரும் காயங்களுக்கு உள்ளாகாதபோதிலும் மினிபஸ் சேதம் அடைந்துள்ளது.

இது தொடர்பாக சுன்னாகம் வீதி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் உப நகரமாக அக்கராயன் பிரதேசம்

## கிளிநொச்சி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன், ஜூன் 21

கிளிநொச்சியின் உப நகரமாக அக்கராயனை மாற்றுவதற்கு அரச செயலகம் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாக கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் விளையாட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனக்கெனத் தனியான அமைவிடத்துக்கு வந்த பின்னர் நடைபெறுகின்ற இந்த முதலாவது விளையாட்டு விழாவிலே நான் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அக்கராயன் என்பது எமது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான பிரதேசமாகும். எமது மாவட்டத்தில் சிறந்த உப நகரமாக உருவாகுவதற்குக் காத்திருக்கும் பிரதேசம் அக்கராயன் என்றால் அது மிகையாகாது.

அக்கராயனை உப நகரமாகக் கட்டியெழுப்புவதற்கு எமது மாவட்டச் செயலகமும், அக்கறையுடையவர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஆரம்பமாக அடிப்படையான அபிவிருத்தித் திட்டங்களையும் கட்டுமானப் பணிகளையும் ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக அக்கராயனைத் தனிப் பிரதேச செயலர் பிரிவாக முன்மொழிந்து தேசிய எல்லை நிர்ணயக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய எல்லை நிர்ணயக் குழு தனிப் பிரதேச செயலகத்தை உருவாக்கும் போது உப நகரம் ஒன்றை அக்கராயனில் உருவாக்குவதற்குக் காத்திருக்கின்றோம்.

அதே போன்று அக்கராயன் பிரதேசம் தனியானதொரு அலகு என்பதைக் கருத்தில் கொண்டு பிரதேச சபையை



உருவாக்குவதற்கும் அதன் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கும் அமைக்கப்பட்டுள்ள குழுவில் நானும் ஓர் அங்கத்தவராக உள்ளேன்.

இந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அக்கராயன் மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளில் கணித விஞ்ஞானப் பிரிவுகளையும் வன் னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் கலைப் பிரிவையும் ஆரம்பித்ததன் மூலமாக ஓர் அடித்தளம் இடப்பட்டுள்ளது.

அக்கராயன் உப நகரத்தை எழுச்சி பெறச் செய்வதற்கு பிரதான வீதிகளைச் செப்பனிட வேண்டும். மேலும் மின்சாரத்தைக் கொண்டு வருவதும் வணிக வங்கிகளை அமைத்தலும் இங்கு தேவையாக உள்ளன.

இந்தப் பிரதேசத்தில் காணப்படும் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமூகக் கட்டமைப்பு வேலைத் திட்டத்துக்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்க்குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அடுத்த ஆண்டுக்குள் நிறைவடையும்போது தண்ணீர் நெருக்கடி தீர்ந்து விடும்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே இரு உபநகரங்கள் தான் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஒன்று வட்டக்கச்சியை மையமாகக் கொண்ட பிரதேசம். ஏனையது அக்கராயன் பிரதேசம். இந்த இரு நகரங்களையும் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைவோம் - என்று தெரிவித்தார். (க-18)

## இடையூறு விளைவிக்கும் வவுனியா இராணி மில் வீதி



இராணி மில் வீதி

வவுனியா, ஜூன் 21

வவுனியா, இராணி மில் வீதியைப் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு இடையூறுகள் காணப்படுகின்றமை தொடர்பாக வவுனியா நகரசபையிடம் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள மில் ஒன்றுக்குச் செல்லும் கனரக வாகனங்களின் போக்குவரத்துக் காரணமாக இந்த வீதி பழுதடைந்து காணப்படுகின்றது.

மேலும் வாகனங்களில் இருந்து வேறு வாகனங்களுக்கு சிமெந்துப் பைகள் மாற்றப்படும் போது எழும் தூசி சுகாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகிறது. மேலும் குறிப்பிட்ட மில்லில் இருந்து வெளியேற்றப்படும் நீர் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே இந்த வீதியின் சுகாதாரத்தை உரிய வகையில் பராமரிக்குமாறு பொது மக்கள் வவுனியா நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# தீயிட்டு எரிக்கப்பட்டன தமிழர்களின் வீடுகள்

## நெளுக்குளம் விநாயகபுரம் பகுதியில் அடாவடி



வவுனியா, ஜூன் 21

வவுனியா - நெளுக்குளம் விநாயகபுரத்திலுள்ள தமிழர்களின் வீடுகள் விசமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது காணிகளை ஆக்கிரமிப்பதற்கான முயற்சிகளையும் குறித்த ஒரு சமூகத்தினர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் விநாயகபுரம் பகுதியில் வசித்து வந்த தமிழ் மக்கள் வேலை வாய்ப்புக்களைத் தேடி வேறு இடங்களுக்குச் சென்று குடியமர்ந்தனர். தற்போது இந்தப் பகுதியில் ஆடைத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டதனை அடுத்து இந்தப் பகுதியில் வசித்து வந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் அந்தப் பகுதியில் எந்தவித தொடர்புகளும் இல்லாத முஸ்லிம் மக்கள் அடாத்தாக காணி அபகரிப்பை மேற்கொண்டதை அடுத்து பொலிஸாருக்கு இது தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த பகுதி தமிழ் மக்களின் பூர்வீக இடம் எனவும், அங்கு முஸ்லிம்கள் காணி அபகரிப்பில் ஈடுபடக்கூடாது என்றும் பொலிஸார் சம்பந்தப்பட்ட தரப்பினரை எச்சரிக்கை செய்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையிலேயே சிலரால் வீடுகளுக்குத் தீயிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எரிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டதுடன் இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரச அதிபரிடமும், வவுனியா பிரதேச செயலரிடமும் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

## விசில் ஊதுவதற்கு தடை விதித்த வவுனியா பொலிஸார்

### மாகாண மட்டப் போட்டியில் இழுபறி

விசில் ஊதுவதற்கு பொலிஸார் தடை விதித்ததன் காரணமாக மாகாண மட்டப் போட்டிகளின் போது சில மணி நேரம் மாணவர்களும், ஏற்பாட்டாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாக அறிய முடிகின்றது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்டப் பெரு விளையாட்டுக்கள் வவுனியாவில் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு கட்டமாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நேற்று வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றன.

அதன்போது மைதானத்துக்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார், நீதிமன்ற அமர்வுகள் இடம்பெறுவதால் போட்டியை உடன் நிறுத்துமாறும், விசில் ஊதாமல் போட்டியை நடத்துமாறும் மைதானத்திலிருந்த நடுவர்களிடம் கூறினர்.

இதனை அடுத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டிகளை இடையில் நிறுத்த முடியாது எனவும், போட்டி நிறைவடைந்ததும் நிறுத்துவதாகவும் நடுவர்களினால் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளாத பொலிஸார் போட்டியை நிறுத்தாதுவிட்டால் அனைவரையும் கைது செய்து உள்ளே தள்ளிவிடுவோம் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்து போட்டி ஏற்பாட்டாளர்களால் இது தொடர்பாக வவுனியா நகர சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதுடன் தொடர்ந்தும் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதேவேளை நகர சபை மைதானத்துக்கு முன்பாக வவுனியா மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதுடன், நகர சபையிடம் அனுமதி பெற்ற பின்னரே போட்டிகள் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-400,433)




வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் இந்த ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் இணைந்துள்ள ஒரு தொகுதி மாணவர்கள் இங்கு காணப்படுகின்றனர். (க-18)

## உர விநியோகம்

முல்லைத்தீவு, ஜூன் 21

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தினால் தற்போது மானிய உரம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்ட சிறுபோகச் செய்கைக்கான மானிய உரமே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

கற்சிலைமடு சிறிய நீர்ப்பாசனக் குளத்தைச் சேர்ந்த கமக்கார அமைப்பினர் உரம் தேவைப்படுவோரின் பட்டியலைச் சமர்ப்பிக்காமையால் உர விநியோகத்தில் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## புதிய பிரதேச செயலர்

வவுனியா, ஜூன் 21

உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய கே.உதயராஜா வவுனியா பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதேச செயலராகக் கடமையாற்றிய அ.சிவபாலசுந்தரன் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே அவரது இடத்துக்கு புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட கே. உதயராஜா கடந்த திங்கட்கிழமை முதல் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (க-400)

## ஏற்று நீர்ப்பாசன திட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 21

முத்துஐயன்கட்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போர் காரணமாக இயங்க முடியாத நிலையில் இருந்த நீர்ப்பம்பிகள் மீண்டும் அமைக்கப்பட்டு வருவதுடன் மேட்டு நில வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் நீண்டகாலமாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்படாத காணிகளை மீண்டும் பயன்படுத்தத்தக்க சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் மேட்டு நிலச் செய்கையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' விவகாரத்தில் அழுத்தங்களுக்கு இலங்கை ஒருபோதும் அடிபணியாது

## நல்லதைச் செய்ய இந்தியா அனுமதிக்கும் என்கிறார் அமைச்சர் சிறிபால டி சில்வா



கொழும்பு,ஜூன் 21
13 ஆவது திருத்தச்சட்டத்தை திருத்தும் விடயத்தில், உள்நாட்டு,வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு இலங்கை அரசு அடிபணியாது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
கொழும்பில் புதன்கிழமை ஊடகவியலாளரிடம் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்நாட்டினதும், இலங்கைக்கு எதிரான சக்திகளினதும் அழுத்தம் காரணமாகவே, கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது.
ஆனால் இந்தியா எதற்காக அவ்வாறு வாக்களித்தது என்ற சூழ்நிலையை நாம் புரிந்து கொண்டுள்ளோம். அதேபோல நாம் இப்போது முகம்கொடுத்துள்ள நிலைமையையும் இந்தியா புரிந்து கொள்ளும்.
நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்வதற்கு இந்தியா எம்மை அனுமதிக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாணசபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படும்.
அதற்கு முன்னர், மாகாண சபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது.
இது தொடர்பான திருத்தங்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்கப்படலாம்.
இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணசபைகள் இணைவதைத் தடுக்கும் அரசமைப்புத் திருத்தம் இரண்டு வாரங்களுக்குள் சட்டமாக்கப்படும்.-என்றார்.(ச)

**"தேர்தல் திட்டமிட்டபடி செப்ரெம்பர் மாதம் நடக்கும்.**

## ஜூலை 1 முதல் 7 வரை நுளம்பு ஒழிப்பு வாரம்




கொழும்பு,ஜூன் 21
எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம்7 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான விசேட தேசிய வாரமாகப் பிரகடனப்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
வருடா வருடம் ஜூன், ஜூலை மாதங்களில் நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவது வழமை. அதனைக் கருத்தில் கொண்டே இந்த வாரத்தை டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.
சுகாதாரம், கல்வி, அரச பாதுகாப்பு, உள்ளூராட்சி, மாகாண சபைகள், சுற்றாடல், தகவல் ஊடகம், பொது நிர்வாகம் ஆகிய அமைச்சுக்களின் ஒத்துழைப்போடு தேசிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## உடல் பருமனை தவிர்க்க விஞ்ஞானபூர்வத் திட்டம்

### முதல் தடவையாக இலங்கையில்

கொழும்பு,ஜூன் 21
அதிக உடல் பருமனுக்கு உள்ளாகியுள்ளோரின் உடல் நிறையையும், தொப்பை விழுதலையும் தவிர்க்கக்கூடிய விஞ்ஞானபூர்வமான வேலைத்திட்டத்தை மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஆரம்பித்துள்ளது.
இந்த வேலைத்திட்டம் இலங்கையில் முதன் முறையாக புதன்கிழமை இடம்பெற்றது.
தொப்பை விழுதலையும், உடல் நிறை அளவுக்கதிகமாக அதிகரிப்பதையும் விஞ்ஞான பூர்வமாகக் கட்டுப்படுத்துவது குறித்து முதன் முறையாக மருத்துவ ஆய்வு நடத்தும் வேலைத்திட்டமே பொரல்ளை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
இந்த வேலைத்திட்டத்தில் தொப்பை விழுதலுக்கும், அதிக உடல் நிறைக்கும் உள்ளான சுமார் 600 பேர் இணைந்து கொண்டனர்.
இந்த வேலைத்திட்டத்தில் இணைந்துள்ளவர்களுக்கு இரத்தத்தில் சீனியின் அளவு, கொலஸ்ரோல் மட்டம் என்பன தொடர்பான பரிசோதனை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தினால் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு விளையாட்டுக் கூடங்களில் உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஆலோசனைகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் விளையாட்டுக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. (ச)



## 24 மணி நேரமும் மின்சாரத்தை துண்டிக்காத நாடு இலங்கையே

### ஜப்பானிய பிரதிநிதிகளிடம் பஸில் பெருமிதம்




கொழும்பு,ஜூன் 21
**24 மணிநேரமும் மின்சாரத்தை துண்டிக்காத ஒரேநாடு இலங்கைதான். இவ்வாறு ஜப்பான் பிரதிநிதிகளிடம் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**
ஜப்பானிய பூகோளவியல் எரிசக்தி கொள்கைகள் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் டொசிக்கோ பூசி, புதிய மின்சக்தி தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் கசுவா யூறுசாவா உட்பட பல பிரதிநிதிகள் பலர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸிலைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இந்தச் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அரச தகவல் திணைக்கள இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் முதலீட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான மின்சக்தி உற்பத்தியை சூழலுக்கு உகந்ததாகவே மேற்கொள்ள வேண்டும்.
இலங்கையின் மின்சார தேவைகளில் 90 சதவீதமானவை தற்சமயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சியவையும் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். மேலும் 24 மணி நேரமும் மின்சாரத்தை துண்டிக்காத ஒரே நாடு இலங்கை என்றும் அமைச்சர் பஸில் குறிப்பிட்டார். (ஒ-5)

## இனவாதம் தொடர்ந்தால் தனிநாடு உருவாகும்

### மௌபிம மக்கள் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 21
நாட்டில் இனவாத,மதவாதம் தொடருமாயின் இன்னமும் இரு தசாப்தங்களில் நாடு இரண்டாக பிளவுபட்டு தனி நாடு உருவாகும்.
இவ்வாறு மௌபிம மக்கள் கட்சி உபசெயலர் சமரவீர வீரவன்னிய தெரிவித்தார்.
கொழும்பு இராஜகிரியவிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தொழிற்சங்க அலுவலகத்தில் இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
நாட்டில் இனவாதம் தலை தூக்கியுள்ளது. மதவாதம் பரவியுள்ளது. இந்த நிலையில் உலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச-ரி)



துருக்கிய தூதர் ஒக்யே நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை நீதியமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

## குற்றச்செயலை தடுக்கும் நோக்கம் அரசுக்கில்லை

### ஐக்கிய தேசியக் கட்சி விசனம்

கொழும்பு,ஜூன் 21
பொலிஸ் உயரதிகாரிகள் கொலை, கொள்ளை முதலான குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள நிலையிலும், அவர்களைப் பதவிநீக்கம்செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.
ஐ.தே.கவின் கொழும்பிலுள்ள தொழிற்சங்கப் பணிமனையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
குற்ற அலை நாட்டைச் சீரழித்துவருகின்ற நிலையில், அதைத் தடுத்து நிறுத்தும் நோக்கம் அரசுக்குத் துளியளவும் இல்லை.
தொலைக்காட்சியில் இடம்பெறும் ஆடல், பாடல் போட்டிகள்போல் குற்றச்செயல்கள் நாட்டில் அதிகரித்து, போட்டி போட்டுக்கொண்டு இடம்பெறுகின்றன.



கடந்த 5 வருடங்களில் மட்டும் 15 ஆயிரம் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.
அவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், நாடு எங்கு போகின்றது எனத் தெரியவில்லை. பொலிஸ் உயரதிகாரிகள் கொலை, கொள்ளை முதலான சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளனர். -என்றார். (ச)

## ஹெரோயினுடன் மூவர் மாட்டினர்

கொழும்பு,ஜூன் 21
கல்கிஸையிலும் மஹரகமவிலும் ஒரு கிலோகிராம் ஹெரோயினை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகநபர்கள் மூவரையும் கைதுசெய்துள்ளனர்.
சுமார் 5 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினை கைப்பற்றியுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயக ஆட்சிப் பண்புகளுக்கு குழிபறிக்கும் சூழ்ச்சியின் வடிவமா?

அரசின் உத்தேச ஊடக ஒழுங்கு விதிகள், மக்களுக்கு உரிய பேச்சுச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுவதாகவே அமையும்.

இலங்கை அரசை விமர்சனம் செய்யும், மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் ஊடகங்களை அடக்கு முறைக்கு உட்படுத்தும் நோக்கிலேயே, புதிய ஊடக ஒழுக்க விதிகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

இங்கு பணிபுரியும் ஊடகவியலாளர்கள், ஏற்கனவே கடுமையான அழுத்தங்களுக்கு ஆளாகி வருகின்றனர். அரசாங்கத்தை விமர்சிக்கும் போக்கு இல்லாத ஒரு நிலையில், புதிய ஒழுங்கு விதிகள் ஊடகவியலாளர்களை அவர்களாகவே சுயதணிக்கை செய்ய வேண்டிய நிலைக்கு உந்தித் தள்ளுகிறது- -

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்திய கண்காணிப்பாளர் பிரட் அடம்ஸ்.

நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை, சட்டமன்றம் (நாடாளுமன்றம்) ஆகியவற்றின் கண்ணியத்துக்கு ஊறுவிளைவிக்கும்- எதிரான- விடயங்கள் வெளிப்படுத்தப்படக் கூடாதென்றும், அவ்வாறு செய்யின் அது அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கையாகக் கொள்ளப்படும் ஆபத்து உண்டு என்றும் பிரட் அடம்ஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதே போன்று, வெளிநாடுகளுடனான ராஜீக மற்றும் உறவுகளைப் பாதிக்கும், விடயங்களை அல்லது கருத்துக்களை வெளியிடுவதனை உத்தேச ஊடக ஒழுங்கு விதிகள் கட்டுப்படுத்தும் என்றும் அவர் தொட்டுக் காட்டி உள்ளார்.

அரசின் உத்தேச விதிமுறைகள் கருத்துச் சுதந்திரத்துக்கு ஊறு விளைவிக்க வழி செய்யும். அதன் மூலம் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனத்தை ஊறு செய்யும் ஒரு செயற்பாடாகவும் அமையும்.

அதேவேளை, இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் தனக்கெனத் தனித்துவமான மக்கள் நலன்களை நாடும் செல்நெறிகளை வகுத்து நடைமுறைப்படுத்துகின்றது.

இலங்கை பத்திரிகை ஆணைக்குழு ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக் கோவையை தயாரித்துள்ளதையும், அதனை அனைத்துலக ஊடகவியலாளர் சம்மேளனமும் அதனுடன் இணைக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் அதன் அமைப்புக்களும் ஏற்றுக் கொண்டுள்ளன என்பதும் இங்கே தொட்டுக்காட்டக் கூடிய ஒன்றாகும்.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் மட்டுமன்றி, அரசின் உத்தேச ஊடக ஒழுக்க விதிகள், நாட்டின் ஒவ்வொரு பிரசையினதும் உரிமையை மீறும் செயல் என்று உள்நாட்டிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; கண்டிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள பத்திரிகை சபைச் சட்டம் (Press Council Law) 1973 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு செயலாக்கப்பட்டு வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி விஜேயதாசா ராஜபக்ஷ மிகச் சரியாகச் சுட்டிக்காட்டி உள்ளார்.

அரசின் உத்தேச ஊடக ஒழுக்க விதிகள், உள்நாட்டு ஊடகங்களை ஒடுக்குவதற்கான ஏற்பாடு என்றும் அவர் சாடி இருக்கிறார்.

அதே போன்று, மற்றொரு எதிர்க்கட்சி உறுப்பினரான, ஜாதிக விமுக்தி பெரமுனவின் அனுரகுமார திஸநாயக்கா- -

இன்றைய அரசு, தானே உருவாக்கிய கட்டுக் கதைகளில் உயிர் வாழ்வதாகவும், அவற்றைத் தக்கவைப்பதற்காக, அதற்கு ஊடக அடக்கு முறை தேவைப்படுவதாகவும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில், உள்நாட்டு ஊடகங்களை அடக்குவதற்கான மேலதிக முயற்சி என்று இதனைக் கொள்வது தப்பன்று. லிபியாவின் கடாபியும், எகிப்தின் ஹொஸ்னி முபாரக்கும் துனிசியாவின் பென் அலியும் இத்தகைய நடவடிக்கைகளையே மேற்கொண்டனர்.

எனினும், சில ஊடகங்கள் பிரச்சினைகளை உருவாக்கி உள்ளதால் புதிய ஒழுக்கக் கோவை தேவையென்று ஊடகத் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கும், சமூகங்களுக்கும், சமயங்களுக்கும் சங்கடத்தை உண்டாக்காத வகையில் ஊடகங்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் நியாயப்படுத்தி உள்ளார்.

நாட்டில் நிலவும் ஊழல், மோசடிகளை வெளிக்கொணர்வதற்கும், மதவாதம், இனவாதம் போன்ற குறுகிய நோக்க சிந்தனைகளை எதிர்த்துப் போராடுவதற்கும், அநீதிக்கு எதிராக மக்களை விழிப்பூட்டுவதற்கும், சட்ட ஆட்சியை அமுல்படுத்தும் விடயங்களில் குறைபாடுகள் ஏற்பட்டால் அதனை விமர்சிப்பதற்கும் ஊடகங்களுக்கு உரிமையுண்டு. ஜனநாயக ஆட்சியின் நான்காவது தூணான ஊடகத்துறை மக்களின் காவலன் என்று கொள்ளப்படுகிறது.

இலங்கையில் உள்ள மிகப் பெரும்பாலான ஊடகங்கள் அப்பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றன. ஆகவே, பிரஸ்தாப ஒழுக்கக்கோவை ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையல்ல என்றும் ஊடக கலாசாரத்தை சிறப்பான முறையில் மேம்படுத்தவே அது தயாரிக்கப்படுவதாகவும் அரசு கூறுவது பொருத்தமற்றது.

நாட்டு மக்களின் தகவல் அறியும் ஜனநாயக உரிமையையும், அரசை விமர்சிக்கும் கடமையையும் தட்டிப் பறிக்க முனைவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல; அது ஜனநாயக ஆட்சிப் பண்புகளுக்குக் குழி பறிக்கும் சூழ்ச்சி, சதி என்று கொள்ளத்தக்கதே அன்றி வேறல்ல.

# திருப்பி அனுப்பப்படும் அகதிகள் நடைமுறையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் ஆஸி.

இலங்கையர்களை அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவதன் மூலம் அவர்கள் அங்கே பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம் என்பது தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு அசண்டையாகச் செயற்படுகிறது என்று கூறப்படுகிறது.

கடந்த வார இறுதியில் ஆஸ்திரேலிய அரசு, படகு மூலம் சட்ட ரீதியற்ற வகையில் குடியேறிய இலங்கையர்களின் ஒரு தொகுதியினரை மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பியுள்ளதானது, ஆஸ்திரேலியா தனது அனைத்துலக சட்டக் கடப்பாடுகளை மதிக்கத் தவறியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஓகஸ்ட் 2012 தொடக்கம் இன்று வரை ஆஸ்திரேலிய அரசானது தனது நாட்டில் அரசியற் தஞ்சம் கோரிய 200 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளடங்கலாக 1035 இலங்கையர்களை அவர்களது விருப்புக்கு எதிராக இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

இது ஆஸ்திரேலிய அரசின் பொறுப்பற்ற நடவடிக்கையாகும். இவ்வாறு இலங்கையர்களை அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவதன் மூலம் அவர்கள் அங்கே பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம் என்பது தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு அசண்டையாகச் செயற்படுகின்றது. இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்கள் இலங்கையில் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பது தொடர்பாக ஆஸ்திரேலியா போதியளவு கண்காணிப்பை மேற்கொள்வதில்லை.

இலங்கையில் பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக சட்டவாளர் சங்கம் மற்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை போன்றவற்றால் வெளியிடப்பட்ட ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவை அடையும் புகலிடக் கோரிக்கையாளர்களிடம் அந்நாட்டு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான புகலிடக் கோரிக்கையாளர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் போது அவர்களுக்கு சட்ட ஆலோசனைகள், அவர்கள்து உரிமைகள் தொடர்பான தகவல்கள் போன்றன வழங்கப்படாததுடன், வெளிப்படைத்தன்மையும் பேணப்படுவதில்லை. அத்துடன் பெரும்பாலான புகலிடக் கோரிக்கையாளர்களின் வழக்குகள் சுயாதீனமாக மீளாய்வு செய்யப்படுவதில்லை.

ஆஸ்திரேலியச் சட்டத்தின் கீழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பாக மிக நேர்மையான, நீதியான, சரியான மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்திலுள்ள தீர்மானம் எடுக்கும் அதிகாரிகள் பிழையான தீர்வை முன் வைக்கிறார்கள். கடந்த ஆண்டில், ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்தால் படகுகள் மூலம் சென்றடைந்த இலங்கையர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட பிழையான 82 சத [illegible] கள் மீளாய்வு நீதிமன்றில் மேன் முறையிடப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் புகலிடம் கோரிய இலங்கையர்கள் பலர், தமது நாட்டு அரச படைகளால் அனுபவித்த சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள், தொந்தரவுகள் மற்றும் ஏனைய துன்புறுத்தல்கள் தொடர்பாக புகலிடக் கோரிக்கையின் போது தெரிவித்த பின்னரும், மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவதால் இவர்கள் மிக ஆபத்தைச் சந்திப்பதை அதிகரித்து வரும் சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. சட்ட ரீதியற்ற வகையில் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு புகலிடம் கோரி மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவோர் சித்திரவதைகளுக்கு ஆளாவதற்கான ஆபத்து அதிகம் உள்ளது.

இந்த ஆதாரத்தைச் சுட்டிக்காட்டிய சட்ட ரீதியற்ற வகையில் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றதற்காக உள்நாட்டுச் சட்டத்தின் படி இவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இந்நிலையில், பாதிக்கப்பட்ட இலங்கையர்களை ஆஸ்திரேலியாவோ அல்லது எந்தவொரு அனைத்துலக அமைப்புக்களோ கண்காணிப்பதில்லை என்பது வெளிப்படை. இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்கள் எவ்வித ஆபத்தையும் எதிர்கொள்வதில்லை எனவும், இதுவரை அவுஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 1000 இலங்கையர்களில் நான்கு பேர் மட்டுமே சித்திரவதைகளுக்கு உட்பட்டதாக முறைப்பாடு பெறப்பட்டதாகவும் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பொப் கார் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

எதுஎவ்வாறிருப்பினும், இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தாம் சித்திரவதைகளுக்கு உள்ளாவதாக இதுவரையில் கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய உயர் ஆணையகத்தில் எவ்வித உத்தியோகபூர்வ முறைப்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்ததாக ஆஸ்திரேலிய வெளியுறவுச் செயலகம் மற்றும் வர்த்தக அதிகாரிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவை அடையும் புகலிடக் கோரிக்கையாளர்களிடம் அந்நாட்டு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.**



பிரித்தானிய நீதிமன்றானது பெப்ரவரி 2013இல், தனது நாட்டிலிருந்து புகலிடக் கோரிக்கையாளர்களை மீண்டும் இலங்கைக்கு பலவந்தமாக அனுப்பும் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

ஐக்கிய நாடுகள் சபையானது, திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்கள் ஆபத்தை எதிர்கொள்வதை ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் அங்கே சித்திரவதைகளுக்கு ஆளாவதாக சாட்சியங்கள் கூறியபோதிலும், பிரித்தானியாவானது தனது புகலிடக் கோரிக்கை கொள்கையை மீளாய்வு செய்யவில்லை என மே மாதத்தில் சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா வல்லுநர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மறுபுறத்தே, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகும் ஆபத்து காணப்படவில்லை என்பது கண்காணிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. இவ்வாறு பலவந்தமாக திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்களுக்கு 400 இலங்கை ரூபாய்கள் மட்டுமே வழங்கப்படுகின்றது. கொழும்பு விமான நிலையத்தில் இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்களை இலங்கை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்துவதுடன், கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய உயர் ஆணையகத்திடம் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதில் வெளிப்படையாக பல தடைகள் காணப்படுகின்றன. தம்மை மீள அனுப்பிய ஓர் அரசால் கட்டுப்படுத்தப்படும் ஆணையகத்திடம் குறிப்பாக இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றும் ஆணையகத்திடம் தாம் எதிர்நோக்கும் துன்புறுத்தல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதில் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் நம்பிக்கை கொள்ளாதிருக்கலாம். இதற்கும் மேலாக கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்திற்கு தாம் முறைப்பாடு செய்யச் செல்லும் போது தாம் கண்காணிக்கப்படலாம் என்ற ஓர் அச்சமும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் எழுந்திருக்கலாம்.

ஆஸ்திரேலியாவானது தன்னால் திருப்பி அனுப்பப்படுபவர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாகக்கூடாது என்பதை உறுதிப்படுத்திய பின்னரே அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பது இதன் உள்நாட்டு மற்றும் அனைத்துலக சட்டக் கட்டுப்பாடுகளாகும். ஆனால் இந்நிலையில், ஆஸ்திரேலியாவால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவோர் அங்கே சித்திரவதைகளுக்கு உள்ளாகுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், இது தொடர்பில் ஆஸ்திரேலியா தனது நடைமுறையைப் பரிசீலிக்க வேண்டிய தேவையுள்ளது.

*(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து போகும் துறைமுகம்


## அபிவிருத்தியிலும் கணக்கெடுக்கப்படுவதில்லை

வந்தியத்தேவர்

'தோணி போகும் துறை இருக்கும்' என்பர். இங்கே துறைமுகமும் படிப்படியாகப் போய்க்கொண்டு (அழிந்து கொண்டு) இருக்கின்றது. எழுவைத்தீவில் ஏற்கனவே புட்டியடி பகுதியில் இருந்த துறைமுகம் இன்று இல்லை. இப்போதுள்ள துறைமுகமும் அதிகாரிகளின் பார்வையில் இருந்து விலகிக் கொண்டிருப்பதால் இந்தத் துறைமுகமும் போய் விடும் என்ற அச்சம் மக்களிடம் காணப்படுகின்றது.

தற்போது உள்ள துறைமுகம் கட்டப்பட்டுஐம்பது ஆண்டுகள்வரையாகிறது. எனினும் பயணிகள் தங்குமடம் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டதாகும். தற்போதுள்ள பாலம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதை, படகு பாலத்தை அண்மிக்க முன்னதாகவே பார்க்க முடிகிறது. பயணிகள் இறங்கும் பகுதியின் வடபுறத்தில் பெரிய குழி காணப்படுகின்றது. சுமார் ஐந்து அடி அகலத்தில் கொங்கிறீட் தளம் உடைந்து கம்பிகள் வெளியே தெரிகின்றன. படகில் பயணிக்க வருபவர்களும் படகில் இருந்து இறங்குபவர்களும் ஒரு மரணப் பொறியைக் கடக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தற்செயலாக கால் சிறிது தடுக்கி விட்டால் அந்தப் பயணியின் கதை அத்துடன் முடிந்து விடும். பொருள்களுடன் பயணிகள் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது.

பாலத்தின் ஒரு பகுதி இவ்வாறு பெரிய குழியுடன் உள்ள நிலையில் அடுத்த பகுதியும் படிப்படியாக தகர்ந்து போகும் சாத்தியம் உள்ளதாகக் கூறப்படுகின்றது. படகுகளைப்பாலத்தில் அணைப்பது சிரமமாக இருப்பதாக படகோட்டிகள் கூறுகிறார்கள். குடா நாட்டில் வீதி புனரமைப்பின் போது பாலங்கள் சீர்செய்யப்படாததில் பல உயிர்கள் பலியான சம்பவங்கள் நிறையவே ஏற்பட்டதுண்டு யாராவது ஒருவரைக் காவு கொண்ட பின்தான் அதிகாரிகள் இதைக் கவனத்தில் கொள்ளுவார்கள் போலும் என்கிறார்கள் மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்தப் பாலத்தின் நிலை குறித்து தெரியுமோ என்பது ஒரு கேள்விக்குரிய விடயமே.



படகில் ஏறும் பயணிகள்.....

அரசாங்க படகுச் சேவையுள்ள நெடுந்தீவின் நிலைமையையே நேரில் பார்த்திராத இந்த அதிகாரிகளால் எழுவைத்தீவுப் பாலம் குறித்து எப்படி அறிந்திருக்க முடியும் என்று கூறுகின்றனர்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் இதுபற்றி எடுத்துரைக்கப்படுகிறது. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டிருக்கிறார். அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள்வரை இந்தப் பாலத்தின் நிலையை அறிந்திருந்த போதும் மாற்று நடவடிக்கை எடுக்க முன்வராததுதான் தவறு. தீவுப் பகுதி அபிவிருத்திக்கென விசேட நிதிகள் வேறு ஒதுக்கப்படுவதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்தப் பாலத்துக்கு ஒரு தொகை நிதியை ஒதுக்க முடியாமலா உள்ளது என்பதும் மக்களிடத்தில் விசனத்தைத் தோற்றுவித்தள்ளது.

இங்கு மொத்தமாக 699 பேர் வசிக்கின்றனர். இவர்களுக்காக பெருமளவு நிதியை ஒதுக்க முடியுமா என அதிகாரிகள் தயங்குவதாகவும் தெரிகின்றது. அபிவிருத்தி என்பது அறுபதாயிரம் பேருக்கு மட்டுமல்ல ஆறு பேருக்கும் கூட தேவையான ஒன்றே. பாலம் முழுவதுமே சிறு கற்கள் சிதறிக் கிடக்கின்றன. தார் போடப்பட்டு குறைந்தது முப்பது வருடங்களுக்கு மேலாக இருக்கும் போல் தெரிகின்றது. படகில் இருந்து இறங்கி ஏறும் மக்கள் பாலத்தில் நடந்து செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர்.

மக்களின் மிகவும் முக்கியமான தேவைகளுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதை விடுத்து அவசியமற்றவைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்குவதன் மூலம் பிரதேசம் அபிவிருத்தியடைகிறது என்று கூறிக்கொள்வது எந்த வகையில் நியாயமாகும்?


# இன்றுதான் தக்ஷிணாயனம் ஆரம்பம்

## - ஆடிப்பிறப்பன்று அல்ல

பூமத்திய ரேகைக்கு வடக்கே 23 1/2 பாகையில் (கடகக் கோட்டில்) உச்சம் கொடுத்த சூரியன் தெற்கு நோக்கி நகர ஆரம்பிக்கும் இன்றைய தினமே தக்ஷிணாயனம் (தக்கிணம் - தெற்கு, அயனம் - போக்கு) ஆரம்பமாகும் நாள்.

புவி அசைவில் புவி தன்னைத் தானே சுற்றுவது, (தின சலனம்), சூரியனைச் சுற்றி வருவது (வருட சலனம்) ஆகியவற்றுக்கும் மேலாக வானில் புவியினது அச்சுச் சுழற்சி என்றதொரு வானியல் சம்பவமும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. அயனசலனம் என இதைக் குறிப்பிடுவதுண்டு.

இந்தச் சுழற்சியின் பூரண சுற்றுக்குப் ஏறக்குறைய



26,000 வருடங்கள் செல்கின்றது. இந்த அச்சுச் சுழற்சிப் புவியில் பருவகாலங்களை நிர்ணயிப்பதில் பூரண ஆதிக்கம் செலுத்துகின்றது.

வசந்தவிஷு புண்ணியகாலம், தட்க்ஷிணாயன ஆரம்பம். சரத்விஷு புண்ணியகாலம், உத்தராயண ஆரம்பகாலம் என்ற இவை யாவும் ஒரு பருவகாலம் முடிந்து இன்னுமொரு பருவகாலம் ஆரம்பிக்கும் தினங்களே. இவற்றையே நாம் பாரம்பரிய சமய விழாக்களுடன் இணைத்துக் கொண்டாடுகின்றோம்.

இற்றைக்கு ஏறக்குறைய 1700 வருடங்களுக்கு முன்னர் ஆடிப்பிறப்பன்று நிகழ்ந்த, அல்லது இன்னும் 24, 000 வருடங்களுக்குப் பின்பு ஆடிப்பிறப்பன்று நிகழப் போகும் தக்ஷிணாயன ஆரம்பத்தை ஒவ்வொரு வருடமும் ஆடிப்பிறப்பன்று நிகழும் நிகழ்வாகக் கொள்வது ஏற்புடையதொன்றல்ல.

மேலும் திருக்கணித பங்சாங்கத்தில் 21.06.2013 இல் தக்ஷிணாயனம் ஆரம்பம் என்றும், வாக்கிய பஞ்சாங்கத்தில் 16.07.2013 இல் தக்ஷிணாயனம் ஆரம்பம் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அதே வேளை மேலைத்தேய துல்லிய வானியல் பஞ்சாங்கங்கள் யாவும் 21.06.2013 இல் தான் தக்ஷிணாயனம் ஆரம்பமாகின்றது என்பதை அறுதியிட்டுக் கூறுவதை வானியல் சோதிட வல்லுநர்கள் கருத்தில் கொள்வார்களாக.

பொய்யற்ற கீரன்.

# ஆனந்தம் விளையாடும் வீடு.....

கவிதாயினி

வாழ்க்கையின் பாதையில் பூக்கள் மட்டுமே பூத்திருப்பதில்லை. முட்களும் நிறைந்ததுதான் குடும்ப வாழ்க்கை. இந்தப் பயணத்தின்போது எதிர்பாராத திருப்பங்களும் ஏற்படும். எத்தகைய இடையுறுகள் வந்தாலும் எதிர்நீச்சல் போட்டு வெல்ல வேண்டும். அதுதான் வாழ்க்கை.

காலையில் எழுந்ததும் குறைந்தது 1/4 மணி நேரமாவது தியானம் செய்யுங்கள். அது, உங்கள் மனதை அமைதிப்படுத்தும். தெளிவான-உறுதியான முடிவுகள் எடுக்க உதவும். நாள்முழுவதும் மேற்கொள்ளும் செயல்களுக்கு உற்சாகத்தை தரும்.

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும். அதனால், நீங்கள் உண்ணும் உணவு ஆரோக்கியமானதாக இருக்கட்டும். அவசர கதியில் உண்பதைத் தவிருங்கள். உணவுகளுக்கு எக்காரணம் கொண்டும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். ஏனெனில் அவற்றை விரும்பி உண்ண ஆரம்பித்தால் உடல் சதை போட ஆரம்பித்துவிடும். இல்லாத நோய்களும் வந்து ஒட்டிக்கொள்ளும். எனவே உண்ணும் உணவில் அக்கறை காட்ட வேண்டும். .

ஒவ்வொரு நாளும் சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும் என்றால் உற்சாகம் ஊற்றாக பெருக்கெடுத்து வரவேண்டும். அதற்கு, நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளை ஆரோக்கியமாக - மகிழ்ச்சிகரமாக வைத்திருக்க வேண்டும். அதற்கு, வாரத்தில் ஒருநாளாவது குடும்பத்தோடு செலவிடுங்கள். கடற்கரை, பூங்காக்கள், தியேட்டர் என்று வெளியில் சென்று வருவது செலவை வைத்தாலும், அது அள்ள அள்ளக் குறையாத மகிழ்ச்சியைக் கொண்டு வரும். வருடத்திற்கு ஒருமுறையாவது குடும்பத்தோடு இன்பச் சுற்றுலா சென்று வாருங்கள். இதுவும் உங்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தும்.

குடும்ப வருமானத்துக்கு ஏற்றதாக செலவுகள் செய்யப் பழக வேண்டும்.அதனால், மாதம்தோறும் வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொள்வது சிறந்தது. அதில் சேமிப்புக்கு என்றும், மருத்துவச் செலவுக்கு என்றும் தேவைபடும்போது மாத்திரம் எடுத்து பயன்படுத்தும் வகையில் ஒரு தொகையை ஒதுக்குவது ஆனந்த வாழ்வுக்கு வித்திடும். விருந்தினர் வருகையை எதிர்பார்த்து சேமிப்பது புத்திசாலித்தனம்.

அதேபோல் உங்கள் வீட்டுப் பிரச்சினையை நீங்களே பேசித் தீர்க்க வேண்டும். அதில் மூன்றாவது



நபரைத் தலையிட அனுமதித்தால் சிக்கலாகிவிடும். எனவே உங்கள் வீட்டுப்பிரச்சினை எதுவாக இருந்தாலும் நீங்கள் மட்டுமே பேசித் தீருங்கள். குடும்பத்தில் எக்காரணம் கொண்டும் பிரிவு ஏற்படக்கூடாது.

குழந்தைகளை லட்சியத்தோடு வளர்த்து ஆளாக்க வேண்டும். பாலின வேறுபாடு காட்டக்கூடாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வித திறமை உண்டு. அதைக் கண்டறிந்து ஊக்கபடுத்தினால், நிச்சயம் உங்கள் வீட்டிலும் ஆனந்தம் விளையாடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
21/06/2013

# 5.0 Key Lime Pie இயங்குதளம் விரைவில்




கூகுள் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு குறுகிய காலத்துக்குள் பிரபல்யமானது Android இயங்குதளம். ஏனைய இயங்குதளங்களுக்குச் சவாலாக விளங்கும் Android இயங்குதளத்தின் புதிய பதிப்பான Android 5.0 Key Lime Pie இயங்குதளம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமள வில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ் இயங்குதளம், கூகுள் நிறுவனத்தின் உருவாக்கத்தில் வெளிவரவுள்ள Mototola X Phone கைபேசியில் நிறுவப்பட்டு முதன்முறையாக வெளியிடப்படவுள்ளது.

மேலும் இந்த இயங்குதளத்தினை நிறுவுவதற்கு ஏனைய சாதனங்கள் குறைந்தது 512 MB கொள்ளளவுடைய பிரதான நினைவகத்தை (RAM) கொண்டிருத்தல் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானங்களை இயக்க புதிய தொழில்நுட்பம்

## மனித வெப்பமும் சாணமும் போதும்





தற்போதைய காலச் சூழ்நிலையில் பல்வேறு புதுப்புதுக் கண்டுபிடிப்புகள் பிரமிக்க வைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் அண்மையில் வாஷிங்டனில் நடந்த புது வித விமானங்கள் வடிவமைப்பு போட்டியில் பல நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்று தங்கள் வடிவமைப்புகளை காட்சிப்படுத்திப் பிரமிக்க வைத்துள்ளனர்.

அதில், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பொறியியல் மாணவர்கள் பசுவின் சாண எரிவாயு மூலம் இயங்கும் விமானத்தை வடிவமைத்து இருந்தனர். பெற்றோலுக்குப் பதிலாக மீத்தேன் மூலம் இயங்கும் விதத்தில் தயாரித்து இருந்தனர். விமானத்தில் என்ஜினுக்கு அருகே பசுவின் சாணம் நிறைந்த கழிவு தாங்கி அமைக்கப்பட்டுள்ளது. அதில் இருந்து மீத்தேன் தயாராகி விமானத்தை இயக்கும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது.

மேலும் பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர்கள் விமாணப் பயணிகளின் உடலில் இருந்து வெளியாகும் வெப்பம் மூலம் இயங்கும் விமானத்தை வடிவமைத்திருந்தனர். அதன் அடிப்படையாக பயணிகளின் இருக்கையில் உணர்வு கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும். அவை பயணிகளின் உடலில் இருந்து வெளியாகும் வெப்பத்தை எடுத்து அதை மின்சாரமாக மாற்றி விமானத் தை இயங்கச் செய்யும். இவை தவிர போட்டியில் ரீசார்ஜபிள் பற்றரிகளின் மூலம் இயங்கும் விமானம் உட்பட 5 வகையில் வடிவமைக்கப்பட்ட விமாணங்கள் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் பசுவின் சாணம் மூலம் இயங்கும் விமாணம் போட் டியில் வெற்றி பெற்றது. இதற்கு ரூ.20 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

# தீயணைப்பு வீரர்களுக்கு உதவும் அதி நவீன ரோபோ



பொது இடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின்போது தீயணைப்பு வீரர்களுக்கு உதவக் கூடிய அதி நவீன ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது.


கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட Fire fighting Robot(FFR) எனப்படும் இந்த ரோபோ, மனிதர்களால் தாங்க முடியாத வெப்ப சக்தியை தாங்கக்கூடிய தன்மை கொண்டது.

மேலும் முப்பரிமாண காணொலிப் பதிவுகளை பதிவு செய்யக் கூடிய வகையில் 3 கமராக்களைக் கொண்டுள்ள இந்த ரோபோ, இரண்டு சில்லுகளை மட்டுமே கொண்டுள்ளதுடன் அவற்றுக்கு மத்தியில் காணப்படும் லிப்ட் மூலம் படிகளிலும் சுயமாகவே பாய்ந்து ஏறும் ஆற்றலைக் கொண்ட விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இந்த ரோபோ மனிதர்களால் தாங்க முடியாத வெப்ப சக்தியை தாங்கக்கூடிய தன்மை கொண்டது.

# Google இணைய தளத்தின் புதிய முயற்சி



கூகுள் நிறுவனம் இணையத்தளப் பயன்பாட்டை அனைத்து மக்களும் பெறும் விதத்தில் ஒரு புதிய முயற்சியில் இறங்கி உள்ளது.

ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட 30 பலூன்களில் இணையத்தள தொடர்புகளை வழங்கக்கூடிய கருவிகள் பொருத்தப்பட்டு விண்வெளியில் பறக்கவிடப்பட்டு அவற்றின் பாதை தரையிலிருந்து கட்டுப்படுத்தப்படும். இதுவரை வசதிகளில்லாத தொலைதூரப் பகுதிகளில் வசிப்பவர்கள் இதன்மூலம் இணையத்தள வசதிகளைப் பெறமுடியும். கூடிய விரைவில் மக்கள் இதனைத்தொடர்ந்து பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு இதன் தொழில்நுட்பம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பலூன்கள் அண்மையில் நியூசிலாந்து நாட்டில் உள்ள கிரைஸ்ட் சர்ச் என்ற இடத்திலிருந்து பறக்க விடப்பட்டுள்ளன. இவை ஆகாய விமானங்களை விட இரண்டு மடங்கு உயரத்தில் பறக்கக்கூடியவை.

இத்தொழினுட்பத்தின் மூலம் 3ஜி வேகத்துடன் கூடிய இணைய தளப் பயன்பாட்டை மக்கள் பெற முடியும். தானியங்கிக் கார், கூகுள் கண்ணாடி போன்றவற்றைத் தயாரித்த கூகுள் நிறுவனத்தின் பிரத்தியேகக் குழு இந்த பலூனையும் தயாரித்துள்ளது.

'பிறொஜெக்ட் லூன்' என்று பெயரிடப்பட்ட இந்தத் திட்டத்தின் இயக்குனர் மைக் காசிடி, இதனை ஒரு நிலவு வீச்சு என்று வர்ணித்தார். தாம் கூறும் திட்டம் விஞ்ஞானக் கதை போலத் தெரியலாம். ஆயினும் பெரிய பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய முடிவு இது என்று அவர் கூறினார்.

இது போன்ற பலூன்கள், பிற் காலத்தில் எங்கேனும் இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்டு தகவல் தொடர்புகள் கிடைக்க இயலாத நிலையில் ஆகாயமார்க்கமாக மீட்புப் பணிகளில் ஈடுபட உதவக்கூடும்.

# 4 மடங்கு மின்சக்தியை சேமிக்கும் பற்றரிகள்



சாதாரண லிதியம் - அயன் பற்றரிகளை விடவும் நான்கு மடங்கு மின்சக்தியைச் சேமித்து வைத்திருக்கக்கூடிய லிதியம் - சல்பர் பற்றரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

Oak Ridge National Laboratory (ORNL) ஐ சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த பற்றரிகள் மின்னேற்றம் செய்யக்கூடியவாறு காணப்படுவதுடன் மீண்டும் மீண்டும் 300 தடைவைகள் மின்னேற்றம் செய்து பயன்படுத்தக்கூடியவாறும் அமைக்கப்பட்டுள்ளன.

60KC டிகிரி வெப்பநிலை வரை தாங்கக்கூடிய இவற்றில் லிதியம் - சல்பர் என்பன கரைசல் நிலையில் காணப்படுவதுடன் அவை தீப்பற்றும் ஆற்றல் அதிகம் கொண்டுள்ளதனால் அவதானமாக பாவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரங்களை உளவு பார்க்கும் நடவடிக்கை

## திருமலை நகரசபை - அமெ. ஒப்பந்தம்

திருகோணமலை, ஜூன் 21
இலங்கை விவகாரங்களை உளவு பார்ப்பதற்காகவே கூட்டமைப்பின் வசமுள்ள திருகோணமலை நகரசபையுடன் அமெரிக்கா ஒப்பந்தம் மேற்கொண்டு அமெரிக்க நிலையமொன்றை அமைத்துள்ளது. அது திருகோணமலை துறைமுகத்துக்கும் ஆபத்தான விடயமாகும். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல்வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் மாகாண சபை



உறுப்பினர் ஜெய விஜயசிங்க தலைமையில் நடைபெற்ற 'இன்றைய அரசியல் நிலை' குறித்து விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாதவிதத்தில் அமெரிக்க தூதரகம் திருகோணமலை நகரசபையுடன் சேர்ந்து ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. தமது நிலையத்தையும் திருமலை நூலகத்தில் அமைத்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கையில் நகரசபை இருக்கின்ற காரணத்தினாலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அது புகழ் பெற்ற துறைமுகத்தைக் கொண்ட திருகோணமலைக்கும் ஆபத்தான விடயம்.

இலங்கை விவகாரங்களை இங்கிருந்து உளவு பார்ப்பதற்கே இந்த அமெரிக்க நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.- என்றார். (ப)

## 30 ஆயிரம் பனம் விதைகள் நடுகை திட்டம் மட்டக்களப்பில்



மட்டக்களப்பு,ஜூன் 21
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் 30ஆயிரம் பனம் விதைகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று இலங்கை பனை அபிவிருத்தி சபையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கே.விஜயன் தெரிவித்தார்.
இந்தத் திட்டம் பனை அபிவிருத்தி சபை தலைவரின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பனம் விதைகள் நடப்படவுள்ளன.
கடந்த ஆண்டும் இவ்வாறு பனம் விதைகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 17 ஆண்டுகளுக்குப் பின் அம்மனுக்கு கும்பாபிஷேகம்



கடந்த 17ஆண்டுகளாக பாழடைந்து கிடந்த கல்முனை, சேனைக்குடியிருப்பு கங்காமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் புதன்கிழமை நடைபெற்றது.

## வீதியில் நடந்து சென்றவரின் உயிரை காவு கொண்டது பஸ்

### திருமலையில் சம்பவம்

திருகோணமலை,ஜூன் 21
திருகோணமலை, சீனக்குடா மீன்பிடி துறைமுகத்துக்கு முன்னால் வீதியில் நடந்து சென்ற நபரொருவர் மீது பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் புதன்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெற்றது.
திருகோணமலையில் இருந்து கிண்ணியா ஊடாக கொழும்புக்கு சேவையில் ஈடுபட்ட பஸ்ஸே அவரை மோதியுள்ளது.
இந்த விபத்தில் சீனக்குடா, மீனவர் கிராமத்தில் வசிக்கும் கே.சாந்தகுமார என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தையடுத்து, பஸ் சாரதியும் நடத்துனரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்கள் கைது செய்யப்படும்போது மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அற்ப, சொற்ப சலுகைகளுக்காக பிழையான வழியில் செல்ல மாட்டோம்

### யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



சின்னப்புல்லுமலை பிள்ளையார் ஆலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மக்கள் சந்திப்பில் ஈடுபட்ட போது

எருவில்,ஜூன் 21
அன்றில் இருந்து இன்று வரைக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து யாரை யாவது பிரித்தெடுக்கலாம் என்று அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. தற்போதும் அதனையே மேற்கொண்டும் வருகிறது. அவர்களது அற்ப சொற்ப சலுகைகளுக்காக எங்கள் மக்களை விட்டு பிழையான வழியில் எந்தக் காலத்திலும் நாம் செல்லப் போவதில்லை.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.
சின்னப்புல்லுமலை பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆளும் தரப்பில் இல்லை. மாறாக எதிர்க்கட்சியிலே இருக்கின்றது. அதன்காரணத்தால் எங்களது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தும் புலம்பெயர் மக்களின் உதவிகளின் மூலமும்தான் எமது மக்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்றோம்.
மக்களின் பிரச்சினைகள் பற்றி சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறும் அளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றதென்றால் தமிழ் மக்களின் பலமே அதற்குக் காரணமாகும். -என்றார். (ச-31)

## கிழக்கில் கடும் உஷ்ணம்; நெற்செய்கை பாதிப்பு

திருகோணமலை,ஜூன் 21
கிழக்கில் நிலவும் கடும் உஷ்ணநிலை காரணமாக பயிரிடப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் 'மயிட்சின்' நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது என்று விவசாய போதனாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.
நெற்பயிரைத் தாக்கும் இந்த நோய்த் தாக்கம் பற்றிய விளக்கங்களை விவசாயிகளுக்கு வழங்குவதில் விவசாய திணைக்களங்க்ள் ஈடுபட்டுள்ளன.
நெற்பயிரைத் தாக்கும் மயிட்சின் பூச்சிகளின் தாக்கம் அதிகளவில் திருகோணமலை, அம்பாறை பகுதிகளின் காணப்படுகின்றன.
அதனால் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி உள்ளனர். (ச-40)

## பஸில் செல்கிறார் மட்டக்களப்புக்கு



கொழும்பு,ஜூன் 21
பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ நாளை சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு செல்லவுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதி நவீன [illegible] உள்ளக ஹோட்டலை திறந்து வைப்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார். இந்நிகழ்வில் அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர். (ச)

## வாகரையில் நூலகம் அமைப்பதற்கு ஏற்பாடு

### ஆய்வில் ஈடுபட்டது களனி பல்கலை



வாகரையில் நூலகம் அமைப்பது குறித்து ஆராய்கின்றனர் களனி பல்கலைக்கழக மாணவர்கள்.

மட்டக்களப்பு,ஜூன் 21
மட்டக்களப்பு,வாகரை பிரதேசத்தில் சகல வசதிகளுடனும் கூடிய பெரிய நூலகமொன்றை நிறுவுவது குறித்த ஆய்வொன்றில் களனி பல்கலைக்கழக நூலக மற்றும் விஞ்ஞானக் கற்கை மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஈடுபட்டனர்.
வாகரையில் சகல விதமான ஆய்வுகளுக்கும் கற்கைகளுக்குமான நூலகமொன்றை ஆரம்பிக்கும் முயற்சியை தேசிய நூலகத்தின் முன்னாள் பணிப்பாளரும் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான வீரசிங்ஹ முன்வைத்திருந்தார்.
இந்த முயற்சியின் தொடர்ச்சியாக தற்போது களனி பல்கலைக்கழக நூலக மற்றும் விஞ்ஞானக் கற்கை மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர் என்று களனி பல்கலைக் கழகத்தின் நூலக மற்றும் விஞ்ஞானக் கற்கைகள் பிரிவின் பீடாதிபதி டிகிரி ஹேரத் குணதிலக்க தெரிவித்தார்.
இந்த ஆய்வின்போது வாகரை பிரதேசத்திலுள்ள மீனவர்கள், விவசாய சமூக மக்கள், துறை சார்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டன.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் கௌரவிப்பு

வடமராட்சி,ஜூன் 21

கடந்த வருடம் நடை பெற்ற ஜி.சீ. ஈ.சாதாரண தரம், ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றிய உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் வசிக்கும் மாணவர்களில் சிறப்புச் சித்தி களைப் பெற்று சாதனை படைத்த 27 மாணவர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

சங்கத் தலைவர் கே.நாகலிங்கம் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் யாழ். பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந் தவநாதன் சங்கத்தின் சார்பில் சாதனை மாணவர்களைக் கௌரவித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 23 மாணவர்களும், ஜி.சீ.ஈ. சாதாரணதரம், உயர்தர பரீட்சைகளில் சிறப்புச் சித்திபெற்ற தலா இரு மாணவர்களுமே கௌரவிக்கப்பட்டனர். (வ-8)

### எரி காயங்களுடன் யுவதிகள் இருவர் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

எரிகாயங்களுக்குள்ளான இரண்டு பெண்களே சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ.குருநகரைச் சேர்ந்த இரண்டு பெண்களே எரிகாயங்களுக் குள்ளாகினர். குடும்பத் தகராறு காரணமாகவே இது இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ஆர்.மரியறோசி (வய-36), மேரி மீனுகா (வயது-22) ஆகியோரே எரி காயங்களுக் குள்ளாகினர். (வ-4)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவு தின நிகழ்வு நேற்று

வலி.வடக்கு, ஜூன் 21

கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஐந்தாவது ஆண்டு நினைவு தின குரு பூசை நேற்று காலை 9 மணியளவில் துர்க்கையம்மன் ஆலயத்தில் விசேட 'பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகின.'

பூசை வழிபாடுகள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடுகள், நினைவுச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து திரு முறைப் பாராயணத்தை அந்தணர்கள் ஓதினார்கள்.

அன்னையின் திருவுருவச் சிலைக்கு ஆலய பிரதம குரு எஸ்.அகிலேஸ்வரக் குருக்கள் மற்றும் பெறாமகன் சுதன், இல்ல மாணவி ஆகியோர் மலர் மாலை அணிவித்ததைத் தொடர்ந்து



திருமறை மண்டபத்தில் வழிபாடுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து நிகழ்வுகள் தேவஸ்தானத் தலைவர் ஆறு.திரு முருகன் தலைமையில் அன்ன பூரணி மண்டபத்தில் இடம்பெற்றன.

துர்க்கையம்மன் இல்ல மாணவிகளின் தேவாரத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில் பண்ணிசையை மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி சந்திரிகா கணேஸ்வரன் நிகழ்த்தினார். எட்டாம் திருமுறையான திருவாசகம், திருக்கோவையார் நூல் வெளியீடும் இடம்பெற்றது. (வ-86)

## பழைய மாணவர் சங்கக் கிளை பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வவுனியாக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வவுனியா பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஏ.ரி.சல சலோசன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற செயற்றிட்ட அறிக்கை பார்வை மற்றும் புதிய நிர்வாகிகள் தெரிவு இந்த ஆண்டுக்கான புதிய திட்டம் மற்றும் மாணவர்களுக்கான உதவி வழங்கல், முன் செயற்றிட்ட விளக்க விடயமும் ஆராயப்படவுள்ளதால் வன்னி மாவட்டத்தில் உள்ள ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-402)

### அபிவிருத்தி வங்கியின் ஆண்டு நிறைவு விழா

யாழ்.மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை இணைத் துக் கொண்ட பிரதேச அபிவி ருத்தி வங்கியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும்25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் இடம்பெறவுள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கி யின் பொது முகாமையாளர் தச னரத்ன பண்டார மற்றும் மாவட்ட முகாமையாளர் எஸ்.கீர்த்தி சீலன் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஒ-14)

## மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையம் பூநகரியில் விரைவில் ஆரம்பம்

பூநகரி,ஜூன் 21

பூநகரி பிரதேசத்தில் விரைவில் மெழுகுவர்த்தி சுய தொழில் உற்பத்தி நிலைய மொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கிளி நொச்சி மாவட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுயதொழில் உற்பத்தி செய்யக்கூடிய அன்புபுரம், கரடிக் குன்று, நாவாந்துறை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கான வழிகாட்டல் செயலமர்வு அண்மையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.சசிகரனால் நடத்தப்பட்டது.

சுயதொழில் உற்பத்தித் திட்டத்தை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் திறம்பட மேற்கொள்ள பூந கரி பிரதேச செயலர் கே. எஸ்.வசந்தகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**இடபர்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனர்:** நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

**கடகர்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**சிங்கர்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். உத்தி யோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைக்களை நிறைவேற்றுவீர்கள்.

**நாளை**

ஆனி-08 சனிக்கிழமை 22.06.2013
திதி: சதுர்த்தசி மு.இ. 08.05 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ. 04.16 வரை
சுபநேரம்: 02.54 - 04.24 வரை
இராகுகாலம்: 08.54 - 10.24 வரை

**துலாபர்:** ஓய்வின்றி உழைக்க வேண்டி வரும். மன இறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப் படுவீர்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**விருச்சிகர்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**தனுசு:** வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மகரர்:** எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பர்:** வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மீனர்:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப்பாருங்கள். தர்மசங்கடமான [illegible] சிக்கித் தவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | | 6 | | 5 | 4 | 9 | |
| | 8 | 1 | | | | | | 2 |
| | | 5 | 7 | | 1 | 6 | | |
| 8 | | | 4 | 9 | 7 | | | |
| | | 9 | | | | 2 | | |
| | | | 2 | 5 | 6 | | | 4 |
| | | 4 | 3 | | 9 | 8 | | |
| 3 | | | | | | 1 | 4 | |
| | 5 | 6 | 1 | | 8 | | 2 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 1 | 8 | 4 | 3 | 2 | 6 | 5 |
| 2 | 8 | 5 | 6 | 9 | 7 | 1 | 4 | 3 |
| 3 | 4 | 6 | 1 | 2 | 5 | 9 | 7 | 8 |
| 8 | 3 | 4 | 5 | 7 | 9 | 6 | 2 | 1 |
| 6 | 5 | 7 | 2 | 1 | 4 | 3 | 8 | 9 |
| 1 | 2 | 9 | 3 | 8 | 6 | 4 | 5 | 7 |
| 4 | 1 | 2 | 7 | 3 | 8 | 5 | 9 | 6 |
| 5 | 7 | 3 | 9 | 6 | 2 | 8 | 1 | 4 |
| 9 | 6 | 8 | 4 | 5 | 1 | 7 | 3 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு உணவுப் பொதி



யாழ்ப்பாணம்,ஜூன் 21

வேலணை பிரதேச செயலகப் பிரிவில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான போஷாக்கு உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை வேலணை பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 70 பயனாளிகளுக்கு சத்துணவுப் பொதிகளைப் பிரதேச செயலர் வழங்கினார். ஒவ்வொருவருக்கும் புழுங்கல் அரிசி, பருப்பு, கடலை, முட்டை போன்ற தலா 500 ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஜனவரி முதல் மே மாதம் வரையான பொதிகள் வழங்கப்பட்டன. 20 மாதங்களுக்கு இவ்வாறு போஷாக்கு உணவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஒவ்வொரு மாதமும் இவை வழங்கப்படும் எனவும் சமுர்த்தி முகாமையாளர் செல்வி நகுலராணி தெரிவித்தார்.

வேலணை சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பல.நோ.கூ. சங்கத் தலைவர் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (வ-7)

# அதிகரித்துவரும் பிறப்பு வீதம் நிறை குறைந்த குழந்தைகளின்

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஜூன் 21

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த ஐந்து மாதங்களில் பிறந்த குழந்தைகளில் 13சதவீதமானவை நிறை குறைந்த நிலையில் பிறந்துள்ளதாக வைத்தியசாலை செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பிறந்த குழந்தைகள் ஒவ்வொன்றினதும் நிறை 5 1/2 இறாத் தலுக்குக் குறைவாக உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

கர்ப்ப காலத்தில் தாய் போதிய உணவு அருந்தாததே இதற்கும் காரணம் என கூறப்பட்டது. கர்ப்பிணிகளுக்குச் சுகாதாரத் திணைக்களத்தால் போசாக்கு மா மற்றும் சத்துள்ள மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. இவை கர்ப்பிணித் தாய்க்குக் கிடைக்கும் ஒரு பகுதி உணவே தவிர முழுமையான உணவு அல்ல.

கர்ப்பிணிகளின் உணவு தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை. கர்ப்ப காலத்தில் என்னென்ன உணவுகள் வழங்க வேண்டும் என்ற போதிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இல்லாமை, பொருத்தமற்ற காரணங்களைக் கூறி பல உணவு வகைகளை உட்கொள்ள விடாமல் தடுப்பது, குடும்பங்களில் ஏற்படும் பொருளாதாரச் சிரமம் போன்ற காரணங்களால் இவ்வாறான நிறை குறைவான குழந்தைகள் பிறக்கின்றன. பெண்ணின் உடல் முதிர்ச்சியடைய முன்னர் நடைபெறும் இளவயதுத் திருமணங்களும் இவ்வாறான நிலையை உருவாக்கும்.

கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்குத் தன்மையை அதிகரிக்க வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு விசேட திட்டத்தினை உருவாக்கி அரச, அரச சார் பற்ற நிறுவனங்கள், பொது நோக்கு அமைப்புகள் சத்து ணவுகளை வழங்குவதனாலும் நிறை குறை வான குழந்தைகள் பிறப்பதைத் தவிர்க்க முடியும் என்றும்– தெரிவிக்கப் பட்டது. (வ-9)

# ஜூன் 25 இல் நியமனம் அதிபர் சேவை வகுப்பு I இற்கு

அச்சுவேலி,ஜூன் 21

இலங்கை அதிபர் சேவைத் தரம் 2 வகுப்பு I இல் நியமனம் பெற்று 2008 ஜூலை முதலாம் திகதியில் கடமையில் இருந்தோருக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இற்கு பதவி உயர்வு நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி கல்வி அமைச்சால் கையளிக்கப்படவுள்ளன. இந்த வகையில் 395 பேர் பதவி உயர்வு பெறுகின்றனர்.

இலங்கை அதிபர் சேவைத் தரம் 2 வகுப்பு I இற்கு 1996, 1997, 1998, 1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நியமனம் பெற்றவர்களுக்கு சேவை மூப்பு, திறமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சால் கையளிக்கப்படவுள்ளன. சம்பந்தப்பட்டவர்களுக்கு கல்வி அமைச்சு தனித்தனியாக அழைப்புக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

1996 ஆம் ஆண்டிலிருந்து 1999 வரையான காலப் பகுதியில் தரம் 2 வகுப்பு I இல் நியமனம் பெற்றவர்கள் 2008.07.01 ஆம்திகதிகடமையில்இருந்திருக்க வேண்டும். பதவி உயர்வு பெற உள்ளோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சையில் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.

நாடளாவிய ரீதியாக பதவி உயர்வுக்கு தெரிவு செய்யப்பட்ட 395 பேருக்கு கல்வி அமைச்சு நியமனம் வழங்குகின்றது. மாகாணக் கல்வி அமைச்சுக் கள் அவர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை வழங்கவுள்ளன. (வ-11)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# பொலிஸ் அதிகாரம் வழுங்கவே மாட்டோம்

கூறியுள்ளோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தைத் திருத்தும் ஜனாதிபதியின் முடிவு தமக்கு கவலையளிப்பதாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூரியுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது சிறுபான்மையினரின் நலன்களுக்குத் தீங்கை ஏற்படுத்தும்.புதுடில்லியில் முன்னர் நடத்திய கலந்துரையாடல் ஒன்றின் போது, மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், பாதுகாப்புச் செயலராக இருந்த விஜய சிங்கிடம் கேட்டார்.இந்தியப் பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுடன் இணங்கினார்.

இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்ட தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார்.

அவர் அவ்வாறு கூறியதன் அர்த்தம், எல்லா சமூகங்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க நல்லதொரு தீர்வைத் தான். இதைவிட வேறேதும் இல்லை.

ஆனால், ஜனாதிபதியின் வாக்குறுதியைத் தவறாகப் புரிந்து கொண்டு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக, ஜனாதிபதி வாக்குறுதி அளித்ததாகப் பரப்புரை செய்வது முட்டாள்தனமானது.அது ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மீது திணிக்கப்பட்டது-என்று கூறியுள்ளார் கோத்தபாய ராஜபக்ஷ.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதாக அளித்த வாக்குறுதியில் இருந்து இலங்கை பின்வாங்கி விட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கைக்குப் பின்னால் இருப்பதாக வாக்குறுதி அளித்த இந்தியா, ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை, ஆதரித்து வாக்களித்தது.

ஜெனிவாவில் இந்தியா எம்மைக் கைவிட்டது மிகவும் மோசமானது என்று கூறியுள்ளார். (த)

# இலங்கை - இந்திய ஆட்டத்தில் புலிக்கொடி

துள்ளனர். இலங்கையைப் புறக்கணிப்போம், இலங்கை கிரிக்கெட்டைப் புறக்கணிப்போம் என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட போராட்டத்தைப் பிரிட்டனில் இயங்கும் சில புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் மைதானத்துக்கு வெளியே ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசால் அநியாயங்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் கூறுவதற்காகவே இந்த அமைதிப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.இலங்கை அரசைப் போர்க்குற்றவாளிகள் என்று கூறும் கோஷங்களையும் அவர்கள் எழுப்பினார்கள்.

இலங்கையில் இந்த வருட இறுதியில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டைச் சர்வதேச நாடுகள் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் போராட்டக் காரர்கள் வலியுறுத்தினார்கள்.

இதற்கிடையே ஆட்டம் நடந்த மைதானத்திலும் இரு தடவைகள் இளைஞர்கள் புலிக்கொடியை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பிக்கொண்டு மைதானத்துக்குள் ஓடினார்கள்.

இலங்கையில் பொதுநலவாயப் பிரஜைகள் 40,000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று எழுதப்பட்ட பதாதைகளையும் அவர்கள் தம் வசம் வைத்திருந்தார்கள்.

இலங்கை அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது ஒரு தடவையும் இந்திய அணியின் துடுப்பாட்டத்தின் போதும் இது நடந்தது.

அவர்களை பாதுகாப்பு அதிகாரிகள் பிடித்து, அங்கிருந்து அகற்றினார்கள்.இப்படியாக மைதானத்தில் நுழைந்து போராட்டம் நடத்தியவர்கள் 8 பேரைத் தாம் கைது செய்துள்ளதாக வேல்ஸ் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த)

# வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

சீலன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் வைத்து நியமனம் வழங்கப்படவுள்ளது.

வவுனியா வடக்கு, துணுக்காய், முல்லைத்தீவு, மடு கல்வி வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் வைத்து நியமனம் வழங்கப்படவுள்ளது. (த-5)

# ஆஸி. தமிழ் அகதிகளை அழைக்கிறது இலங்கை

தகுதியற்ற படகுகளின் மூலம் இலங்கையர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளில் ஆட்கடத்தல்காரர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜீ.எஸ்.பீரிஸ், அந்த நாட்டின் குடிவரவு விவகாரங்களுக்கான அமைச்சர் பிரெண்டன் ஓ கோர்னர், பாதுகாப்பு அமைச்சர் ஸ்மித் ஆகியோர் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (த)

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி துரைராசா

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய், சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி துரைராசா நேற்று(20.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2013) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு, மானிப்பாய். தகவல்: பிள்ளைகள்

# பிரபாகரன் போன்றவர் மன்னார் ஆயர்

ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

13ஆவது திருத்தம் கூட்டத்திலிருந்து காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கிய பின்னர் நடத்தப்படும் வடக்குத் தேர்தலில், வடக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என மன்னார் ஆயர் வண. இராப்பு ஜோசப் கூறியுள்ளார். இது தொடர்பில் [illegible] ஊடகவிலாளர் [illegible] எழுப்பிய [illegible] பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மக்களின் அரசியல், ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் வகையில் அன்று பிரபாகரன் செயற்பட்டார். வடக்கு மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அவர் வழங்கவில்லை. அன்று பிரபாகரன் செயற்பட்டதைப் போன்றுதான், இன்று மன்னார் ஆயர் வண.இராயப்பு ஜோசப் செயற்படுகிறார். அவர் இப்படிச் செய்தால் பிரபாகரனுக்கும் அவருக்கும் வித்தியாசமில்லை. அவரின் செயல் எமக்குக் கவலையளிக்கிறது - என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்


யாழ்ப்பாணம், ஜூன் 21
மற்றிஸ் கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை, யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ள அணிகளில் விவரம்:
பி.ப. 4 மணி
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள்:
பி.ப. 3.30 மணி
பொம்மர்ஸ் வி.க. எதிர் கொலின்ஸ் வி.க.
பி.ப. 4.30 மணி
ஸ்ரீவிக்னேஸ்வரா வி.க. எதிர் சென்.மைக்கல் வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 21
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையான பிரிவு III க்கான முதலாவது சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
அதில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து ஸ்ரான்லி கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-23)



## சென்.ஜோன்ஸ் கல்லூரி வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 21
மற்றிஸ் கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 19 வயதுப் பிரினருக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் சென்.ஜோன்ஸ் அணி வெற்றி பெற்றது.
யாழ்.இந்துக்கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் மோதிக்கொண்டன.
விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 41:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ற-23)




வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வடமாகாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நான்காவது தடவையாகவும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-86)

### பெரு விளையாட்டு வலயங்கள் பெற்ற புள்ளிகள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே இது வரையில் நடைபெற்ற பெரு விளையாட்டுக்களில் வலயங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரங்கள் வருமாறு;
யாழ்ப்பாணம் 421 புள்ளி வலிகாமம் 250 புள்ளி வடமராட்சி 212 புள்ளி கிளிநொச்சி 114 புள்ளி முல்லைத்தீவு 99புள்ளி வவுனியா வடக்கு 68புள்ளி மன்னார் 65 புள்ளி தென்மராட்சி 63 புள்ளி வவுனியா தெற்கு 53 புள்ளி தீவகம் 27 துணுக்காய்14
(23-400-433-422)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21
வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.
அதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் வல்வை விளையாட்டுக் கழக அணி 2:1 கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையான உதைபந்தாட்டம்

# சென்.சேவியர் ஆடவர், சென்.ஜோசப் மகளிர் சம்பியன்


யாழ்ப்பாணம், ஜூன் 21
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் மாகாண மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் 15, 17 வயது ஆடவர் பிரிவுகளில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரியும், 19 வயது மகளிர் பிரிவில் மாதகல் சென்.ஜோசப் கல்லூரியும் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகின.
நேற்று வியாழக்கிழமை புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற 19 வயது மகளிர் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் மாதகல் சென்.ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி மோதியது.
அதில் மாதகல் சென்.ஜோசப் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச்சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலை அணியை எதிர்த்து கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணி மோதியது.
ஆட்டநேரம் முடியும்வரை இரு அணிகளும் கோல் எதனையும்பெறாதநிலையில், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்ற 15 வயது ஆடவர் பிரிவுக்கான இறுதியாட்டத்தில், மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை சக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அணி மோதியது.
அதில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில், மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென்.லூட்சியஸ் கல்லூரி அணி மோதியது.
அதில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற 17 வயது ஆடவர் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணி மோதியது.
அதில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அதேபிரிவில், மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இளவாளை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.
ஆட்டநேரம் முடியும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23-422-433)




சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி 15 வயது பிரிவு




மாதகல் சென்.ஜோசப் கல்லூரி




சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி 17 வயது பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசாத்தும் பரிசுப் பொருள் பெற்றாராம்



பாகிஸ்தானை சேர்ந்த சர்வ தேச நடுவர் அசாத் ரவூப்பிக்கும் ஐ.பி.எல் சூதாட்டத்தில் தொடர்பு இருந்தமை தற்போது தெரியவந்ததுள்ளது. சூதாட்ட தரகர்களிடம் இருந்து அவர் விலை உயர்ந்த பரிசு பொருட்களை பெற்றுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

சூதாட்ட தரகரான இந்தி நடிகர் விண்டூ தாராசிங் மூலம் பாகிஸ்தான் நடுவர் அசாத் ரவூப்புக்கு பரிசு பொருள்களை அனுப்பி இருந்தமை தொலைபேசி உரையாடல் பதிவு மூலம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பவன் ஜெய்ப்பூர் என்ற சூதாட்ட தரகர் விண்டூ மூலம் நடுவர் அசாத் ரவூப்புக்கு ரூ.18 லட்சம் மதிப்புள்ள கடிகாரம் ஒன்றும், தங்க சங்கிலி ஒன்றும் கொடுத்து உள்ளனர்.

இந்த சூதாட்ட தரகரும், விண்டூவும் பேசிய தொலைபேசி உரையாடலின்பதிவை மும்பை பொலிஸார் தற்போது வெளியிட்டுள்ளனர். (ற)

# விம்பிள்டனில் இருந்து விலகினார் வீனஸ்


விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இருந்து அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் காயம் காரணமாக விலகியுள்ளார்.

லண்டனில் எதிர்வரும் ஜூன் 24ஆம்த திகதி முதல் ஜூலை 7ஆம் திகதி வரை விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இருந்து முதுகுப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் விலகியுள்ளார்.

இத்தொடரில் ஐந்து முறை (2000, 01, 05, 07, 08) சம்பியன் பட்டம் வென்ற இவர், இதுவரை 7 கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். இதன்மூலம் இரட்டையர் பிரிவில் இருந்து செரினா - வீனஸ் வில்லியம்ஸ் இணையும் விலகியது.

இதுகுறித்து வீனஸ் கூறுகையில்,

''துரதிருஷ்டவசமாக விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் விளையாட முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இந்த முடிவு எனது போட்டியை காண ஆவலுடன் காத்திருந்த ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்திருக்கும். காயத்தில் இருந்து மீண்டு, விரைவில் ஆட்டங்களுக்கு திரும்புவேன்,'' என்று தெரிவித்தார். (ற)



## பெக்கமைப் பார்ப்பதற்காக கூடிய பெருந்தொகையினர்

### நெரிசலில் 7 பேர் காயம்

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரரான டேவிட் பெக்கமைச் காணத் திரண்டிருந்த இரசிகர்களுக்கிடையே ஏற்பட்ட நெரிசலில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் முக்கியமான விளையாட்டுகளுன் ஒன்றாகக் கருதப்படும் 'சைனீஸ் சூப்பர் லீக்' உதைபந்தாட்டத் தொடரின் விளம்பரப் பயணமாக பெக்காம் ஏழு நாள்கள் சீனா வந்துள்ளார்.

அங்கு நடைபெற உள்ள உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு அவரின் பிரபலத்தை முன்னிறுத்தி, தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஷாங்காய் பல்கலைக்கழகத்தின் கால்பந்து அணியினரைச் சந்திப்பதற்காக அவர் நேற்று ஷாங்காய் டோங்க்ஜி பல்கலைக் கழக வளாகத்தினுள் உள்ள மைதானத்திற்கு வந்தார்.

அந்த சமயம், அங்கு திரளாகக் கூடியிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட அவரது ரசிகர்கள், பொலிஸார் மற்றும் கல்லூரி பாதுகாவலர்களின் தடுப்பு வளையங்களை மீறிக்கொண்டு உள்ளே ஓடிவந்தனர்.

அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி மூன்று பொலிஸார், இரண்டு கல்லூரி பாதுகாவலர்கள் மற்றும் ஒரு ஜப்பானிய மாணவி உட்பட இரண்டு மாணவர்கள் காயமடைந்தனர்.

அதையடுத்து நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமாவதற்கு வாழ்த்துக்களையும், நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதற்கு தனது வருத்தத்தையும் பெக்கம் தனது இணையதளச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மிகப்பெரிய கூட்டத்தினுள் நுழைந்து வருவதென்பது இயலாத காரியமாக இருந்தது என்றும் அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இங்கிலாந்து நாட்டின் புகழ் பெற்ற கால்பந்து வீரரான டேவிட் பெக்காம் சமீபத்தில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். (ற)

## அடுத்த சுற்றில் சாய்னா

சிங்கப்பூர் சூப்பர் சீரிஸ் பூப்பந்தாட்ட போட்டி சிங்கப் பூரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் உலகின் 2ஆம் நிலை வீராங்கனை சாய்னா நேவால் (இந்தியா), 21ஆம் நிலை வீராங்கனை ஜுயான் குவை (சிங்கப்பூர்) சந்தித்தார்.

40 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் சாய்னா 21:14, 23:21 என்ற நேர் செற்றில் ஜுயான் குவை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். தாய்லாந்து ஓபன் கால் இறுதியில் ஜுயான் குவையிடம் கண்ட தோல்விக்கு சாய்னா பழிதீர்த்துக் கொண்டார்

மற்ற இந்திய வீராங்கனைகள் துளசி, அருந்ததி ஆகியோர் முதல் சுற்றில் தோல்வி கண்டு வெளியேறினார்கள்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில், உலக தர வரிசையில் 61ஆவது இடத்தில் இருக்கும் இந்திய வீரர் சாய் பிரணீத், 4ஆம் நிலை வீரரான யுன் ஹூவை (ஹாங் காங்) எதிர்கொண்டார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சாய் பிரணீத் 21:9, 21:10 என்ற நேர் செற்றில் யுன் ஹூவை சாய்த்து அதிர்ச்சி அளித்தார்.

மற்ற இந்திய வீரர்கள் சவுரவ் வர்மா, அஜய் ஜெயராம், ஆனந்த் பவார், தாய்லாந்து ஓபன் பட்டம் வென்ற ஸ்ரீகாந்த் ஆகியோர் முதல் சுற்றில் தோல்வியை தழுவினர். (ற)

## இந்தியா தொடர்ந்தும் முதலிடம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்ட தர வரிசைப் பட்டியலில் இந்திய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தியா 119 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் இருந்தது. தற்போது 2 புள்ளிகள் அதிகரித்து 121 புள்ளிகளை பெற்றுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ண லீக் ஆட்டங்களில் தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான் ஆகிய அணிகளை தோற்கடித்து இருந்ததால் இந்திய அணியின் முதலிடத்தை அசைக்க முடியவில்லை.

இங்கிலாந்து அணி 2 இடங்கள் முன்னேறி 2ஆவது இடத்தை பிடித்துள்ளது. ஆஸ்திரேலியா 3ஆவது இடத்தில் உள்ளது. இரு அணிகளும் 113 புள்ளிகள் பெற்று உள்ளன. தென்னாபிரிக்கா 112 புள்ளிகள் பெற்று 4ஆவது இடத்துக்கு பின்தங்கி உள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் 5 முதல் 8வது இடங்களில் உள்ளன.

பந்துவீச்சு தரவரிசையில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா 3 இடங்கள் முன்னேறி 4ஆவது இடத்தை பிடித்துள்ளார். அதேபோல் சகல துறை வீரர்கள் வரிசையிலும் அவர் அதே இடத்தில் உள்ளார். அஸ்வின் 15ஆவது இடத்துக்கு பின் தங்கினார்.

துடுப்பாட்ட வரிசையில் தென்னாபிரிக்காவின் டீ வில்லியர்ஸ், ஹாசிம் அம்லா ஆகியோர் முதல் இரண்டு இடங்களில் உள்ளனர். வீராட் கோஹ்லி 3ஆவது இடத்திலும், இந்திய அணித்தலைவர் டோனி 4ஆவது இடத்திலும் உள்ளனர். ரெய்னா 14ஆவது இடத்தில் உள்ளார். (ற)

## சூதாட்டத் தரகர்களிடம் பணம் பெற்றேன்

### திரிவேதி ஒப்புதல் வாக்குமூலம்



ஆறாவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நடைபெற்ற சூதாட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை சேர்ந்த ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கீத் சவான் ஆகியோர் ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காக டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அதில் சண்டிலாவை தவிர மற்றைய இருவரும் தற்போது பிணையில் விடுதலையாகி உள்ளனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவர் ராஜ் குந்த்ரா, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கௌரவ உறுப்பினர் குருநாத் மெய்யப்பன் ஆகியோரும் சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டிருந்தனர்.

அந்த சூதாட்ட வழக்கில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வேகப்பந்து வீரரான சித்தார்த் திரிவேதி அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். தொடரின் போது சூதாட்ட தரகர்கள் தன்னை அணுகி பணம் தர முயன்றதாகவும் தான் அதை ஏற்காமல் சூதாட்டத்தில் ஈடுபட மறுத்ததாகவும் திரிவேதி கூறி இருந்தார்.

அதைத் தொடர்ந்து டெல்லி பொலிஸார் இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக அவரைச் சேர்த்திருந்தனர். இந்நிலையில் சூதாட்ட தரகர்களிடம் ரூ.9 லட்சம் பணம் பெற்றதாக திரிவேதி தற்போது ஒப்புதலளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பொலிஸாரிடம் கொடுத்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில்,

''ஈடுபட சூதாட்ட தரகர்கள் எனக்கு ரூ.9 லட்சம் பணம் கொடுத்தார்கள். தீபக்சர்மா என்பவர் ரூ.3 லட்சமும், சுனில் பாட்டியா ரூ.6 லட்சமும் கொடுத்தனர். ரூ.9 லட்சம் பணத்தை வாங்கிய நான் அதைத் திருப்பி கொடுத்து விட்டேன்.

கடந்த ஆண்டு சூதாட்டத்தில் ஈடுபட்டு வீரர்கள் சிக்கி இருந்தனர். அந்த பயம் காரணமாகவே நான் அந்த பணத்தை திருப்பி கொடுத்து விட்டேன்'' என்று தெரிவித்துள்ளார்.

திரிவேதிக்கு 2010ஆம் ஆண்டு ராஜஸ்தான் றோயல்ஸ் முன்னாள் வீரர் அமித் சிங்குடன் தொடர்பு ஏற்பட்டது. சூதாட்ட தரகராக மாறிய அமித்சிங் சூதாட்ட வழக்கில் கைதானவர்களில் ஒருவராவார். இதேபோல் திரிவேதிக்கு பணம் கொடுத்த தீபக்குமாரும் கைதான தரகர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்துக்கு இந்தியா மண்டியிட்டது இலங்கை அணி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் இலங்கை அணியை 8 இலக்குகளால் வீழ்த்தி அசத்தலான வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது இந்திய அணி. லண்டன் கார்டிவ் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் டோனி இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதனையடுத்து திகலரட்ன டில்சானும் குசல பெரேராவும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம்புகுந்தனர். அணி 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பெரேரா வெறும் நான்கு ஓட்டங்களுடன் புவனேஸ்வர் குமாரின் பந்து வீச்சில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். இதனையடுத்து டில்சானுடன் குமார் சங்கக்காரவும் இணைந்து துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கையில் டில்சான் துரதிர்ஷ்டமாக மைதானத்தைவிட்டு ஓய்வுக்காக வெளியேறினார்.

இதனை அடுத்து களம்புகுந்த திரிமன்னேயையும் நீண்ட நேரம் நிலைத்து நிற்க விடாமல் 7 ஓட்டங்களுடன் பவிலியன் அனுப்பினர் இர்ஷாந் சர்மா. அவரைத் தொடர்ந்து 17 ஓட்டங்களுடன் சங்ககாரவையும் சர்மா விட்டுவைக்கவில்லை. இவர்களைத் தொடர்ந்து மஹேல ஜெயவர்தனவும், அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ்"ம் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இவ்விருவரும் 68 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த போது 38 ஓட்டங்களுடன் ஜெயவர்தன வெளியேற்றப்பட்டார். அடுத்து மத்தியூஸ்"டன் இணைந்த மெண்டீஸ் போதிய ஒத்துழைப்புக் கொடுக்க மத்தியூஸ் அரைச்சதம் கடந்தார். அவரும் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இலங்கையின் நிலை கவலைக்கிடமாகியது.

இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களை மட்டும் பெற்றது இலங்கை அணி. மெண்டீஸ் 25 ஓட்டங் களுடனும், டில்சான் 18 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காது இருந்தனர். இந்திய பந்து வீச்சுச் சார்பாக இர்ஷாந் சர்மா,அஸ்வின்ஆகியோர் தலா 3 இலக்குகளையும் புவனேஸ்குமார், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.



இதனையடுத்து 182 என்ற இலகுவான வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி சுஷிர் தவான் மற்றும் விராட் கேஹ்லி ஆகியோரின் அரைச் சதங்களின் உதவியுடன் 35ஆவது பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்ககளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இந்திய அணி சார்பில் ரோகிற் சர்மா 33 ஓட்டங்களையும், தவான் 68 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். விராட் ஹோக்லி ஆட்டமிழக்காது 64 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களுடனும் சுரேஷ் ரெய்னா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதனால் இந்திய அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை அணியைத் தோற்கடித்து இறுதிக்குள் பிரவேசித்தது. இலங்கை அணியின் பந்துவீச்சில் மத்தியூஸ், மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக இர்ஷாந் சர்மா தெரிவானார். நாளைமறுதினம் இடம்பெறும் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தும், இந்திய அணியும் மோதவுள்ளன. (400-23)

FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று
International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 22.06.13 Sat at 2pm.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).
: 24.06.13 Mon at 11am.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...

அலுவலகத் தளபாடங்கள் விற்பனைக்கு
யாழ். நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்று நவீனமயப்படுத்தப் பட்டதால் அதன் சில காலம் பாவித்த கணினி மேசை, Revolving Chairs, அலுவலக மேசைகள், Excecutive chairs, நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.
021 7904941
(38557) (10,7,16)

தரம் 6 முதல் O/L ற்கு
யாழ்.நகரின் No-01
எடிசன் அக்கடமி
கலட்டி, நல்லூர்
Science Paper Class
for
G.C.E O/L English Medium
By
Mr.Ragumar
ஆரம்பம் :- 22.06.2013 சனிக்கிழமை
கலட்டி எடிசன் :- சனி,ஞாயிறு பி.ப. 2.30 -3.30
நல்லூர் எடிசன் :- சனி,ஞாயிறு பி.ப 5.00 -6.00
* தரம் 10 அலகுகள் பூரண மீட்டல்
* கடந்த கால வினாக்களும் மாதிரி வினாக்களும்
* வெளி மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.
-நிர்வாகி

தேவை
விற்பனை பிரதிநிதிகள் தேவை
தொடர்புக்கு: 077 911 4705
(38552) (10,7,16)

அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவு ஆரம்பம்
22.06.2013
24.06.2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

வாகனம் வாடகைக்கு
TATA SuperAce, Original
அலுமினிய பொடியுடன் மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770776725
(38488) (10,7,16)



உங்கள் வசதிக்காக...
நாங்கள் இன்றிலிருந்து யாழ்ப்பாணத்தில்...
அபான்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
யாழ்ப்பாணக் கிளை
இல.221, மின்சார நிலைய வீதி,
(கீழ்த்தளம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 320 7686
தொ.நகல் : 021 224 1124
E.Mail : afslchu@abansgroup.com
(இலங்கை மத்திய வங்கியின் அனுமதிபெற்ற நிதிக் கம்பனி)
தலைமைக் காரியாலயம் :
இல.400, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பே : 0112 375531 - 3
தொ.நகல் : 0112 375517
web: www.abansfinance.lk
Abans FINANCE
ithayam

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் விசுவநாதர்



மாதகல் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் விசுவநாதர் 20.06.2013 வியாழக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிற்றம்பலம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் நாகமுத்து தம்பதியரின் மருமகனும் புஸ்பராணி (இளைப்பாறிய கிராமிய வங்கி முகாமையாளர்,பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்.), திருமதி இராசலட்சுமி இராஜசேகரம் (பிரதி அதிபர், யா/பண்டத்தரிப்பு, பெண்கள் உயர்தர பாடசாலை), திருமதி விஜயலட்சுமி (ஆசிரியை யா/கீரிமலை நகுலேஸ்வரா ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அ. பொன்னம்பலம்(இளைப்பாறிய கிளை முகாமையாளர் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), இ. இராஜசேகரம்(ஆசிரியர், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), விமலச் சந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, தெய்வானை, கந்தசாமி, பார்வதி(சிங்கப்பூர்), செல்லம்மா(மாதகல்), அன்னம்மா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளங்குமரன்(கனடா), காலஞ்சென்ற நர்மதா, நிவேதிதா ஆகியோரின் அன்புப் பேரனும், கஜந்தன், துவாரகன், ஹரிஸ்(கனடா), ரனூச்(கனடா), ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், செல்லத்துரை, நடராசா, இராமநாதன், சிற்றம்பலம், இரத்தினம்(சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், செல்லத்துரை, தங்கம், வேலுப்பிள்ளை(லண்டன்), நடராசா (மாதகல்), தம்பிப்பிள்ளை(மாதகல்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.06.2013) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00மணியளவில் மாதகல் போதி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] மாதகல். (38506) (17-7.16) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.